தாய்நாட்டிலிருந்தும், வேறுநாடுகளிலிருந்தும் வருகைதரும் அறிஞர்கள் பல சிறப்பான கருத்துக்களைத் தெரிவிப்பது இந்நாட்டில் வாழும் சைவத்தமிழ் மக்களுக்கு மிகுந்த பயனைக் கொடுக்கின்றது. இத்தகைய ஒரு பயனுள்ள மாநாட்டை ஒழுங்கமைத்து வருடந்தோறும் நடாத்தும் சைவத் திருக்கோயில் ஒன்றியத்தினருக்கும், விழா ஏற்பாட்டாளர்களுக்கும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். தொடர்ந்தும் இம்மாநாடு சிறப்பாக நடைபெற
எல்லாம் வல்ல ஸ்ரீசிவகாமி சமேத ஸ்ரீசிதம்பரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு
ஆட்சிக்குழுவினரின் சார்பில்

தர்ம இரவீந்திரமோகன்
கௌரவ பொதுச்செயலாளர்
*01-09-2009*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சைவப் பேரவை: பிருத்தானியக் கிளை
# WORLD SAIVA COUNCIL
U.K.BRANCH



**President, W.S.C. U.K. Branch: Sivath Thiru R Paramakumar**

| | | |
|---|---|---|
| Patron:<br>Yogananda Adikal<br>President and Chief Executive<br>World Saiva Council | 36, Ashness Gardens<br>Greenford<br>Middlesex<br>UB6 0RN<br>Phone: 0208 900 9201 | Swami Siva Nandhi Adikalaar<br>Founder<br>World Saiva Council |

It is with pleasure we learn that the Federation of Saiva Temples of UK is holding its 12th Saiva Conference on 12th and 13th September in London.

The 21st century London is multicultural with people from many faiths living and working alongside each other. Saivism's richness of spirituality and philosophy has enabled it to survive and flourish since the beginning of human civilization. Periya Puranam, which is the theme for this year's conference, reflects the richness of Saivism eloquently, underlining this with many examples of selfless devotion to Lord Siva. The Conference should help remind us of the richness that is inherent within Periya Puranam.

We wish the Federation of Saiva Temples of UK every success with their 12th Saiva Conference in London.

G Jeyaraj
Secretary, W.S.C. UK Branch

***OUR MOTO***
*A VISION WITHOUT A TASK IS BUT A DREAM ONLY*
*A TASK WITHOUT A VISION IS MERE DRUDGERY*
*A VISION WITH A TASK CAN ALONE CHANGE THE WORLD*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் உயர்வாசற் குன்று முருகன் ஆலயமும் அதன் நோக்கங்களும்.



பத்தொன்பதாம் நூற்றாண்டு தொடக்கம், பொருளாதார நிமித்தமாக வெளிநாடுகளில் வேலைதேடித், தமிழ்மொழியை தாய்மொழியாக கொண்ட, ஆயிரக்கணக்கானோர், தாய்மண்ணில் இருந்து புலம் பெயரத் தொடங்கினார்கள். அவர்கள் தாம் வாழப்புகுந்த அந்த மண்ணிலே தாய்மண்ணில் இருந்து வந்த தங்கள் பரம்பரைக் கலை, கலாச்சாரம், தமிழ்ப் பண்பாடு விழுமியங்களை பாதுகாத்து பேணிவளர்த்து அடுத்த தலைமுறைகளுக்கு அளித்து வந்தார்கள். காலப்போக்கில் அவர்களுக்கு பின்வந்த சந்ததியினர், அந்த நாட்டின் மொழியை கற்று வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்த நிலையில் தாய்மண்ணில் இருந்து அங்கு வாழ வந்த தம் மூதாதையர் கொண்டு வந்த தமிழர் பண்பாடுகள் அருகி மறையத் தொடங்கின மண்ணில் ஆலயங்கள் அமைத்து வழிபட்டு தமிழர் பண்பாடுகளை பேணிக் காத்தார்கள். காலத்தின் கோலத்தோடு ஒன்றி, தம்மை வாழவைத்த மண்ணின் மொழியை, உயர்கல்வி நிரந்தரமாக கற்று, அங்கு வாழ்ந்த மக்களின் கலாச்சாரங்களோடு இரண்டறக் கலந்தார்கள். இருந்தாலும் காலவெள்ளோடத்தோடு, அவர்கள் விட்டுச் சென்ற தமிழர் பண்பாடுகள் பல மறைந்து போக, நிலைத்து நின்ற சிலவற்றிற்கு விளக்கம் தெரியாமல் அங்கு வாழும் தமிழ் வம்சாவழியில் வந்தோர் இன்றும் கடைப்பிடித்து வருவது விந்தையன்றோ.

புலம் பெயர்ந்து மேற்படிப்புக்காகவும், தமது ஆராய்ச்சிகளுக்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் இம்மண்ணை நாடி வந்த தமிழ் மக்கள், பற்பல காரணங்களால் இங்கு நிரந்தரமாக குடியேற வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டன. இரண்டாம் உலக மகா புத்தத்தின் பிற்பாடு, பல நாடுகள், மொழி, மத இனவுணர்களுடன் விழிப்படைந்து சுதந்திரம் பெற்றுவிட்டன. திரைகடல் ஓடி திரவியம் தேட முற்பட்ட தமிழன் நிலை என்ன? தன் சொந்த தாயகத்தின் மண்ணை இழந்தான். தன் வேர்வையால், பிறரை வாழவைத்தே தமிழன், தனக்கென ஒரு நாடு இல்லாமல் அல்லல் படுகிறான். 1960 களில் இந்த மண்ணில் கல்வி கற்று வந்த, இலங்கை, இந்தியா, மொறிசீயஸ், பிஜீ, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா நாடுகளைச் சேர்ந்த சைவத் தமிழர்கள், பல்கலைக் கழகங்களிலும், பொது இடங்களிலும், பூங்காக்களிலும், வேலை ஸ்தலங்களிலும் ஒன்று கூடும் சந்தர்ப்பங்கள் பல அன்று ஏற்பட்டன. தங்கள் துர்ப்பாக்கிய நிலையை ஆராய்ந்தார்கள், சிந்தித்தார்கள். அப்படி சந்திக்கும் இடங்களில் சேர்ந்த மக்களை ஒன்று திரட்டி ஒரு இடத்தில் கூடவந்த பெருமை காலம் சென்ற பெரியோர், உயர் திரு. சபாபதிபிள்ளை ஐயாவையே சாரும். அவரால் ஒன்று சேர்க்கப்பட்டு இங்கு வாழ்ந்த சைவத் தமழ் மக்கள், தாம் தினமும் ஒன்று கூடி இயங்கி, தம் சொந்த மண்ணில் வாழும் நம் இனத்தவரின் கவலைகள், இன்னல்களைத் தீர்த்து ஒன்று கூடி இயங்கி, தம் சொந்த மண்ணில் வாழும் நம் இனத்தவரின் கவலைகள், இன்னல்களைத் தீர்த்து ஆலோசனைகள் வழங்க ஒரு பொது இடமும் ஒரு உத்தியபூர்வமான அமைப்பும் தேவையென உணர்ந்தார்கள். இந்த எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு, காலம் சென்ற சைவப் பெரியார் உயர். திரு. சபாபதிப்பிள்ளை ஐயா தலைமையில் 1966 ஆம் ஆண்டு இந்து மகாசபையை ஸ்தாபித்தார்கள்.

அடுத்து என்ன முயற்சிகளை எடுக்கலாம் என்பதை காலம் சென்ற பெரியோர் உயர். திரு. சபாதிப்பிள்ளை தலைமையில் கூடி கலந்து ஆலோசித்தார்கள். ஆன்மீக வாதிகளான தமிழர்கள், அழிந்து வரும் தமிழர் பண்பாடு, கலை, கலாச்சாரங்களை காப்பதற்கு சைவ ஆலயமே சரியெனத் தீர்மானித்தார்கள். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஒளவை மூதாட்டியின் மூதுரை முன்வைத்து, தமிழ் கடவுளாம் முருகனுக்கு, ஆலயம் அமைப்பதென முடிவெடுத்து அதற்கான ஒரு செயற்குழுவை தெரிவுசெய்து, உயர். திரு. சபாதிப்பிள்ளை ஐயா அவர்களை அதற்கு தலைவராக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டார்கள். ஆயட் கால அங்கத்தவர்களை சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு அதற்கான கட்டணமாக 100 பவுண்களை வசூலித்தார்கள்.

திரு. சபாதிப்பிள்ளை ஐயா இந்தியாவில் இருந்து தருவித்த, முருகன், விநாயகர், தெய்வ விக்கிரகங்களை செவ்வாய், வெள்ளி, வாரமுடிவிலும், சைவத் திருநாட்களிலும், தமிழர் வாழும் பல இல்லங்களுக்கு எடுத்துச் சென்று, அங்கு அபிசேக ஆராதனைகள் செய்து, தொடர்ந்து கூட்டுப்பிராத்தனை செய்து வழிபட்டார்கள். இங்கிலாந்தில் வாழ்ந்த சைவ தமிழ்மக்கள், பெரும்பாலும் வெள்ளி மாலையில் பெரும் அளவில் ஒன்று கூடி வழிபாட்டுகளில் பங்கெடுத்தார்கள். இவர்கள் ஒன்று கூட வாய்ப்பாக வாகனம், உணவு வசதி போன்றவற்றையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் சபாபதிப்பிள்ளையின் குடும்பத்தினரின் பங்கு அளப்பரியது. ஒரே கிராமத்தில் வாழ்பவர்கள் ஒன்று கூடவும், புதிய நண்பர்கள் ஒன்று சேரும் இடமாகவும் இவ்விடங்கள் விளங்கத் தொடங்கியது. மேல்நாடுகளில் வாழும் சைவத் தமிழ் மக்களை ஒன்று சேர்ப்பதே உள்நோக்கமாக கொண்டு தொடங்கப்பட்ட விடயத்தில் வெற்றியும் பெற்றார்கள்.

மதத்தால் ஒறுபட்ட மக்கள் அதிக அளவில் கூடத்தொடங்கியவுடன் இவ்வமைப்பை ஒரு அறக்கட்டளையாக மாற்ற எண்ணி, ஏழு அறங்காவலரர்களை முறைப்படி தெரிவு செய்து, இந்து மாசபை இருந்த அமைப்பு 1976 ஆம் ஆண்டு ஒரு அறக்கட்டளையை உருவாக்கியது. இதுவே மேற்குலகில் பரந்து வாழும் சைவ தமிழ் மக்களுக்காக உருவாக்கப்பட்ட முதல் தமிழ் மக்கள் அமைப்பு, இவ்வமைப்பு இன்று ஆலயம் அமைந்திருக்கும் உயர்வாசற் குன்றை வாங்கி, அக்கட்டிடத்தின் கீழ் தளத்தை ஆலயமாக்கி, 1979 ஆம் ஆண்டு குடமுழுக்கு செய்து தினமும் எல்லோரும் வந்து வழிபட வசதிகள் செய்யப்பட்டது. அதே வேளையில் இரண்டாவது மேல் தளத்தில் சைவ ஆகம முறைப்படி தமிழ் கடவுளாம் முருகனுக்கும் பரிவார மூர்த்திகளும் ஆலயம் அமைத்து 1986 ஆம் ஆண்டு கும்பா அபிஷேகம் செய்யப்பட்டது. இன்று தினமும், ஆறு மணிக்கு ஆலயக் கதவுகள் திறக்கப்பட்டு, அதிகாலை 6.15 மணிக்கு உதயப் பூசையும் பின்பு காலை 8 மணிக்கும், அதைத் தொடர்ந்து 11.30 மணிக்கு மதியப்பூசையுடன் 2 மணிக்கு மடை அடைக்கப்பட்டு, பின்பு மாலை திறக்கப்பட்டு, ஐந்து மணிக்கு சாயங்காலப் பூசையும், இரவு எட்டு மணிக்கு பூசையும் நடைபெற்று, பத்து மணிக்கு ஆலயத் திருக்கதவுகள் திருக்காப்பிடப்படுகின்றன.

உயர் வாசற் குன்று ஆலய அமைப்பின் நோக்கம் இந்த நாட்டில் வாழும் மக்களின் தமிழ் சைவ கலை, கலாச்சாரம், தமிழர் பண்பாடுகளை, விழுமியங்களை மட்டும் பேணிக்காக்க உருவாக்கப்பட்ட அமைப்பு அல்ல, மொழியால் ஒன்று பட்ட தமிழன் கடல்கடந்து எந்த மூலையில் வாழ்ந்தாலும், அவன் இன்ப துன்பங்களில் பங்கேற்று, அவன் வாழ்வை மலரச் செய்வதே இதன் கொள்கையாகும். சைவ ஆலயமாக இருந்தாலும், மதம் ஒரு தடைக்கல் அல்ல. 'நாம் தமிழர்' என்ற கொள்கையை அடிப்படையாக கொண்டு உலகெல்லாம் மனிதநேயம் மலர்ந்து மக்கள் வாழ வழிஅமைக்கும். தமிழர் உறவுப் பாலமாக அமைவதே இவ்வமைப்பின் குறிக்கோள், எழு ஆயுட்கால அறங்காவலர்களைக் கொண்ட, இந்த அமைப்பின் கீழ், அதிகார ஆலோசனை சபை, நிறைவேற்று குழு, கட்டிட நிர்மான அமைப்புச் சபை, கல்வி சமய கலாச்சார அமைப்புக்களுள், இதன் அங்கமாக இயங்குகின்றன. அங்கம் வகிப்போர்க்கான தேர்வுகள், முறைப்படி வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் மூலம் வருடம் தோறும் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

இந்த அமைப்புக்கள் மாதம் ஒருமுறையாவது கூடி தமிழர் நல்வாழ்வுக்கான பல விடயங்களையும், ஆலயத்தால் அவற்றிற்கு எப்படி உதவ முடியும் என்பதையும் ஆராய்ந்து செயற்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் இலங்கையில் அல்லல்பட்ட தமிழ் அகதிகளுக்காக பணமும், நிவாரணப் பொருட்களும் சேர்த்து அனுப்பிவைக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு சுனாமி தாக்கிய பொழுதும் பின்பு 2009 ஆண்டு காலநிலையால் அகதிமுகாம்களில் வாழும் மக்களுக்காக கவலை ஈப்பு நிதி, வணங்காமுடிக் கப்பலில், வன்னி அகதி முகாம்களில் வாழும் மக்களுக்காக, மருந்து, உணவு, அத்தோடு நிதியும் சேகரித்து அனுப்பி வைத்தோம். மேலும் இலண்டனில் தொடர்ச்சியாக நடைபெற்ற கவலை ஈப்பு அகிம்சைப் போராட்டத்தின் பொழுது மதிய உணவை தொடர்ச்சியாக அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து மனித நேயப் பணிகளில் தோள் கொடுத்து துணைநின்றோம். மலேசிய மண்ணில் வாழ்ந்த தமிழ் மக்கள் துன்புறுத்தப்பட்ட பொழுது, அவர்களுக்கு பக்க பலமாக நின்று எம் ஆதரவை வழங்கினோம். இலங்கையில் வறுமைகோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மக்களின் பிள்ளைகள் பல்கலைக்கழக படிப்பை பெறுவதற்கு, வசதியும் வாய்ப்பும் அளிக்கும் முகமாக அவர்களின் பெயர்களை திரட்ட ஒரு குழுவை அமைத்து, அக்குழு தெரிவு செய்த மாணவர்களின் நிலைகளை சரிவர ஆராய்ந்து, உபகாரச் சிந்தையுடையோர்க்கு அனுப்பி அவர்களை கொண்டு மாணவர்களின் படிப்புச் செலவை ஏற்கச் செய்து வருகிறோம்.

இன்று இவ்வாலயம் பல நெருக்கடிகளை சந்தித்து வருகிறது, அதில் முக்கியமானது நிதி, ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அருகி வருகிறார்கள். தொடங்கப்பட்ட காலத்தில் எல்லோரும் வந்து போவதற்கு ஏற்ற போக்கு சுலபமான இடமாக இவ்விடம் இருந்து. இன்று இவ்விடம் போக்குவரத்துக்கு, வாகனங்கள் வந்து தரிப்பதற்கும் ஏற்ற இடமாக அமையவில்லை. மேலும் இலண்டனிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் நாளுக்கு நாள் புதுப் புது ஆலயங்கள், வெவ்வேறு நோக்கங்களுக்காக அமைக்கப் பெற்று வருகின்றன. மக்கள் தங்கள் வசதிகளை உத்தேசித்து தமக்கு அருகாமையில் உள்ள ஆலயங்களுக்கு சென்று வழிபாடுகளை செய்து வருகிறார்கள். இவ்வாலயத்தின் கட்டணங்கள் மற்றைய ஆலயங்களின் கட்டணங்களை விட மிகக் குறைவாக இருந்தபொழுதும் காலநிலையை, போக்குவரத்துகளை, உத்தேசித்து பக்தர்கள் வருகை மிகவும் குறைந்தே வருகிறது. 1983ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற தமிழ் இனக்கலவரத்தின் பின்னால் புலம் பெயர்ந்த மண்ணில் பல ஆயிரக்கணக்கில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்கள், சென்ற இடமெல்லாம். தமிழ் கலாசாரத்தை வளர்க்க பல பல அமைப்புக்களை உருவாக்கி இயங்குவதால் இவ்வாலயத்திற்கு மிகப் பெரிய தாக்கம் இன்று ஏற்பட்டுள்ளது. இன்று இவ்வாலயம் மற்றைய வருமானங்கள் மூலம் தான் இயங்கி வருகிறது.

ஆலயத்துக்கு வழிபடவரும் பக்தர்களுக்கு உதவிசெய்யும் பொருட்டு தரமான பூசைப்பொருட்களையும், மற்றைய இதர பொருட்களையும் மொத்த விலையில் பெற்று குறைந்த விலையில் உபயகாரர்களுக்கு வழங்கி வருகிறோம். ஆத்ம சாந்தி வழிபாடுகளில் ஈடுபடுவோருக்கு வசதியாக, ஆலய மண்டபத்திற்கு வெளியே பெரிய சிவலிங்கம் ஒன்றை எழுந்தருளச் செய்துள்ளோம். அவ்வழிபாடுகளில் கலந்து கொள்வோருக்கு, உணவு பரிமாற ஆலய மத்திய மண்டபத்தை இலவசமாக அளித்து வருகிறோம். ஆலய தரிசனத்திற்கு வரும் அடியார்களின் பாவனைக்காக 30 வாகனத் தரிப்பிடங்கள் ஆலயத்தின் முன் பகுதியில் அமைந்துள்ளது. 350 பேருக்கு மேல் கலந்து சிறப்பிக்கும் வகையில் கீழ் திருமண மண்டபத்தை, ஆலயக்குருக்கள், மற்றும் இதர வசதிகளும், அலங்காரங்களுடனும், 350 க்கு மேற்பட்ட ஆசன வசதிகளுடனும் மிகக் குறைந்த அன்பளிப்புடன் அளித்து வருகிறோம். ஆலயத்திற்கும் அடியார்கள் பயன் பெறும் வகையில் நூல் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயம், மனித நேயத்துடன் எல்லோரும் எல்லாமும் பெறும் வகையில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இன்று ஆலயம் வன்னி முகாம்களில் அவதிப்படும், தமிழ் மக்களின் நலன் காக்கும் பணிகளில் ஈடுபட்டு, ஆலய மகோற்சவம் முதற்கொண்டு எல்லா வழிபாடுகளையும், ஆடம்பரமின்றி, அமைதியான முறையில் நடாத்திவருகிறது.
'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்' என்று சாற்றுகிறது திருமந்திரம் அதன் வழி நடக்க நாம் முயல்வோம்.

**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.**

நன்றி
வணக்கம்

**அ. வயிரவமூர்த்தி**
தலைவர்
உயர் வாசற்குன்று முருகன் ஆலய அறக்கட்டளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SRI RAJARAJESWARY AMMAN TEMPLE

## ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயம்

Parasakthi Hindu Temple Trust
No 4 Dell Lane, Stoneleigh, Surrey KT17 2NE
Tel: 020 8393 8147

**Trustees**

**Chairman**
R.Kunasingam

**Vice Chairman**
Mrs.V.Sritharan

**Secretary**
Dr.S.Srirangalingham

**Treasurer**
Mrs.S.Vinayakamoorthy

**Bankers**
Natwest Bank
16 Wimbledon Hill Road
Wimbledon
London SW19 7ZD

**Solicitors**
Wimal & Co
727B London Road
Thornton Heath
Surrey CR7 6AU

ஓம்

சிவமயம்

பிள்ளையார் துணை



## சைவமும் தமிழும்

சைவமும் தமிழும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ளன. அவைகள் ஒன்று வளர, மற்றதும் உடன் வளர்ந்து நிற்கிறது. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய, சமய குரவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள், அழிந்து போக இருந்த, தமிழையும், சைவத்தையும், தமிழர் பண்பாடுகளையும், ஏழாம் நூற்றாண்டில் அவதரித்து தமிழையும் சைவத்தையும் காத்த, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரை 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்' என்று நன்றியுடன் நினைவுகூர்ந்தார். மிகப் பழையதும் பொருள் செறிவுடையதுமான 'தொல்காப்பியம்' போன்ற ஓர் இலக்கண நூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்ற வேண்டுமானால், அதற்கு முன் இம்மொழி பல சிறந்த இலக்கியங்களைப் பெற்றுத் திகழ்ந்திருக்கவேண்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே சரித்திரம் தோன்றுவதற்கு முன்னரே, தமிழும், தமிழர் நாகரீகமும் வளர்ந்து, பல பண்பாட்டு இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட தமிழ்மொழியும், தமிழர் பண்பாடுகளும் இன்று வரை நிலைத்து நிற்கவேண்டுமானால், அதற்கு காரணம் சங்க இலக்கியங்களே. ஒரு இனத்தின் நாகரீக மேம்பாட்டை, உள்ளபடியே எடுத்துக்கூறும் இலக்கியங்கள் அம்மொழியில் உண்டாகியிருந்தபடியால் தான், உலகில் காலத்துக்கு காலம் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து தமிழ் மொழியும், அதன் கலை கலாச்சாரங்களும், அம்மொழியைப் பேசும் மக்களால் காப்பாற்றி இருக்கமுடியும்.

கலைகள் அனைத்துக்கும் அடிப்படையாகவும் ஆதாரமாகவும் மூலமாகவும் அமைந்திருப்பது அதன் உயிர்துடிப்பே. ஒரு மனிதனுடைய உள்ளத்தில் அவனைச் சுற்றிக் காணப்படும் உயிர்த் துடிப்பும், அதனால் உண்டாகும் எண்ணற்ற உணர்ச்சிகளும், அவனுக்கு வாழ்வில், பற்பல அனுபவங்களை தருகின்றது. பல சமயங்களில், அவனில் உண்டாகும் உணர்ச்சிகளின், வெளிப்பாடக வரும் இன்பம், துன்பம், மகிழ்வு, நன்றியுணர்வு, வியப்பு, அச்சம், மருட்சி, தெளிவு ஆகியவை, வெவ்வேறு அல்லது தனித்தனி உணர்ச்சியாகவும், அமையாமல், உணரச்சிக் கூடாகவும், அனுபவக் குவியலாகவும் தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ளதால், தமிழ்மொழி நிலைத்து உலகில் நீடித்து நிற்கிறது என்று கூறலாம். 'தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு சூழ்கலை வாணர்களும் இவள் என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினை' உடையது தமிழ் மொழி. இந்திய துணைக்கண்டத்தில், தென் கோடியில், 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை'யுள்ள நிலப்பரப்பில், வாழ்ந்த, வாழுகின்ற மக்கள் பேசும் மொழி தமிழ் மொழி. சங்க காலத்திலும், அதற்குப் பிறகு இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்திலும் கூட, தம் சமயத்தை உயர்த்திப் பேசுதலும், பிற சமயத்தைத் தாழ்த்தி பேசுதலும் காணப்படவில்லை. சமயத்தைப் பரப்ப இலக்கியத்தை கருவியாகச் செய்தவர், புத்த மத காப்பியத்தைப் இயற்றிய சாத்தனார் ஆவார். தம் சமயமான பௌத்தைப் பரப்பும் முக்கிய நோக்காக கொண்ட சாத்தானார், பிற சமயங்களை பழித்தும், குறைத்தும் பேசும் நிலைமையை ஏற்படுத்தினார்.

இரண்டாம் நூற்றாண்டுக்கு பின் தோன்றிய, மணிமேகலை, புத்த மதத்தை பரப்ப தோன்றிய நூல்போல், பத்தாம் நூற்றாண்டில் சமணத்தை பரப்ப சிந்தாமணி என்னும் காப்பியமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாடு தொன்மையே நன்மைமிக்க சமயநெறியை கைக்கொண்டுள்ள தமிழ் இன மக்களைப் கொண்ட நன்னாடகும். இந்நாட்டில் வாழ்ந்த மக்களின் தனித் தமிழ்ச் சமயம் சைவமேயாகும். இச்சைவசமயம் தமிழ்மக்களுக்கு ஒரு பொதுப் பெருநெறியாகவும், உலக்கு ஒரு பொது நெறியாகவும் திகழ்கிறது. கி.பி இரண்டாம் ஆண்டு தொடக்கம் ஏழாம் நூற்றாண்டு ஆண்டு வரை தமிழ்மண்ணின் ஒரு இருண்ட காலம். இக் காலத்தில் தமிழ் மொழியல்லாத வேற்று மொழி பேசும் இனத்தினர் இம்மண்ணை ஆண்டனர். அக்காலத்தில் பௌத்தமும், சமணமும் இம் மண்ணில் வேரூன்றப்பார்த்தன. இந்த நிலையில் ஏழாம் நூற்றாண்டில் அவதரித்த, திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சமயப் புரட்சியின் தலைவர்களாக விளங்கினர். சைவசமயத்தை பழைய நிலைக்கு கொண்டு வர தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டனர். அதற்கு துணையாக தங்கள் நெறியான வாழ்கையை, தம் அருஞ் செயல்கள் என்பனவற்றோடு, தம்மால் புனையப்பட்ட கவிதைகளையும் ஒரு உறுகருவியாகப் பயன்படுத்தினர். இவர்கள் பாடிய கவிதைகள் இறைவன் புகழ் பாடும் தேவாரப் பதிகங்களாகவும், இசையோடு கூடிய பக்திப் பாடல்களாவும் திகழ்கின்றன.

இவ்வுலகைப் பொறுத்த வரை இலக்கியங்களிலும் மக்கள் வாழ்விலும் மிகுதியாக காணமுடியாது ஒன்று இறை பக்தியாகும். ஒரு கவிஞன் தான் எடுத்துக்கொண்ட எந்தப் பொருளிலும், ஆழ்ந்து அனுபவித்த பிற்பாடே தன் அனுபவத்திற்கு மெருக்கூட்டி கற்பனையாக வடிக்கிறான். தமிழில் தேவார திருவாசங்களைத் தவிர ஏனைய இலக்கியங்கள், பக்தி சுவை நிரம்பியது அல்ல. எனவே தேவார திருவாசகங்கள், தெய்வச் செந்தமிழை உடலாகவும், சிவநெறியை உயிராகவும் வைத்து இவை நிலவுகின்றன. செந்தழிழ் மொழியின் உயிரெழுதுக்கள் பன்னிரண்டு. உயிரெழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள், குற்றெழுத்துக்கள் என இரண்டாக வகுப்பர். நெட்டெழுத்துக்கள் ஏழும், குற்றெழுத்துக்கள் ஐந்துமாக சேர்ந்து பன்னிரண்டு. இதேபோல் திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றில் சம்பந்தர், அப்பர், சுந்தரா் அருளிச்செய்த தேவாரங்கள் முதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளது. மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவையார், எட்டாம் திருமுறையாகவும், மேலும் ஒன்பதிமர் பாடிய பாடல்கள் ஓன்பதாம் திருமுறையாகவும், திருமூலநாயனார் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், பதினொரு மெய்யடியார்களும், ஆலவாய்பெருமானும் பாடி அருளியது பதினொராம் திருமுறையாகவும், சேக்கிழார் சுவாமிகள் பாடிய பெரிய புராணம் பன்னிராண்டாம் திருமுறையாகவும் சேர்க்கப்பட்டு, திருமுறைகள் பன்னிராண்டாகவுள்ளது. சமயகுரவர் அருளிச்செய்த தேவார திருவாசங்களை நோக்குங்கால் அவை முறையே, நற்றவ நன்நெறி நான்மை யாகிய 'சீலம், நோன்பு, செறிவு, அறிவு' என்பதைக் குறிக்கும்.

'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்' அவதரித்தவர் திருஞானசம்பந்தர். அவரின் சரித்திரத்தை *1253* பாடல்கள் மூலம் தெளிவுற எமக்கு சேக்கிழார் பெருமான் தந்துள்ளார். சேக்கிழார் உள்ளத்தில் வேரூன்றிய தமிழ்பற்றுக் காரணமாக அன்று ஞானசம்பந்தன் இத்தமிழ் இனத்தை காப்பாற்றவில்லையானால் தமிழர் நாம் என்று கூறிக் கொள்ள ஓர் இனம் இல்லாது போய்யிருக்கும் என்ற உண்மையை எமக்கு விளக்கியுள்ளார். வேற்றவர் ஆட்சியில், பொருளற்று, வறுமையும், இகழ்ச்சியும் உற்று, அல்லல்பட்ட தமிழ் இனத்தை, வீறுகொண்டு எழச்செய்து பக்தி மார்க்கத்துக்கு அழைத்துச் சென்றவர் காழி வேந்தன் ஞானசம்பந்தன் அல்லவோ. தான் பாடும் பாடல்கள் தோறும் திருஞானசம்பந்தர் தம்மை 'பெருகிய தமிழ் விரகினன், தமிழ் விரகன், நற்தமிழுக்கு இன்துணை ஞானசம்பந்தன், தழிழ் ஞானசம்பந்தன், காழியர் கோன்' என்று கூறி, தூங்கிய தழிழினத்தைத் தட்டி எழுப்பிய வீரத் தமிழன் அன்றோ அவர்.

பெரிய புராணத்தின் கதாநாயனாக திகழும் சிறந்த சிபக்தராகிய சுந்தரமூர்த்தி நாயனாருக்கு தமிழ் இனப்பற்றை தூண்டியர், தமிழ் இனப் போரை வெற்றியுடன் நடாத்தி வழிகாட்டிய திருஞானசம்பந்தரே ஆவார். மேலும் சைவத்தை வளர்க்க போந்த சேக்கிழார், சின்றின்பமே கதியென தூங்கிக் கிடந்த தமிழ் மக்களை, பன்னிரண்டாம் நூற்றாண்டில், பெரியபுராணம் என்னும் பக்தி சுவை மிக்க காப்பியத்தைப் பாடி தமிழ் இன அழிவினின்றும் காப்பாற்றினார். அடியார்களின் வரலாறுகளை திரட்டி தில்லை சென்ற சேக்கிழாருக்கு, 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுத்தார் தில்லைக் கூத்தர் ஆன எம்பிரான். இறைவனின் அருள்பாலிக்கும் ஆட்சியை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பியம் முழுவதும் மணம் வீசச் செய்த சேக்கிழார், இக் காப்பியத்தை பூரணமாக்கும் பொழுதும் 'உலகெலாம்' என முடித்துள்ளார். தமிழர் தேசியம் என்பது குறிகிய மனப்பான்மை உடையது அன்று. எல்லா வரம்புகளையும் கடந்து சாதி, சமய முதலிய போலிக் கொள்கைகளைக் களைந்து நிற்கிறது. இதை தமிழர் இனப்பற்று குற்றிய காலத்தில் துணிச்சலுடன் பாடி அரங்கேற்றிய பெருமை சேக்கிழார் சுவாமிகளையே சாரும். பெரிய புராணம் தமிழர் பண்பாட்டு சைவக்காவியம் என்பதில் எவருக்கும் ஐயமில்லை.

அதற்குப் பின் 16 நூற்றாண்டில் அவதரித்த முருகப் பெருமான் பக்கதரான அருணகிநாதர், இந்து மதக்கடவுகளை எவ்வழியில் முருகனுக்கு உறவென்று காட்டி, இந்து ஆலயங்களுக்கு தலயாத்திரை செய்து 16 ஆயிரத்துக்கு மேல் திருப்புகழ் பாடி தழிழையும் சைவத்தையும் வளர்த்தார். ஆனால் அவர் பாடிய பாடல்களில் இன்று 1600 பாடல்கள் வரை கிடைத்துள்ளது. திருப்புகழில் வேதத்திலுள்ள நுண்மான் பொருள்களும், ஆகமங்களிலுள்ள அரிய கருத்துக்களும், புராணங்களிலுள்ள அறநெறிகளும், இசைத் துறைகளும், ஓசை நயங்களும், தாளகதிகளும், திருப்புகழில் ஒருசேரக் குவிந்திருக்கின்றன. இவைகளை உற்று நோக்கும் பொழுது சைவமும் தமிழும் ஒன்றையொன்று பற்றி வளர்ந்துள்ளதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

சைவ ஒன்றியத்தில் இணைந்து, சைவத்தையும், தமிழையும், தமிழர் பண்பாட்டு விழுமியங்களையும், புலம் பெயர்ந்த மண்ணில் காப்பாறிவரும் ஆலயங்களில், தென்மேற்கில், ஸ்ரோலி பதியில், எழுந்தருளி ஸ்ரீ இராஜராசேஸ்வரி அம்பாள், தன்னை நாடி வரும் பக்கத்தர்களுக்கு தினமும் அருள்பாலித்த வண்ணம் உள்ளாள். இங்கு தினமும், பூசைகளின் பொழுது பஞ்சபுராணமும், திருப்புகழும் இசையோடு பாடப்படுகிறது. இந்த மண்ணில் வாழும் இளம் தலமுறையினரின் நலன் கருதி மகோற்சவ காலங்களிலும், நவராத்திரி காலங்களிலும், அவர்களை ஊக்குவிக்கும் வண்ணம், அவர்களின் கலை நிகழ்ச்சிகளுக்கு முதன்மை இடம் அளித்து கௌரவித்து வருகிறோம். வார நாட்களில் தேவார வகுப்புகள் நடாத்துவதற்கும், இளம் கலைஞர்கள் இசைத்துறையில் பயிற்சி பெற நாம் அவர்களிடம் இருந்து எதுவித எதிர்பார்புகளுமின்றி உதவிசெய்து வருகிறோம். தழிலும் சைவமும் இம்மண்ணில் வேரூன்றி தழைத்தோங்க எம்மால் இயன்ற உதவிகளை நாம் என்றும் நல்குவோம்.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகெல்லாம்'

நன்றி

வணக்கம்

இ.குணசிங்கம்

அறங்காவலர் சபைத் தலைவர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் கோயில் அறங்காவலரின் அன்பு வேண்டுகோள்

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" எனும் எமது மூதாதையரின் அருள் வாக்கிற்கு அமைய எமது மொழி, கலாசாரம், மரபுகள் பேணும் ஒரு கலைக்கூடமாக மனிதனின் ஒழுக்க நெறியை சீர் படுத்துகின்ற ஆ + லயம். ஆன்மாவை லயப்படுத்தி ஒருநிலைப்படுத்த இலண்டனில் சைவ சமய ஆர்வலர்களால் ஆரம்பிக்கப்பட்ட இலண்டன் சிவன் கோயில் கடந்த 16 ஆண்டுகளாக அருளாட்சி புரிந்து வருகின்றது. இறையருளின் பாங்கு சிறந்தோங்கிட, அருள்தந்திட இறையருள் கட்டளைப்படி, ஆகமமுறையான "கருங்கற் கோயில்" அமைத்திட திருவருள் பூரணமாக கிடைத்திருக்கின்றது அதற்கான சகல பணிகளையும், துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர் அறங்காவலர் குழுவினர். இதற்கான அஸ்திபார அங்குரார்ப்பண வைபவ விழா 23.08.2009 ஞாயிறு இனிதே நடந்தேறியது. விநாயகர், முருகன், மஹாவிஷ்னு, நடராஜர், வசந்த மண்டபம், நவகிரஹம், வைரவர், கொடித்தம்பம், சமயசீராளர்கள் அறுபத்திமூவர், பரிவார மூர்த்தங்களாக சூழ்ந்திட கருவறையிலே, அண்ணாமலையார் சிவனும், தனி ஆலயமாக உண்ணா முலைஉமையும் எழுந்தருள. 31 அடி உயரமுள்ள 5 தள ராஜ கோபுரமும் அமையவுள்ளது.

இப்பெரும் திருப்பணிக்கு அடியார்களின் நிதி பெரிதும் தேவையாக அமைகின்றது சைவ சமயத்தவர்களாக பிறந்த எமக்கு சைவத்தின் முழுமுதற் தெய்வம் சிவபிரானுக்கு கருங்கல்லினால் கோயில் அமைக்கும் அற்புதப் பணி கிடைத்திருக்கின்றது. இதை ஒவ்வொரு குடும்பமும் உணர்ந்து செயற்பட வேண்டும். அனைத்து மக்களின் பங்களிப்பும் இந்த ஆலயத்திற்கு அமைய வேண்டும். என்கின்ற எண்ணக்கருவில் ஒரு சதுர அடிக்கு £500 என்கின்ற நிலையிலே திருப்பணி நிதியைக் கோருகின்றோம். முழுமையான ஒரு சிவாலயம் அமைந்த பெரும் புண்ணியம் நம் அனைவரையும் சேர்ந்திட வேண்டும். இலண்டன் சிவன் கோயில் சமயப் பணிகளின் ஊடாக சமூக, கலாசார பணிகள் மேம்படவும் செயலாற்றுகின்றது. ஈழத்தில் சிவன் இல்லம் சமூகத்திற்கு சமய, மொழி, கலாச்சார வகுப்புக்கள். இலவசமாக நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. நல்ல பணிகள் நலமுடன் அமைய உங்கள் அனைவரின் ஆதரவும், வாழ்த்தும் நிறைவாக கிடைக்கும் என்கின்ற நிலையில் ஐயமில்லை.

**"தென்னாடுடைய சிவனே போற்றி, என்னாட்டவர்க்கும் இறவா போற்றி"**
**இலண்டன் சிவன் கோயில் அறங்காவலர் சபையினர்**




Sri Annamalaiyar Temple Complex,Lewisham,London. Rajagopuram Front Elevation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணத்தின் பெருமை



முனைவர். சா. அரங்கசாமி, கோபி

## 1. முன்னுரை

சிவசமயம் கி.மு. 22,000 முதல் வரலாற்றில் இடம்பெற்ற பெருமை கொண்டது. சிவ சமய வரலாற்றுக் களஞ்சியமாக இயங்குவது 12ஆம் திருமுறையாகிய திருத்தொண்டர்மார் கதை என்னும் பெரியபுராணம். பெரியபுராணம் தமிழ்ப் பக்திஇயக்கக் கருவூலம், தமிழர் கண்ட மெய்யியல் நோக்கில் அமைந்து சித்தாந்தத்தின் செழுமை காட்டும் காவியம். ஆதன் சிறப்பியல்புகள் எண்ணில் அடங்கா. முதல் மூன்று திரு முறைகள் சம்பந்தர் அருளியவை. அடுத்துவரும் மூன்றும் அப்பர் பாடியவை. ஏழாம் திருமுறை சுந்தரர் தந்தது. எட்டாவது மணிவாசகரின் திருவாசகம். அதன் பின்னர் ஒன்பதின்மர் பாடியது ஒன்பதாம் திருமுறை. சிவசமய மந்திர நூலாம் திருமந்திரம் பத்தாம் திருமுறை. பின்னர் பதினொருவர் பாடியது பதினொராந் திருமுறை. நிறைவான 12 ஆந் திருமுறை தெய்வப் புலவர் சேக்கிழார் அருளியவை. தமிழில் உயிர் எழுத்துக்கள் 12 மெய்கண்டாரின் சிவஞான நூற்பாக்கள் 12. பெரியபுராணம் 12 ஆம் திருமுறை என்பதை நோக்க இதன் அருள் நிலை (முருகனின் வடிவம்) புலப்படும். அப்பெருமைகளுள் சிலவற்றை ஈண்டு காண்போம்.

## 2. சேக்கிழாரின் தனிப்பெருமை

“பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய புலவர் சேக்கிழார்” என்று அடியார்களால் போற்றப் பெற்றவர் சேக்கிழார். உலகளாவிய சோழப் பேரரசின் தலைமையமைச்சராய் இலங்கிய சேக்கிழார் தண்டமிழ் முழுதுணர்ந்த தகைகால் பெரியவர், என்பதை அவர் முதலமைச்சர் ஆன வரலாறு காட்டும். ஒருமுறை மன்னனைக் காணச் சென்ற சேக்கிழார் அவன் சிந்தாமணி என்னும் சமணக் காமக்காரியத்தை படிக்கக் கண்டு விளக்கம் கேட்க, மன்னவன் இத்தகு காவியம் சிவசமயத்து உண்டா? என்றான். உடனே தனது பெருமைமிக்க பதவியைத் தூசெனத் தள்ளி விட்டுத் தில்லையம்பலம் சேர்ந்தார். பொன்னம்பலத்து ஈசன் மகிழ்ந்து உலகெலாம்” என்று அடியெடுத்து தந்தான். இச்சொல்காவியத்தில் முதல் இடைகடை எனவிடத்தும் வசப்பாடினார்...
சேக்கிழார் தாம் பாட பாத பக்தி நலம் மிக்க இக்காவியத்தை காப்பியக் கட்டுக் கோப்புடன் படைக்க எண்ணினார். எனவே தமக்குமுன் சிவனடியார் வரலாற்றைப் பாடியவரும் திருத்தொண்டத் தொகை தந்தவருமாகிய சுந்தரரைக் காப்பியத் தலைவர் ஆக்கினார். நம்பியாண்டர் நம்பிதந்த திருவாத்தாதியும் இக்காப்பியம் மலரத் துணை செய்தது.

சேக்கிழார் ஈடு இணையற்ற சிறப்பினை இக் காவிய அரங்கேற்றத்தால் அறியலாம். எந்த மன்னன் சிவசமயத்தில் காப்பியம் உண்டா? என்று கேட்டானோ அவனே தெய்வப் புலவர் சேக்கிழார் தம் காப்பியச்சுவடிகளைத் தம்பட்டத்து யானை மேல் சேக்கிழாருடன் அமரவைத்துத் தானே தன் திருக்கையால் அவர்க்குக் கவரிவீசி வந்தான் என்பதால் சேக்கிழார் பெற்ற தெய்வப் பெருமை புலப்படும்.

## 3. காப்பியத் தலைவர் சுந்தர்

ஒரு சிறந்த காப்பியம் என்றால் ஓர் ஒப்பற்ற தலைவர் வேண்டும் என்பர். அத்துடன் நாடு நகர் வருணனைகள், மனம் புணர்தல், போர்மேற் செல்லல் போன்ற நிகழ்வுகளும் வேண்டும் என்பர். இவை பிற்காலத்து வழக்கு என்றாலும் இவை யாவும் சுந்தர் வாழ்வினில் பொருத்தமாக அமையக் காணலாம். சுந்தார் காப்பியத் தலைவராக இலங்கப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சில :

1. சுந்தர் தப்பிரான் தோழர் என்ற பெருமை பெற்றவர்.
2. அவரே இக்காவியக் கருவினைத் தந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மன்னர் வீட்டில் மன்னர் திருவுடன் வளர்ந்தவர்.
4. அடியார்களைப் போற்றும் பக்தி மனம் படைத்தவர்
5. சாதிகுலம் பிறப்புப் பாராமல் அடியார்க்கு அடிமை பூண்டவர்
6. திருமணம் செய்யக் கூடாத கன்னிகையர் குடிப்பிறந்த (பரவையானாத்தமிழ்க்) காதல் வழிநின்று மணந்த புரட்சியாளர்.
7. முன்னமே செய்த வினைப் பதிவு காரணமாகத் தாழ்ந்த குடிப்பிறந்த (வேளான் குடிப் பிறந்த) சங்கிலியாரையும் மணந்தவர்.
8. அதனால் நேர்ந்த பிழையால் அறக் (கருதிக்கள்) இழந்தவர்.
9. குண்டையூர்க்கிழார் தந்த நெல்மணிகளை அனைவருக்கும் வாரி வழங்கியவர்
10. அடியார்க்கும் அடியேன் என்றும் அப்பர் கைத்தொண்டு செய்த மண்ணைக் காலால் மிதியேன் என்று கூறும் பக்தியுள்ளம் படைத்தவர்.
11. சேரமான் பெருமானை நட்புக் காரணமாகக் கயிலைக்கு அழைத்துச்சென்றார்.
12. தமிழ் நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்து சிவசமயம் வளரப் பக்திநலம் சிறந்தே தேவாரம் பாடியவர்.

எனவே சேக்கிழார் பெருமான் சுந்தரர் பாடிய முறையில் நின்று வரலாற்றுப் பகுதிகளையும் புராணச் செய்திகளையும் நன்கு ஆய்ந்து கண்டு பக்தி இயக்கக் காப்பியமாக இந்நூலினைப் படைத்தார். சுந்தரர் தம் வரலாற்றுக்கு இடையில் பொருத்தமான இடங்களில் அடியார்களின் வரலாற்றை அமைத்து தம் காவியத்தைச் சிறப்புடன் முடித்துள்ளார். இவ்வாறு இப்புராணத்தின் காவிய நாயகர் வரலாறு முதல் இடை கடையெங்கும் பிரவி வரப் படைத்தார்.

## 4. பக்தி இயக்கத்திருநூல்

சங்கத்தமிழ்ச் சமூகத்தில் சிவன் முதலிடம் பெற்றுத் திகழ்ந்தமை சங்கப் பாடல்களால் அறியலாம். முருகவழிபாடு, சக்திவழிபாடு (கொற்றவை வழிபாடு) அன்று நிலவின. அன்று அயலவர் வைதிக வேள்வி வழிபாடும் அதனை எதிர்த்த நாத்திக சமணபுத்த சமயங்களும் தமிழகத்தில் இடம்பெற்றன. அத்துடன் அக்காலத்தில் வீரவழிபாடாகிய நடுகல்வழிபாடும் இருந்தது. சமணபுத்த சமயங்களும் வைதிகமும் ஆள்வோரின் ஆதிக்கத்தால் அதிகாரம் பெற்றன. அவற்றை எதிர்த்துப் பக்தி இயக்கம் அடிமை விலங்கினை உடைக்கப் புறப்பட்டது. அதற்குப் புனிதவதியாராகிய காரைக் காலம்மையார் தலைமை ஏற்றார் அவரே தேவாரப் பண்ணி சைக்கும் தாயானார். அவர் பாடிய மூத்த திருப்பதிகமே பக்தி இயக்கத் தலைநூல். பக்தி இயக்கம் ஆரவாரப் போலிச் சடங்குகள் இல்லாமல் இசைப்பாடல் வழியே காரைக்கல் அம்மையார் தொடங்கி நால்வர் பத்தி வளர்த்தனர் தமிழ்ச்சித்தர்கள் வேறுவைகயாகக் கொண்டனர். சிவனுக்கே "எல்லாம் வல்ல சித்தர்" என்ற பெயரும், பழனியம்பதிக்குச் "சித்தன் குடில்" என்ற பெயரும் உள்ளமை காண்க. எனவே அறிவர் நெறியாகிய சித்தர் நெறியின் மறுமலர்ச்சியே பக்தி இயக்கம் எனக் கொள்வதும் ஓரளவுக்குச் சரியேயாம்.

அத்தகு பக்தி இயக்கத்தின் நிறைநூலாகியும் 12 ஆம் திருமுறை எனத் தொகுக்கவும் பட்ட பெருமை கொண்ட பெரியபுராணம் சிறந்த வாழ்வியல் களஞ்சியம் ஆகும். சேக்கிழார் காலத்துக்கு முன்னர் வாழ்ந்த தனி அடியார் மருவர், தொகை அடியார் ஒன்பதின்மர் ஆக 72 சிவப்பேறுபெற்ற அடியார் வரலாற்றைப் பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடிய பெருமை இந்நூலுக்கே உண்டு. "பக்தியின் பாலராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்" என்ற திருநாட்டுச் சிறப்புப் பாடல் அடி இதனை உணர்த்தும். இவ்வாறு சிவனடியார் வரலாற்றுடன் தமிழக வரலாற்றையும், சிவசமயப் பண்பாட்டு மெய்யியல் வரலாற்றையும் இணைத்த இந்நூலின் பெருமைக்கு ஈடு ஏதும் இல்லை எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. அறமும் சமூக நீதியும் போற்றும் அறநூல்

போரும் சாதலும் தமிழரின் இரு கண்கள் அதுவே இடைக்காலத்தில் அறமும் சமூக நீதியும் என்ற நிலைக்குப் பக்தி இயக்கத்தால் வளம் பெற்றது. இதனை,

"மாநிலங் காவலனாவான் மன்னுயிர்க்காக்கும் காலைத்"
தானதுணுக்கிடையூறு தன்னால் தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான்"(2)

என்னும் நகரச் சிறப்பும் பாடல் காட்டும். அறங்காப்பது வேந்தன் தலைக்கடன். மக்களுக்கு ஒருநீதி மன்னவனுக்கு ஒரு நீதி என்பதை ஏற்காமல், உயிர்கட்கெல்லாம் ஒரேநீதி ஒரே அறம் என்று போற்றிய ஒப்புரவு மிக்க அறநூல் பெரியபுராணம் என்பது மனுச்சோழன் வரலாற்றால் அறியலாம்.

கண்ணப்பர், திருநாளைப் போவார் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மூவர் வரலாற்றில் சமூக நீதி பொற்றப்பட்டது என்பதையும் சமூகநீதி தழைத்து ஓங்கிய சிறப்பினையும் உலகுக்காட்டும். வேதவேள்வி செய்யும் இருபிறப்பாளர் திருநீலக்கர். அவர் வீட்டில் தீண்டத்தகாத திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் மனைவி மதங்கசூளாமணியும் இரவு துயில்கொண்ட இடம் அறியும் போது நாம் மெய்சிலிர்ப்போம். அதனைச் சேக்கிழார் பாடும் பாங்கே தனிப்பெருஞ்சிறப்பாம்.

"ஆங்கு வேதியில் அறாத செந்தீ வலஞ்சுழிவுற்று
ஓங்கி முன்யையில் ஒரு படித்தன்றியே ஒளிரத்
தாங்கு நூலார் மகிழ்வுறச் சகோட யாழ்த் தலைவர்
பாங்கு பாணியருடன் அருளால் பள்ளி கொண்டார்" (3)

திரு நீல கண்ட யாழ்ப்பாணரும் அவரது துனைவியாரும் வேள்வி செய்யும் தூய இடத்தில் பள்ளி கொள்ளக் கண்டதும் வேள்வித்தீ சிறப்பாக ஒளிர்ந்தது என்று சேக்கிழார் பாடும் குணம் காண்க. சமூகநீதி போற்றிய பாங்கிற்கு இதனை விட வேறு சான்று ஏதும் வேண்டுவதில்லை.

## 6. அடியார் பெருமையே ஆண்டவன் பெருமை

"நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பகர்வற்கு ஆமே"
என்பது திருமந்திரம்

நடமாடும் கோயில் மக்கள் மனித உடலே சிவலிங்கம் என்பார் திருமூலர். எனவே "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்பது சிவசமயத்தின் அடிப்படை உண்மை. எனவே தான் மணிவாசகர் "அடியாரது பழங்குடில்கள் தோறும் எழுந்தருளினாய் என்றும்," உடலிடம் கொண்டாய்" என்றும்", "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி" என்றும் பாடுவர். சிவபெருமான் சுந்தரர் வேண்ட முதல் திருமணத்தைத் தடுத்து ஆட்கொண்டார். அருபத்துப் பரவையார் மணத்தைத் தாமே முன்னின்று நடத்தினார். மூன்றாவதாகப் பழவினை தீரச் சங்கிலியார் மணத்தையும் நடத்தினார். அதன்வழி அடியார் மீது கொண்ட அளப்பரும் பற்றினை உணர்த்தினார். அவ்வாறே கண்ணப்பன் கண்ணை பெற்றுக் கொண்டு அற்புதங்கள் செய்து அவர் குடும்பத்தையும் ஆட்கொண்டார். இதனால் சிவன் அடியார் உள்ளத்துள் கோயில் கொண்ட பாங்கும் புலப்படும். புறக் கோயிலை விட அகக் கோயிலே அவனுக்கு விருப்பம் என்பதைப் பூசலார் உணர்த்தினார்.

## 7.பெரிய புராணம் சிவசமயப் புரட்சிக் காப்பியம்

பக்தி இயக்கமே புரட்சி இயக்கம். புரட்சி என்பது உலகினைத் தலைகீழாகப் புரட்டிப் போடுவது. வேத வைதிகம், சமணபுத்தம் தமிழ் மக்களைத் தள்ளாட வைத்தன. அவற்றை எதிர்த்து நால்வர் பெருமக்களும் நாயன்மார்களும் செய்த புரட்சியே பெரியபுராணத்தின் சாரம். அதற்கான சான்றுகள் பலவிருப்பினும் சிலவற்றை இங்கு காண்போம்.

நாட்டில் மழை இல்லை. வறுமையும் பஞ்சமும் மக்களை வாட்டியது, மக்கள் துயர் தீரச்சம் பந்தரும் அப்பரும் இறைவனை வேண்டினர். நாளும் படிக்காசு பெற்று மூன்று வேளையும் பறையறைந்து மக்கள் அனைவருக்கும் உணவிட்டனர். இக்காட்சியை உறுதிசெய்யும் வண்ணம் திருவீழிமிழலையில் இன்றும் இருமடங்கள் உள்ளன. அதில் மாபெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியாக அப்பருக்குச் சிவன் வாசி (குற்றம்) இல்லாக் காசு தந்தான். சம்பந்தருக்கு வாசியுள்ள காசு தந்தான். சம்பந்தர் வேண்ட இறைவன் உழைப்பவர்க்குரிய ஊதியம் உடனே உண்ணுமாறு வழங்கவே அவ்வாறு செய்தேன் என்கின்றார்.

அவ்வாறே திருமருகல் வீதியில் ஒருநாள் விடியற்காலையில் "சடையா எனுமால் விடையா எனுமால்" என்று பாடி அழும் குரல் கேட்கின்றது. கோயிலுக்குச் சென்ற சம்பந்தர் அழுகுரல் கேட்டு அங்கு திரம்பி வந்தார். அப்பெண்ணுக்குத் திருமணம் நடைபெறாமையால் அவனைத் தொடமுடியாமல் அழும் காட்சி சம்பந்தரின் உள்ளத்தைத் தொட்டது. அப்பெண் செய்த பெரும் புரட்சி யாது? உலகம் தெரியாத பெண் 'ஐயோ' என்று யமனை அழைக்காமல் "சடையா" "விடையா" என்று சிவனை அழைத்ததே, சம்பந்தப் பெருமான் அப்பெண்ணின் அருள்பழுத்த உள்ளம் கண்டு அவள் கணவனை உயிர்ப்பித்து மணம் முடித்தார். அவ்வாறே அப்பர் செய்த புதிய போராட்டப் புரட்சி ஒன்றினையும் அறியலாம் பழையாறையில் சமணர்கள் சிவன் கோயிலுக்குச் செல்லும் வழியை மறித்துச் சுவர் எழுப்பினர். அப்பர்பெருமான் அது கண்டு உண்ணா நோன்பு மேற்கொண்டார். மன்னவனே நேரில் வந்து சுவரை எடுத்து வழியை உண்டாக்கினான். இத்தகைய புரட்சிப்புதுமைகள் ஏராளமாக உள்ளதைப் பெரிய புராணத்தைக் கற்பார் காண்பர்.

## 8. தமிழர் கண்ட மெய்யியல் நோக்கு

சித்தாந்த சாத்திரங்களும் மெய்கண்டாரின் சிவஞான போதமும் தனித்தமிழ் மெய் நூற்களாகிய திருமந்திரம், திருவாசகம், தேவாரம் ஆகியவற்றின் சாரமாகும். திருமந்திரம் "அறிவு அறிவாக அறிந்து அன்பு செய்மின்", என்றும், "அறிவே கடவுள் என்றான் நந்தி" என்றும் கூறக் காண்க. தூய மெய்யறிவே – வாலறிவே – செம்மை நிறை செம்மையே சிவமாம். என்பதைப் பெரியபுராணம் உணர்த்தும்.

"மாதவம் செய் செய்திசை வாழ்ந்திடத் தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப் போதுவார்" சுந்தரர் என்று திருமலைச் சிறப்பில் கூறுவதன் நுட்பம் காண்க. தென் திசை செய்த மாதவம் எது? சிவசமயம் உலகு எங்கும் பரவி இருந்த காலம் உண்டு. அதற்கும் பலநூறு சான்றுகள் இன்னும் உள்ளன. ஆனால் இன்று தென் தமிழகத்தில் மட்டுமே மெய்கண்டார் மெய்யறிவு நெறியும் சிவ சமய வழியும் சித்தர் நெறியும் நின்று நிலவுகிறது.

## 9. முடிவுரை

உலகினில் தோன்றிய மெய்யியல் நூற்களில் சிவஞான போதத்துக்கு ஒப்பான ஒரு மெய்யியல் நூல் எங்கும் தோன்றவில்லை அவ்வாறே திருமந்திரத்துக்கு இணையான மந்திரநூல் உலகினில் தோன்றவில்லை. முடிவாகத் தெய்வச் சேக்கிழார் தம் பக்தி சுவைமிக்க தொண்டர் சீர் பரவும் பெரியபுராணத்துக்கு இணை ஏதும் இல்லை. இதற்கு ஒரே சான்று போதும். சுந்தரர் பரவையார் இருவரும் காதல் கொண்டனர் என்று கூறவரும் சேக்கிழார் அங்கும் பக்திக்கே முதலிடம் தரக் காண்க.

"முன்னே எதிர்வந்து தோன்றும் முருகனோ" என்றும், "சிவனருளோ" என்றும் இருவரையும் பக்தியால் காதல் கொள்ள வைத்த பாங்கு உலகெங்கும் தேடினும் இல்லை. எனவே பக்திச் சுவையில், பாநலத்தில், மெய்யறிவும் புலத்தில், இசை வண்ணத்தில், இனிமை இன்பத்தில், வருணனைத்குறத்தில், அறம் நீதி கூறும் முறையில், வரலாற்றுச்சீர்மையில், அடியார் தம் அளப்பரிய பெருமையில், தமிழ் மந்திரச் சிறப்பில் இதற்கு ஒப்பு ஏதும் இல்லை. எனவே பெரியபுராணத்தின் பெருமை எல்லையற்றது எனலாம். இவரும் எல்லை கடந்து அவ்வாறே பெரியபுராணமும் என்பதும் பொருந்தும்.

சான்றெண் விளக்கம்


1. சிவசமய வரலாறு – முன்னுரை முனைவர் கா. அரங்கசாமி
2. பெ. புராணம் திருநகரச் சிறப்பு பா. எண் 36
3. பெ. புராணம் திரு நீல நக்கர் பா. எண் 31
4. பெ. புராணம் கண்ணப்பர் பா. எண் 157
5. பெ. புராணம் சம்பந்தர் பா. எண். 1248


.................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடல் புராணத்தின் இல்லறவியல் நெறிகள்

பேராசிரியர் முனைவர். கோ. சுப்புலெட்சுமி
தமிழ்த்துறை, பாத்திமாக் கல்லூரி, மதுரை.



## முன்னுரை

சிவபெருமான் தன் அடியார்களை ஆட்கொள்வதற்காக நிகழ்த்திய அற்புதங்களை — அறுபத்து நான்கு திருவிளையாடல்களை பரஞ்சோதியார் ‘திருவிளையாடல் புராணம்’ என்னும் பெயரில் படைத்துள்ளார். பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான் தலைமைப் பாத்திரமாகவும், அப்பெருமானிடம் அயரா அன்பு கொண்டு ஒழுகிய பக்தர்கள் - அடியார்கள் துணைப் பாத்திரங்களாகவும் புனைவு செய்து காட்டப் பெற்றுள்ளனர். இப்புராணத்தில் இடம் பெற்றுள்ள கதைகள் “எல்லாம் அவன் செயல்” என்னும் தத்துவநெறியில் ஒருமைப்பட்டு நிற்கும் வெவ்வேறு கதைகள் அனைத்தும் ஆலவாய் அண்ணல் மண்ணிலே மனிதராகப் பல்வேறு வடிவங்களில் தோன்றி உலகம் உய்வதற்காக நிகழ்த்திய திருவிளையாடல்களின் தொகுப்புக்கள். பெருமானது திருவிளையாடல்களைக் கூறுகின்ற போக்கில் புராணம் முழுவதிலும் பக்தி நெறியைப் புலப்படுத்துவதுடன், பரஞ்சோதியார் தமது பல் துறைப் புலமையினையும் ஆங்காங்கே வெளிப்படுத்தியுள்ளமையைக் காண முடிகிறது. இப்புராணத்தில் இடம் பெற்றுள்ள கதைகளின் வாயிலாக சமயம், சமுதாயவியல், மானிடவியல், உளவியல், இல்லறவியல் சார்ந்த பண்புக் கூறுகள் - பேருண்மைகள், புலப்படுத்தப் பெற்றுள்ளதையும் அறிய முடிகிறது.

திருவிளையாடல் புராணத்தில் இல்லற நெறியினைக் கதைப் பொருளாகக் கொண்டு திருமணப் படலம், தடாதகைப் பிராட்டியார், திருவவதாரப் படலம், உக்கிர குமார பாண்டியன் திருவவதாரப் படலம், குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம், அன்னக்குழியும் வையையும் அழைத்த படலம் ஆகிய ஐந்து படலங்களில் இல்லற நெறிகள் வெளிபடுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் திருமணம், மக்கட்பேறு, விருந்தோம்பல் என்னும் சிலவற்றை எடுத்துரைக்கும் வகையில் அமைகிறது இக்கட்டுரை.

## திருமணம்

அன்பும் பண்பும் பொருந்திய ஒருவனும் ஒருத்தியும் அன்பினால் உள்ளம் ஒன்றுபட்டுத் திருமணம் புரிந்து கொண்டு வாழும் வாழ்க்கைப் பகுதியே இல்லறமாகும். மலயத்துவச பாண்டியனுக்கும் காஞ்சனமாலைக்கும் மகளாகத் தோன்றியவர் தடாதகைப் பிராட்டியார். தந்தை மலையத்துவச பாண்டியன் இறைவனடி சேர, அரசினை ஏற்கிறார். பிராட்டியார் அரசாட்சி நடத்திவரும் கால கட்டத்தில் மணப்பருவம் வந்து முதிர்ந்திருப்பதைக் கண்ட தாய் காஞ்சனமாலை, ‘மகளே கன்னிப் பருவமானது முதிர்ந்த செல்வியுடையதாகியும் திருமணப் பேறு கூடிற்றில்லையே’ என்று வருந்திக் கூறிட, ‘அன்னையே நீ நினைத்த எண்ணம் ஆகும் பொழுது ஆகும், நீ பல்வேறாகக் கருதி வருந்தற்க, நான் சென்று எட்டுத் திக்குகளிலும் என்னுடைய வெற்றிக் கொடியை நாட்டி வருவேன், ஆறுதல் அடையுங்கள்’ என்று படையுடன் புறப்பட்டுத் திக்கு விஜயத்தினை மேற்கொண்டாள். (திருமணப் படலம் பா. 3.4) அன்னை காஞ்சன மாலை, ‘கன்னி கனிதரு செவ்வித்து ஆசியும் இன்னும் திருமணப் பேறு வாய்க்கவில்லையே’ என்று வருந்துவதிலிருந்து, கன்னிப்பருவம் முதிர்ந்து செவ்விடையாகும் பொழுது பெண்ணுக்குத் திருமணப்பேறு கூட வேண்டும் என்னும் மெய்மை உய்த்துணரப்படுகின்றது.

பிராட்டியார் தனது திக்கு விஜயத்தின் போது வடபுலத்து மன்னர்களையும், இந்திரன், ஏனைய திக்குப்பாலர்களையும் தோல்வியுறச் செய்து வெற்றி வாகை சூடிக் கயிலாய மலையை அடைந்தார். அங்கு நந்தீசர் ஏவிய பூதகணங்கள், படைவீரர் ஆகியோரின் ஆயுதங்களையெல்லாம் தனது வச்சிராயுதத்தினால் தகர்த்தெறிந்தார். இந்நிகழ்வுகளை நந்தீசர் சென்று சிவபெருமானிடம் தெரிவித்தார். எனவே சிவபெருமான் போர்க்கோலம் பூண்டு பிராட்டியாரை எதிர்ப்படுகிறார். ‘வீரசிங்கமாகப் போர் புரிந்திட்ட பிராட்டியார், பெருமானைப் பார்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் அவரது திருக்கோலம் கண்டு மனம் நெகிழ்ந்தார். உள்ளத்தின் கண் நாணமும்-மடமும், அச்சமும் இடங்கொண்டு பொருந்திடவும் கண்கண் புறவடியை நோக்கவும், திருவடியின் பெருவிரல் மண்ணைக் கிளைத்து நின்றார்.

தொல்காப்பியர் கூறும் பண்பு நலன்கள் பொருந்தத் திகழ்ந்தார் என்பதைப் பரஞ்சோதியார் மிக நுட்பமாகவும் சுருக்கமாகவும் புலப்படுத்தியுள்ளார் எனலாம்.

திக்கு விஜயம் செய்து பிராட்டியார் மதுரை திரும்பியதன் பின் பிராட்டியாருக்கும் பெருமானுக்கும் திருமணம் நடைபெற்றது.

இல்லற வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைவது திருமணம் என்னும் கருத்து இங்கு உணர்த்தப்பட்டுள்ளது.

## மக்கட்பேறு

### தடாதகைப் பிராட்டி திருவவதாரம்

மலயத்துவச பாண்டியன் தனக்குத் திருமணமாகிப் பல்லாண்டுகள் ஆகியும் தனக்கு மக்கட் பேறு கிட்டவில்லையே என்று மனம் வருந்தினான். பல தான தருமங்களைச் செய்தான். அப்போது இந்திரன் மண்ணுலகம் வந்து பாண்டியனைச் சந்தித்து, 'மகப்பெறும் மகம்' (புத்திர காமேஷ்டி யாகம்: செய்தால் உனக்குப் புதல்வன் பிறப்பான். உனது நெடுநாளைய குறையும் அகலும் என்று கூறினான். ஆகவே பாண்டியன் தன் மனைவி காஞ்சனமாலையோடு, யாகசாலை அமைத்துக்கொண்டு நியம நெறிப்படி மகவேள்வி புரிந்து அதன் பயனாகத் தடாதகைப் பிராட்டியாரை மகளாகப் பெற்றான். (தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம் பா. 4-19)

## உக்கிரபாண்டியன் திருவவதாரம்

சோமசுந்தரக் கடவுளே சுந்தரபாண்டியனாகத் தோன்றித் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் செய்து கொண்டவர். இதனைத் தடாதகைப் பிராட்டியார் திருமணப் படலத்தில் தெளிவுறுத்தப் பெற்றுள்ளமை அறியத்தக்கது. (தடாதகைப் பிராட்டியார் திருமணப் படலம் பா. 185) பின்னை. அப்பெருமான் தன் திருவிளையாடலை உலகிற்கு உணர்த்தும் பொருட்டு இந்திரசால வித்தை காட்டுபவனைப்போல, தமது அனற்கண்ணினின்றும் முருகப்பெருமானைத் தோற்றுவித்து. அச்செல்வனைக் கருப்பமுறாமல் தடாதகைப் பிராட்டியாரிடத்தே உதிக்கும்படி திருவுளம் கொண்டார். (உக்கிர குமார பாண்டியர் திருவவதாரப் படலம் பா.6) ஆலத்தை அமுதமாக்கும் இறைவனும், பிராட்டியும் தாம் கொண்ட திருக்கோலத்திற்கு ஏற்ப, தடாதகைப் பிராட்டியாரிடத்தே, திங்கட்கிழமையும் திருவாதிரை நாளும் கூடிய நல்ல வேளையில் அறத்தின் காவலனாக இளஞ்சூரியனைப் போன்று திருமுருகப் பெருமான் ஆகிய திருக்குமாரனைப் பெறுகிறார். அக்குமாரனுக்கு உக்கிரப் பெருவழுதி என்று பெயரிட்டனர். (உக்கிரகுமார பாண்டியர் திருவவதாரப் படலம் பா. 11-14) இல்லத்திற்கு அணிகலமாம் மகப்பேற்றின் சிறப்பைப் பரஞ்சோதியார் தடாதகைப் பிராட்டியார் திருவவதாரம், உக்கிர குமார பாண்டியன் திருவவதாரம் பற்றிய நிகழ்வுகள் வாயிலாகப் புலப்படுத்தியுள்ள பாங்கு உணர்த்தற்பாலது.

## விருந்தோம்பல்

இல்லறம் என்ற பெரும் பகுதியை இல்லம், இல்லறப் பண்பு, இல்லறப் பயன் என்று மூன்று பகுதிகளாகப் பாகுபடுத்தலாம். இல்லம் என்னும் பகுதியில் கணவன், மனைவி, குழந்தை ஆகிய மூவரும், இல்லறப் பண்பு என்னும் பகுதியில் அன்புடைமை, இனியவை, இனியவைகூறல், ஒழுக்கமுடைமை, பொறையுடைமை என்பனவாகிய நல்ல பண்புகளும், இல்லறப் பயன் என்னும் பகுதியில் விருந்தோம்பல், ஈகை, புகழ் என்பனவும் அடங்கும் என்று கருதலாம்.

இல்வாழ்க்கைக்குரிய அறங்களுள் தலையாயதாக விருந்தோம்பல் கருதப்படுகின்றது.

விருந்தோம்பும் அறம் பற்றி வள்ளுவர் பத்துக் குறட்பாக்களில் விழுமிய கருத்துக்களை வடித்துத் தந்துள்ளார் என்பதும் இங்கு இணைத்து நோக்கத் தக்கது. கணவனும், மனைவியும் வனத்திற்குச் செல்லாமல், பண்புடையவர்களாக வாழ்ந்து வீட்டில் இருந்து செல்வத்தை ஈட்டி, காத்து மனைவி மக்களுடன் கலந்து இல்வாழ்க்கை நடத்துவதும் விருந்தினரைப் போற்றி உதவி செய்வதற்கேயாகும் என்பதை.

இருந்தோம்பி இல்வாழ் தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

(குறள் 81)

என்னும் குறட்பா தெளிவுறுத்துகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடாதகைப் பிராட்டியாரின் திருமணத்தின் போது சமைக்கப்பட்ட உணவு செலவிழயவில்லை, உணவு மலையளவு எஞ்சியுள்ளது என்று பிராட்டியார், தம் நாயகராகிய சுந்தர பாண்டியரிடம் கூறிக் கவன்றபோது, (திருமணப்படலம் பா. 5,6) சுந்ரபாண்டியராகிய சிவபெருமான், தன் அருகில் இருந்த குண்டோதரன் வயிற்றில் வடவைத் தீயைப் புகுமாறு திருவுளங்கொண்டு, 'பெண்ணே! என் குடையைத் தாங்கிவரும் இவனுக்கு உணவு அளிப்பாயாக' என்று கூறினார். (பா.11) ஏவல் மகளிர் படைத்த உணவு வகைகள் அனைத்தையும் எடுத்து உண்டும் பசியடங்காது பச்சைக் காய்கறிகள், பழம், பால், தயிர், நெய் போன்றவற்றையும் அளவில்லாத பண்டங்களையும் வாரி வாரி உண்டான். அப்போதும் குண்டோதரனின் பசி அடங்காது மேலும் கேட்கலானான் (குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம். பா. 3-16)

குண்டோதரனின் பசியடங்கப் போதிய அளவு உணவு அளிக்க இயலாத நிலையை உணர்ந்த பிராட்டியார் தம் நாயகரிடம் சென்று நாணத்துடன் தலைகவிழ்ந்து நின்றார். கொடுரப் பசியால் வாடிய குண்டோதனுக்குக்காக, சிவபெருமான் தனது சக்தியான அன்னபூரணியை எண்ணியருளினார். உடனே நான்கு திசைகளிலும் இருந்து நிலத்தைக் கிழித்துக் கொண்டு நான்கு அன்னக் குழிகளில் தயிர் அன்னம் பொங்கி மேலே எழுந்தது. அத்தயிர் அன்னத்தைத் தன் பசிதீரும் வரையில் குண்டோதரன் வாரி வாரி உண்டான். பசி தீர்ந்து, கிணறுகள், ஓடைகள், குளங்கள் என்பனவாகிய நீர்நிலைகளின் நீரைக் குடித்தும் நீர் வேட்கை தணியாமையால் குண்டோதரன், சிவபெருமானிடம், 'ஐயனே! பசிக் கொடுமையைத் தீர்த்தீர்கள். ஆனால் இப்போது தண்ணீர் தாகத்தால் தத்தளிக்கிறேன். அருள்பாலிக்க வேண்டும் என்று பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வருந்தினான். சிவபிரான் தம் திருமுடி மீதிருந்த கங்கா தேவியை மதுரைப் பக்கத்தில் நதியாக வருக என்று கட்டளையிட கங்காதேவி நதியின் வடிவம் கொண்டு பெருவெள்ளத்தோடு பிரவகித்தாள். குண்டோதரன் அந்நீரைப்பருகி நீர் வேட்கையைத் தணித்துக்கொண்டான். (அன்னக்குழியும் வையையும் அழைத்த படலம் பா. 3-2)

சமைத்த உணவு அனைத்தையும் உண்ணும் அளவிற்கு விருந்தினர் இல்லையே என்று தடாதகைப் பிராட்டி வருந்தியமை விருந்தோம்பலின் சிறப்பையும், கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்து விருந்தினர் விரும்பிய அளவு உணவு அளித்து விருந்தோம்புதல் வேண்டும் என்னும் மெய்ம்மையும் முறையே குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம், அன்னக்குழியும் வையையும் அமைத்த படலம் என்னும் படலங்களின் கதைப் பொருளாக அமைத்து, இந் நெறிகள் செயல்கள் இல்லறம் மேற்கொண்டவர்களுக்கு இன்றியமையாதவை என்று பரஞ்சோதியார் அறிவுறுத்தியுள்ளார் என்று கருதலாம்.

## முடிவுரை

இக்கருத்தோட்டத்தின் அடிப்படையில் நோக்கும் போது, பரஞ்சோதியார் இக்கட்டுரையில் விவரிக்கப்பெற்ற திருவிளையாடல்கள் வாயிலாக இல்லத்திற்கு அடித்தளமாக அமையும் திருமணம், இல்லறத்தின் நற்கலமாக அமையும் மக்கட்பேறு. இல்வாழ்வானுக்குரிய சிறந்த கடமைகளுள் ஒன்றாகிய விருந்தோம்பல் - அக்கடமையைக் கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டு ஆற்றுதல் வேண்டும் என்னும் விழுமியங்களைத் தெளிவுறுத்தியுள்ளார் என்று கருதலாம். இல்லறம் நல்லறமாக அமைய இக்கருத்துக்கள் தேவை என்பதும் பெறப்படுகிறது.

---------

**ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள**
**அளப்பரும் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்**
**திருந்துசாத் துவிகமே ஆக**
**இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த**
**எல்லையிற் தனிப் பெருங் கூத்தின்**
**வந்தபே ரின்ப வெள்ளத்துட் திளைத்து**
**மாறில்லா மகிழ்ச்சியில் மலர்ந்தார்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயத்தில் வழிபாடு



**ஆன்மிக அறிஞர் இளசை சுந்தரம்** எம். ஏ., (சைவ சித்தாந்தம்)
மதுரை

## முன்னுரை

இறைவனை அடைதற்குரிய வழி, சாதனம் எனப்படும். அந்த வழி நின்று வாழ்ந்து அவன் அருளைப் பெறுதல் சாத்தியம் எனப்படும். சாதனத்தின் மூலமாகத்தான் சாத்தியத்தைப் பெற முடியும். இலக்கினை அடைய வேண்டும் என்றால், முறைப்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும். அந்த வாழ்க்கை முறையினை, வழிபாட்டு நெறியின் வாயிலாகச் சமயச் சான்றோர்கள் அருளிச் செய்துள்ளார்.

## நால்வகை நெறிகள்

சைவ சமயம், நான்கு வகை வழிபாட்டு நெறிகளை எடுத்து இயம்பி நிற்கிறது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இந்நான்கு நெறிகளிலும் வளர்ச்சிப் படிநிலைகளைக் காணலாம். இந்நான்கினையும் தாயுமானவர், அரும்பு, மலர், காய், கனி இவற்றோடு ஒப்பிடுவார்.

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே"
(பா.எ. 157)

இந்நான்கு நிலைகளும், மக்களின் பல்வேறு மனநிலைகட்கு ஏற்ப வகுக்கப்பட்டவை எனலாம். படிநிலைகள் பலவாக இருந்தாலும், அவை அனைத்தும் இறையருளைப் பெறுதற்குரிய வழிகள் என்பது திண்ணம். அவரவர் தாங்கள் விரும்பிய நிலையில் நின்று வழிபட்டு, அனைவரும் இறையருளைப் பெற வேண்டும் என்பது தான் ஆன்மிகத்தின் இலக்கு ஆகும்.

## சரியை நெறி

வழிபாடு என்பது வழிப்படுத்துவது – நன்னெறியில் நம்மை ஈடுபடுத்துவது என்ற பொருளைக் குறித்து நிற்கும். பொறிவழிச்செல்லும் மனத்தை, பக்தி நெறிக்குத் திசை திருப்பி, தூய்மையான வாழ்க்கை வாழவேண்டியதன் இன்றியமையாமையை எடுத்து இயம்புவது பக்திநெறியின் நோக்கம் ஆகும். இதனை.

"கான்வழி நடக்கும் மனத்தினை மீட்டுன்
கழல்வழி நடத்தல்" (பா.எ 271)

என்று எடுத்து இயம்புவார் இராமலிங்க அடிகள்.

சைவசமயம் வகுத்த வழிபாட்டு நெறிகளில் முதலாவது இடம் பெறுவது சரியை நெறி ஆகும். நமது சரீரத்தால் செய்யப்படும் இறைபணி என்பது இதன் பொருள். சரியை நெறியைப் புறவழிபாடு என்றும், தொண்டு நெறி என்றும், ஆண்டான் - அடிமை உறவு நெறி (தாச மார்க்கம் : இறைவன் - ஆண்டான்: அடியார் - அடிமை) என்றும் அழைப்பர். இதன் வாயிலாகச் சாலோகம் (இறைவன் உலகில் வாழ்தல்) என்னும் பதமுத்தியைப் பெறுவர். இந்நெறி பற்றி எடுத்து இயம்பும் அருணந்தி சிவாசாரியார்.

"தாதமார்க்கம் சாற்றில் சங்கரன்தன் கோயில்
தலம் அலகு இட்டு, இலகுதிரு மெழுக்கும் சாத்திப்
போதுகளும் கொய்து, பூந்தார் மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்தும், புகழ்ந்துபாடி
தீதுஇல் திருவிளக்கு இட்டு, திருநந்த வனமும் செய்து
திருவேடம் கண்டால் அடியேன் செய்வது
யாது பணியீர்! என்று பணிந்து, அவர்தம் பணியும்
இயற்றுவது இச்சரியை செய்வோர் ஈசன்உலகு இருப்பர்
(பா.எ. 271)

என்று எடுத்து இயம்புகிறார்.

இறைவன் எழுந்திருக்கும் திருக்கோயில்களுக்குச் சென்று தூய்மைப்படுத்தி, நந்தவனம் அமைத்து, மலர்கொய்து மாலை தொடுத்து, இறைவனைப் புகழ்ந்துபாடி, திருவிளக்கு ஏற்றி, இறையடியார்களுக்குப் பணி செய்வதனைச் சரியை நெறி என்று அவர் குறிப்பிடுகிறார். இவை அனைத்தையும் புறவழிபாட்டில் அடக்குவர்.

இறைநெறி, வழிபாட்டு அளவில் மட்டும் நின்றுவிடாமல் சூழலையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற வாழ்வியல் நெறி வலியுறுத்தப் படுவதையும் இங்குக் காண முடிகிறது. மனத்தைத் தூய்மைப்படுத்தும் இறைவழிபாட்டிற்குச் செல்வதற்கு முன், புறத்தூய்மையையும் பேண வேண்டும் என்ற வாழ்வியல் உண்மையினை இந்நெறி உணர்த்தி நிற்கிறது. இதனால் சூழல் பாதுகாக்கப்படுகிறது. நலமான, வளமான வாழ்க்கை வாழ வழிவகுக்கிறது.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'

என்பது திருமந்திரம், ஊனுடம்பு ஆலயமாக விளங்குவதால் அந்த ஆலயம் (நமது உடல்) தூய்மையாக விளங்குவதற்குச் சூழலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையாக விளங்க வேண்டும் என்ற நோக்கத்தில் இக்கருத்துக் கூறப்பட்டிருக்கலாம்.

சரியை நெறிக்குத் திருநாவுக்கரசரைக் குறிப்பிடுவர் சைவ நெறியாளர்கள். திருநாவுக்கரசர் திரு ஆரூர் தேவாரம் இதனை விளக்கி நிற்கக் காணலாம்.

"நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

இப்பாடல் இறைவழிபாட்டின் இன்றியமையாமையை எடுத்து இயம்புவதுடன், புலர்வதன் முன் அதிகாலையில் எழுந்து ஆற்ற வேண்டிய இறைப் பணியையும் எடுத்து இயம்பி நிற்கிறது. நம்மைக் கீழ்நோக்கி இழுத்துச் செல்லும் தமோ குணங்களை வெல்லவேண்டும் என்றால், அதிகாலையில் (பிரம்ம முகூர்த்த வேளையில்) எழுந்திருந்து இறைபணி ஆற்ற வேண்டும். அதிகாலை வேளையில் காற்று மண்டலத்தில் உள்ள ஓசோன் $(O_3)$ காற்று, நமது உடலில் படுவதன் வாயிலாகப் புத்துணர்ச்சி மிக்க நலமான வாழ்க்கை வாழலாம் என்ற அறிவியல் உண்மை இதன் மூலம் அறிய முடிகிறது.

தமோ குணம் இருந்தால், தவவாழ்க்கை வாழ முடியாது. தமஸ் (தாமோ குணம்) இருந்தால், தபஸ் (தவம்) வராது. அந்தத் தமோகுணத்தை, அதிகாலை வேளை எழுந்திருந்து நிகழ்த்தும் இறை வழிபாட்டின் மூலம் வெல்லலாம் என்ற வாழ்வியல் உண்மையினை இப்பாடல்வழி அறிய முடிகிறது.

வழிபாடு, மனத்துாய்மையை மட்டும் கருத்தில் கொள்ளாமல், சூழலைப் பாதுகாத்தல், உடல்நலம் காத்தல் ஆகியவற்றையும் கருத்தில் கொள்கிறது. இவற்றை இச்சரியைநெறி உணர்த்தி நிற்பதை நம்மால் உய்த்துணர முடிகிறது.

## கிரியை நெறி

சைவ சமயம் காட்டும் வழிபாட்டு நெறிகளுள் இரண்டாவதாகக் கூறப்படுவது கிரியை நெறி ஆகும். இதனை 'அகப்புறவழிபாடு' என்பர். உடலால் செய்யப்படும் புறவழிபாட்டோடு, அக மனமும் இணைந்து இறைபணி செய்தலை இந்நெறி வலியுறுத்தி நிற்கிறது. இதனைத் தந்தை – மகன் உறவு நெறி (சத்புத்திர மார்க்கம்) என்பர். இறைவனைத் தந்தையாகவும், அடியாரை மகனாகவும் இந்நெறி வழிநின்று சாமீபம் (இறைவன் அருகில் வாழ்தல்) என்ற பதமுத்தியைப் பெறுவர். இந்நெறி பற்றி எடுத்து இயம்பும் அருணந்தி சிவாச்சாரியார்.

"புத்திர மார்க்கம் புகலின் புதியவிரைப் போது
புகைஒளி மஞ்சனம் அமுதுமுதல் கொண்டு ஐந்து
சுத்தி செய்து ஆசனம் மூர்த்தி மூர்த்தி மானாம்
சோதியையும் பாவித்து ஆவாகித்து சுத்த
பத்தியினால் அருச்சித்து, பரவிப் போற்றிப்
பரிவினொடும் எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும் இக்கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங் காலே"

(பா. எ.272)

என்று எடுத்து இயம்புவார்.

இறைவழிபாட்டிற்குரிய நாள்மலர், நறும்புகை, தீபம்ஏற்றல், திருமஞ்சனம் கொணர்தல், திரு அமுது படைத்தல், ஐந்துவகைச்சுத்தி (பூதசுத்தி, இடசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தி) செய்து, அழல் ஓம்பி, மனத்தில் இறைவனை நிலைநிறுத்தி வழிபாடு செயதலைக் கிரியை நெறியில் அடக்குவார்.

கிரியை நெறிக்குத் திருஞானசம்பந்தரைக் குறிப்பிடுவர்.
நீடுமலரும் புனலும் கொண்டு நிரந்தரம்
தேடும் அடியார் சிந்தை யுள்ளே திகழ்வானைப்
பாடும் குயிலின் அயலே கிள்ளை பயின்றேத்த
மூடுஞ் சோலை முகில்தோய் கோயில் முதுகுன்றே

என்பது திருஞானசம்பந்தர் தேவராம். மலரும் புனலும் கொண்டு, புறத்தே இறைவழிபாடு நிகழ்த்துவதோடு, அகமனத்தில் இறைவன் அருட்காட்சியைக் காண வேண்டும் என்ற வேட்கை கொண்டு விளங்குபவர் உள்ளத்தில் இறைவன் உறைவான் என்ற கருத்து இப்பாடல் வழி பெறப்படுகிறது.

புற வழிபாட்டில், சமயச் சடங்குகள் இடம்பெற வாய்ப்பு உள்ளது. புறச்சடங்கு அளவில் நின்றுவிடுவது சமயத்தின் நோக்கம் அன்று. அகத்துாய்மையே சமயத்தின் நோக்கம் ஆகும். எனவே புறவழிபாட்டோடு, அகவழிபாட்டையும் இணைத்து இந்நெறி எடுத்தியம்பி நிற்கிறது எனலாம். முதல்நிலை (சரியை)யின் வளர்ச்சிப் படி நிலையாக இதனைக் (கிரியை) கொள்ளலாம்.

பின்பற்றுவதற்கு எளிதாக இருக்கும் சரியை நெறியை முதற்கண் கூறிய சைவ அருளாளர்கள், அதற்கு அடுத்து சற்று முயற்சி மேற்கொண்டு, மனத்தால் நிகழ்த்தும் வழிபாட்டு முறையினையும் இணைத்து, அகப்புறவழிபாடாக அமைத்துக் கூறி உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்மூலம் உடலையும் மனத்தையும் இணைத்து இறைபணி நிகழ்த்த வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் படுவதை நம்மால் உய்த்துணர முடிகிறது. இறைநெறி வாழ்க்கையின்மூலம், உடல்நலமும் மனத்தூய்மையும் பாதுகாக்கப்படும் என்ற வாழ்வியல் உண்மை, இந்நெறியின் வாயிலாகப் புலப்படுகிறது.

## யோக நெறி

சைவநெறி காட்டும் வழிபாட்டு நெறிகளுள் மூன்றாவதாக இடம் பெறுவது "யோகநெறி" ஆகும். யோகம் என்ற சொல்லுக்கு இறைவன் திருவருளோடு உயிர் ஒன்றுதல் என்பது பொருள். இதனை 'அகவழிபாடு' என்பர். உடலால் செய்யப்படும் புறவழிபாடு (சரியை), உடலாலும் மனத்தாலும் செய்யப்படும் அகப்புறவழிபாடு (கிரியை), இவை இரண்டும் கடந்த நிலையில், மனத்தால் மட்டுமே இறைவனை நினைத்து வழிபடுவது யோகநெறி ஆகும். இதனைத் தோழமைநெறி (சகமார்க்கம்) என்று அழைப்பர். இந்நெறியில் இறைவனும் அடியாரும் தோழமை உறவு கொண்டு விளங்குவர்.
"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்"

என்ற சுந்தரர் திரு ஆரூர் தேவாரம் இதனை விளக்கி நிற்கும், இந்நெறி நின்று சாரூபம் (இறைவனின் வடிவத்தை அடியார் பெறுதல்) என்ற பதமுத்தியைப் பெறுவர். இந்நெறி பற்றி எடுத்தியம்பும் அருணந்தி சிவாச்சாரியார்

"சகமார்க்கம் புலன்ஒடுக்கி,தடுத்துவளி இரண்டும்
சலிப்பு அற்று. முத்சதுரமுதல் ஆதாரங்கள்
அகமார்க்கம் அறிந்து, அவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்து அங்கு
அணைந்துபோய் மேல்ஏறி, அலர்மதிமண்டலத்தின்
முகமார்க்கம் அமுதுஉடலம் முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோகமுற்றும்
உழத்தல் உழந்தவர் சிவன்தன் உருவத்தைப் பெறுவார்.
(பா.எ. 272)

உலக வாழ்க்கையில் புலன் வழிச் செல்லும் மனத்தைத் தடுத்து, அகநெறிப்படுத்தி, ஆறு ஆதாரங்களை (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை) அறிந்து, மதிமண்டலத்து அமுதை உடல் எங்கும் பாய்ச்சி, பேரொளிப் பிழம்பாகிய இறைவனின் திருவருளை இடைவிடாது நினைத்திருத்தல் யோகநெறி ஆகும். எட்டு அங்கங்கள் (அட்டாங்கம்) இந்நெறியில் கூறப்படுகின்றன. அவைகளாவன: இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும். இவை இறைவன் திருவருளோடு உயிர் ஒன்றுவதற்குரிய படிநிலைகள் ஆகும். எட்டு அங்கங்களின் படிப்படியான வளர்ச்சி நிலையை இங்கு காணலாம். மனிதன் விலக்க வேண்டுவன (இயமம்), பின்பற்ற வேண்டுவன (நியமம்) இவை தொடங்கி, யோகாசன நிலையில் அமர்ந்து மூச்சுக் காற்றை உள் இழுத்துப் பின் அதனை நிலை நிறுத்தி, சமாதி நிலையில் இறைவனின் திருவருளோடு ஒன்றுவது அட்டாங்க யோகத்தின் படிநிலைகள் ஆகும்.

யோக நெறிக்குச் சுந்தரரைக் குறிப்பிடுவர்.

"தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத்தூர் எம்அடிகட்கே"

நமது நாபிக்கு மேலே நால்விரல் தூரத்தில் இதயத்தில் அமர்ந்திருப்பவன் இறைவன். அவனைப் புறத்தே தேடுவதை விடுத்து, அகத்தே அவன் உறைந்துள்ளான் என்பதை அறிந்து, அதன்வழி நின்று ஒழுகுதலை இந்நெறி உணர்த்தி நிற்கிறது.

இவற்றால், சரியை (புறவழிபாடு), கிரியை (அகப்புற வழிபாடு) இவற்றின் வளர்ச்சிப் படிநிலையாக யோகநெறி (அகவழிபாடு) விளங்குகிறது என்பதை அறிய முடிகிறது. புறவழிபாட்டை விட, அகப்புறவழிபாடு சற்று உள்நோக்கியது, இவ்விரண்டையும் விட, அக வழிபாடாகிய யோகநெறி, இன்னும் சற்று உள்நோக்கியது. வழிபாட்டு நெறி காட்டும் வளர்ச்சி நிலைகள் இவை ஆகும்.

புறவழிபாடு---- அகப்புறவழிபாடு---- அகவழிபாடு

வழிபாட்டின் தொடக்க நிலையில் உள்ளவர்கள் பின்பற்ற வேண்டுவன சரியை, கிரியை நெறிகள் ஆகும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"
"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்"

என்னும் உணர்வு உடையோர் பின்பற்றுவது யோகநெறி ஆகும்.
யோகநெறியின் வாயிலாக, மனம் ஒருமுகப்படும். மனம் ஒருமுகப்பட்டால் எதையும் விரைவாகவும் சரியாகவும் செய்து முடிக்கலாம். இதனால் வெற்றியை உறுதியாகப் பெறலாம் என்ற வாழ்வியல் உண்மையை இந்நெறி புகட்டி நிற்பதை நம்மால் உய்த்துணர முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானநெறி

சைவசமயம் வகுத்த வழிபாட்டு நெறிகளுள் 'ஞானநெறி' இறுதி இடம் பெறுகிறது. ஞானாசிரியர் வாயிலாகப் பல்வகைக் கலைகள், புராணங்கள், சாத்திரங்கள், சமய நூல்கள் இவற்றை நன்கு கற்று, பதி, பசு பாசம் என்னும் முப்பொருள் உண்மையை உணர்ந்து இறைவனோடு இரண்டறக் கலத்தல் (சாயுச்சியம்) ஞானநெறி ஆகும். இதனால் பெறப்படுவது பரமுத்தி ஆகும்.

இதனை, ஞானாசிரியர் - மாணவர் உறவு (சன்மார்க்கம்) என்பர். அகத்துறை மரபில் தலைவன் - தலைவி உறவு போன்றது (நாயகன் - நாயகி பாவம் : Bridal Mysticism) இந்நெறி என்பர். நல்லவற்றைக் கேட்பது, மீண்டும் மீண்டும் அவற்றைச் சிந்திப்பது, அதன்மூலம் நிலைத்த பொருள் எது என்ற தெளிவு பெறுவது, இறுதியில் இறைவனோடு ஒன்றிக் கலந்து இன்பம் துய்ப்பது.

கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் - நிட்டைகூடல் என்ற வளர்ச்சிப் படிநிலைகளை இங்கு காண முடிகிறது. சரியை கிரியை யோகம் ஆகிய நெறி நின்று தவ வாழ்க்கை மேற்கொள்பவர்களுக்கு இறைவன் ஞானாசிரியராகக் காட்சி கொடுப்பான் என்பதை.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்ந்த விட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"
என்பார் மெய்கண்டார். (சூ.எ.8)

இதனைத் தாயுமான அடிகள்,"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"
என்றுஇயம்புகின்றார். (பா.எ. 156)

ஞானநெறிக்கு மாணிக்கவாசகரைக் குறிப்பிடுவர், திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில், இறைவன் மாணிக்கவாசகருக்குத் திருவடி தீட்கை (இறைவன் திருவடியை அடியார் தலையில் பதித்தல்) கொடுத்து, ஞான உபதேசம் செய்தான் என்ற வரலாற்றுச் செய்தி இதனை விளக்கி நிற்கிறது. ஞானநெறி பற்றித் தேவாரப் பாடல் விளக்கி நிற்பதை இங்கே காணலாம்.

"ஞானத் தால்தொழு வளர்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தால்உனை நானும் தொழுவனே"
என்பது திருநாவுக்கரசர்தேவாரம் (தனி.தி.குறு. 111, எ3)

சைவ சமயம் கூறும் ஒவ்வொரு நெறியும் இறைவனை அடைதற்குரிய வழியே ஆகும். எனினும் ஞானநெறியையே தலையாய நெறியாகச் சைவ சமயம் குறிப்பிடுகிறது. உடல், மனம் இவற்றைவிட உயர்ந்தது என்பதால் இவ்வாறு கூறி இருக்கலாம்.

அறிவால் அறியாமை அகலும்: அறியாமை அகன்றால் இறைவனையும் உயிரையும் பிரிக்கும் பாசம் நீங்கும். பாசம் நீங்கினால், எல்லை இல்லாத இறை இன்பத்தை உயிர் துய்க்கும். இதுவே வாழ்வின் இலக்கு ஆகும். இக்கருத்தினை உள்வாங்கி, 'ஞானமே வீடுபேற்றுக்குரிய வழி' என்ற நோக்கில் இந்நெறி கூறப்பட்டு இருக்கலாம். அதாவது, ஞானநெறியில் நின்று, உண்மையை உணர்ந்து, முறையான உயர்ந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்ற வாழ்வியல் உண்மையை இந்நெறி உணர்த்தி நிற்கிறது எனலாம்.

சரியை நெறிக்குத் திருநாவுக்கரசர்
கிரியை நெறிக்குத் திருஞானசம்பந்தர்
யோகநெறிக்குச் சுந்தரர்
ஞானநெறிக்கு மாணிக்கவாசகர் ......

அருளாளர்களின் வாழ்வும், வாக்கும் தம்மை நன்னெறியில் ஈடுபடுத்துவதற்குக் கூறப்பட்டவை ஆகும். பாதை சரியாக இருந்தால் தான், பயணமும் நலமான அமையும் அத்தகைய பாதையை வழிபாடாகக் கொண்டு, இறைவனின் அருளைப் பெற வேண்டும் என்ற பயணத்தைத் தொடர்ந்தால், மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். இறையருளைப் பெற்று, இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்ற வாக்கிற்கு இணங்க, வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்.

*****

*தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன்*
*திருநடம் கும்பிடப் பெற்று*
*மண்ணிலே வந்த பிறவியே எனக்கு*
*வாலிதாம் இன்பமாம் என்று*
*கண்ணிலானந்த அருவிநீர் சொரிய*
*கைமலர் உச்சிமேற் குவித்துப்*
*பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்*
*பாடினார் பரவினார் பணிந்தார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்



**பூரணம் தமிழருவி மணியன்**

'இறைவா! நான் அன்றாடம் தவறாமல் சமய நெறிகளைப் பின்பற்றினாலும், ஒவ்வொரு நாளும் ஒருவேளை மட்டுமே உணவு உண்டாலும், கோபம், காழ்ப்பு, பழிதீர்க்கும் வெறி என் நெஞ்சிலிருந்து நீங்காமற் போனால், இந்த சமய வாழ்க்கை எந்த பயனுமற்றுப் போகும். நாள்தோறும் நான் ஆலயம் சென்று ஆண்டவனைத் தொழுதாலும், மலரும் ஊதுபத்தியும் கொண்டு வழிபட்டாலும், சுயநலம், பேராசை, பற்று, ஆணவம் அனைத்தும் நீங்காமற் போனால், இந்த வழிபாடு அனைத்தும் என்னை நானே ஏமாற்றிக் கொள்ளும் தந்திரமாகும். எந்த நேரமும் பிரார்த்தனை செய்தாலும், சான்றோர் அவையில் பங்கேற்றாலும், நீண்ட நேரம் தியானத்தில் ஈடுபட்டாலும் அன்பு, கருணை, இரக்கம் எனது இயல்பாக இல்லையெனில், என் ஆன்மிகம் உண்மையானது இல்லை. நான் தனித்திருந்து மௌனத்தில் ஆழ்ந்தாலும், எளிமையும் தவமும் ஏற்று அகிம்சை வழியில் துறவை அறிவித்தாலும் என் தவறான ஆசைகளும், எண்ணங்களும் அழிக்கப்படாவிடில், என் உடல் உணர்விலிருந்து விடுபடாவிடில், எல்லா உயிர்களிலும் இறைவன் இருப்பதை நான் அறிந்து கொள்ளாவிடில் என் வாழ்க்கை முழுவதும் வீணாகும்' என்ற குஜராத்தி கவிஞர் நரசிமேத்தாவின் கவிதையில் நெஞ்சம் கலந்து வாழ்ந்தவர் அண்ணல் காந்தியடிகள். தாமஸ் ஏ. கெம்பிஸ் எழுதிய 'கிறிஸ்துவை பின்பற்றுதல்' (Limitation of Christ) நூலில், ஒவ்வொரு மனிதரும் வாழ்க்கை முழுவதும் இரண்டு கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும் என்கிறார். 'ஒவ்வொரு நாளும் இதுவே வாழ்வின் இறுதி நாள் என்ற உணர்வுடன் இயன்றளவு நல்லதைச் செய்யுங்கள். பூமியில் இருக்கும்போதே பரமண்டலத்தை அடைந்து, பரமபிதாவின் முன் வாழ்வதாக நினையுங்கள்' என்றார் கெம்பிஸ்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ ஒவ்வொருவரும் ஒழுக்கம், தன்னடக்கம், எளிமை, அமைதி, அனைத்து உயிர்களையும் மதித்தல், பிறர் நலம் காத்தல், தர்மத்தைப் போற்றுதல் என்னும் ஏழு நற்பண்புகளையும் பின்பற்ற வேண்டும். அளவற்ற காமம், அதிகம் உண்ணுதல், பேராசை, சோம்பல், சினம், பொறாமை, தற்பெருமை ஆகிய ஏழு பாவப் படிகளில் பாதம் பதிக்காமல் விலகி நிற்க வேண்டும். இவற்றுக்கு முதலில் தேவைப்படுவது புலனடக்கம். 'புலன்கள், வென்றவனுக்கு நண்பனாகின்றன; வெல்ல முடியாதவனுக்கு எதிரிகளாகின்றன' என்கிறது பகவத் கீதை. நமக்குத் தேவையானவை நம்முள் இருக்கின்றன. அவற்றை அனுபவிக்க முடியாமல் தடுப்பது நாமே. பிறர் நலம் பேணும் பண்புதான் விலங்கிலிருந்து மனிதனை வேறுபடுத்துகின்றது. வீர சிவாஜியின் குருவான ராமதாஸ் உஞ்சவிருத்தி (பிச்சையேற்றல்) செய்து உண்டவர். ஒரு நாள், ஒரு வீட்டின் முன் பிச்சைக்காக நின்றார். அப்போது பசுஞ்சாணக் கரைசலில் துணியை நனைத்து மெழுகிக் கொண்டிருந்த வீட்டுக்காரி, கோபத்தில் சாணத் துணியை அவர் முகத்தில் வீசியெறிந்தாள். தனது ஆசிரமம் திரும்பிய ராமதாஸர், அந்தத் துணியை நீரில் சுத்தம் செய்து, நூலிழைகளாகப் பிரித்து, திரிகளாகத் திரித்து விளக்கேற்றி, 'ராமா! அந்தப் பெண்ணுக்கு ஏதோவொரு மன பாரம். இன்றே அதைப் போக்கிவிடு' என்று இதயம் நெகிழ்ந்து பிரார்த்தித்தார். இந்த இதயம் தான் அனைவருக்கும் இருக்க வேண்டும். இறப்பு நம் இருப்பின் இறுதி எல்லை. இவ்வுலகில் வேறெதுவும் உறுதியில்லை. திட்டமிட்ட வாழ்க்கை திடீர் இறப்பினால் பொருளற்றுப் போகும். அதனால், இன்றே, இக்கணமே நாம் நல்ல வண்ணம் வாழ முயல வேண்டும். எதைச் செய்தாலும் அதன் மூலம் நாம் வாழும் உலகுக்குக் கொடுப்பது அதிகமாகவும், உலகிலிருந்து நாம் ஏற்பது குறைவாகவும் இருக்க வேண்டும். தாமிரமும் தங்கமும் ஒரே இனம் சார்ந்த உலோகங்கள் தான். அழுக்கடைந்தது தாமிரம், அழுக்கற்றது தங்கம். தாமிரத்தில் உள்ள களிம்பு நீங்கினால் தங்கமாகும். ஆசாபாசம் எனும் அழுக்கு அகன்றால் மனமும் பொன்னாக மின்னும். தங்கப் பாத்திரத்தில் எதைப் போட்டு வைத்தாலும் கெடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமாகிவிட்ட மனதில் தீய எண்ணம் எதுவும் எழாது. உடம்பின் மீது தங்கம் தவழ்ந்து பயனில்லை. உடம்பே மாசற்ற தங்கமாவதுதான் முக்கியம்!
குருவிடம் இருந்து சீடன் ஒருவன் விடைபெறும் போது எங்கும் அமாவாசை கவிந்து கிடந்தது. வழியில் வெளிச்சம் பெற ஒரு மெழுகுத்திரியை சீடன் கையில் குருகொடுத்தார். மெழுகுத் திரியிலிருந்து வந்த வெளிச்சம் ஓரடி வரைதான் வழியைக் காட்டியது. "குருவே, நான் நீண்ட தூரம் நடக்க வேண்டும், இந்த மெழுகுத்திரி வெளிச்சம் ஓரடி தூரம் தானே தெரிகிறது" என்றான் சீடன். அதைக்கேட்ட குரு, "நல்லது முதலில் தூரம் நட. அங்கு அடுத்த அடிக்கான வெளிச்சம் கிடைக்கும்" அடி அடியாய் நடந்தால் இறுதி வரை வெளிச்சம் கிடைக்கும்" என்றார். நமது வாழ்க்கைப் பயணத்தில் நாமும் அடியடியாய் நடப்போம். நமக்கு வேண்டிய வெளிச்சம் நம் நடத்தையின் மூலம் கிடைக்கும். 'மனித உறவுகள் மேம்பட மனம் வளப்பட வேண்டும்' என்பதைப் புதிய நோக்கில், பாமரர்க்கும் எளிதாகப் புரிய வைத்த வேதாத்திரி மகரிஷி தருகிற விளக்கை, ஒவ்வொருவர் கையிலும் ஏந்தி நடப்பது நல்லது. 'நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விட வேண்டும். அர்த்தமற்றுப் பின்விளைவு அறியாது பேசிக் கொண்டிருப்பதை விட வேண்டும். எந்தப் பிரச்னையையும் நாசூக்காக விட்டுக்கொடுத்து விடை காண வேண்டும். சில நேரங்களில் சில சட்டங்களைச் சகித்துத்தான் தீரவேண்டும். தாம் சொல்வதும் செய்வதுமே சரியென்று வாதிடும் குறுகிய மனப்போக்கை விடவேண்டும்.

உண்மை – பொய்யின் தன்மை உணராமல், செவியில் கேட்டதை இங்குமங்கும் எடுத்துச் சொல்லும் வழக்கத்தை விட வேண்டும். தேவைக்கு அதிகமாக ஆசைப்படுவதை விட வேண்டும், அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்துவதை விட வேண்டும், பேச்சிலும், நடத்தையிலும், அடக்கமும் பண்பும் மிளிர வேண்டும். ஒருவருக்கொருவர் நேரில் சந்தித்து நெஞ்சம் கலந்து பேச வேண்டும் என்று வாழும் வழியை விளக்குகிறார் மகரிஷி. கழித்தலில் தான் சிற்பம் கண்டெடுக்கப்படுகிறது. ஒவ்வொன்றாய் விட்டு விலக மனதில் தெளிவு வேண்டும். கழித்தலில் வருவது இன்பம், கூட்டல் தருவது துன்பம்! 'மக்களில் பலர் அறிவுபூர்வமாகச் செயல்படாதவர்கள், சுயநலம் சார்ந்தவர்கள், அவர்களை மன்னிக்கும் மனம் வேண்டும். நீங்கள் அன்பாய் இருந்தால் அதையும் சிலர் விமர்சிப்பார்கள். ஆனாலும் அன்பிலிருந்து விலகாதீர்கள். நீங்கள் வெற்றி பெற்றால் உங்கள் வெற்றி சில நல்லோரையும் சில தீயோரையும் நண்பர்களாக்கும். வெற்றியில் உங்களை இழந்து விடாதீர்கள். நீங்கள் உண்மையாகவும் வெளிப்படையாகவும் இருந்தால் ஏமாற்றப்படுவீர்கள் உங்கள் தன்னையை மாற்றிக் கொள்ளாதீர்கள். பல்லாண்டு உழைப்பில் நீங்கள் உருவாக்கியதை, ஒரே இரவில் ஒருவர் அழித்துவிடலாம். உங்கள் முயற்சியை மட்டும் அப்போதும் கைவிடாதீர்கள். உங்கள் தூய்மையும் மகிழ்ச்சியும் பிறர் நெஞ்சில் பொறாமையைத் தூண்டக்கூடும் அதற்காக உங்கள் மகிழ்ச்சியைத் துறந்து விடாதீர்கள். ஒருவருக்கு நீங்கள் செய்யும் நன்மையை மறுநாளே அவர் மறந்து போகலாம். ஆனாலும், நன்மை செய்வதிலிருந்து விலகாதீர்கள் என்ற அன்னை தெராசாவின் அருள் மொழிதான் எவ்வளவு உயர்ந்தது! நாம் எதையும் மேம்போக்காகவே பார்க்கிறோம், ஆழமாக நோக்குவதில்லை. செவியில் விழுவது அனைத்தையும் கேட்கிறோம், அவற்றின் உட்பொருளை கவனிப்பதில்லை, உணவை வேகமாக உண்கிறோம் உள்ளத்தால் உணர்வதில்லை. வாயில் வந்ததைப் பேசுகிறோம், சிந்திப்பதில்லை, உண்மையில் நமக்கு வாழத் தெரியவில்லை. இயற்கையின் ஒவ்வொரு துளியிலும். உலகின் பார்வையைத் தன் பக்ககம் திருப்பிய உன்னத கலைஞர் சத்யஜித்ரே, தன் எட்டு வயதில் தாகூரின் சாந்திநிகேதனுக்குத் தாயாருடன் சென்றபோது, நோட்டுப் புத்தகத்தில் தாகூருக்குப் பிடித்த கவிதையை எழுதித் தரும்படி வேண்டினார்.

'நான் உலகம் முழுவதும் சுற்றித் திரிந்தேன், நதிகளையும் மலைகளையும் கண்டு வந்தேன். இதற்காக மிகுந்த பணத்தைச் செலவழித்தேன், நெடுந்தூரம் கடந்து சென்று எல்லாவற்றையும் நேரில் கண்டேன், ஆனால் என் வீட்டு வாசலுக்கு அருகில் முளைத்திருக்கும் ஒரு புல்லின் நுனியில் படர்ந்திருக்கும் பனித்துளி ஒன்றில் உலகம் தெரிவதைக் காண மறந்தேன்' என்று தாகூர் எழுதிக் கொடுத்த கவிதைதான், ரேவை நுணுக்கமாக வாழ்க்கையைத் திரையில் வார்த்தெடுக்கும் மகா கலைஞனாக வடித்தெடுத்தது.

இயந்திரமாக வாழ்வதன்று வாழ்க்கை இயற்கையுடன் இரண்டறக் கலப்பது தான் வாழ்வின் உன்னதம் "வாய்த்தது நந்தமக்கு ஈதோர்பிறவி, மதித்திடுமின்" என்றார் அப்பர். உலகை வெறுப்பதோ, ஒதுக்குவதோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுங்கி நிற்பதோ அல்ல ஆன்மிக வாழ்க்கை. உலகைப் புரிந்தும், அறிந்தும், அதனுள் வாழ்ந்தபடி தன்னையும், உலகையும் ஒருசேர உயர்த்துவதுதான் உண்மையான ஆன்மிகம் என்று நாம் உணர்தல் நலம். 'மனித இனம் இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிப்பதற்காகவே இறைவனால் படைக்கப்பட்டது. இந்த உண்மையைச் சரியாக உணர்ந்தால் தான் நம் வாழ்க்கைப் பயணம் பாதுகாப்பாக இருக்கும்' என்கிறார் மேலைக் கவிஞர் பிளேக். ஒவ்வொருவருக்கும் துன்பம் பெரும்பாலும் காமத்தினாலும் பொருள்களின் மீதுள்ள அதீத பற்றினாலும் தான் வருகிறது. காமவிகாரமும் பொருளாசையுமே பொய்யின் பிறப்பிடங்கள். இவற்றில் அளவு மீறியவர்க்கு வாழ்க்கை ஒருபோதும் நல்ல வண்ணம் அமையாது. நாம் அனைவரும் முயன்று எளிமையைப் பின்பற்ற வேண்டும்: பரிசுத்தம் பேண வேண்டும்: குறைந்த ஆசைகளுடன் ஆன்மாவின் சுமைகளைக் குறைக்க வேண்டும். அச்சமே கீழ்மக்களின் ஆசாரம். ஒழுக்கம் தவறாதவன் எதன் பொருட்டும், எவர் பொருட்டும் அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை. அச்சப் படுதல் குறித்து ஓர் அற்புதமான ஈசாப் கதை: ஒரு காட்டில் பல முயல்கள் இருந்தன. எதைக் கண்டாலும் அவை அச்சத்தில் நடுங்கின. அன்றாடம் அஞ்சியஞ்சி உயிர் வாழ்வதைவிட ஒரேயடியாக செத்து விடுவது சுகமென்று அவற்றுக்குத் தோன்றியது. எல்லா முயல்களும் ஓரிடத்தில் கூடின: மலை உச்சியை அடைந்து, அங்கிருந்து அடிவாரத்தில் உள்ள மடுவில் விழுந்து உயிரை விடுவது என்று முடிவெடுத்தன. திட்டமிட்டபடி முயல்கள் அனைத்தும் மலையுச்சிக்கு வந்து சேர்ந்தன, மடுவில் விழத் தயாராக நின்றன. அந்த மடுவின் கரையில் இருந்த தவளைகள் மலையுச்சியில் இருக்கும் முயல்களைக் கண்டதும் கலக்கமுற்று, நீரில் பாய்ந்து மறைந்தன. தங்களைவிட அஞ்சி வாழும் உயிரினங்கள் உலகில் உண்டு என்ற உண்மையை அறிந்த முயல்கள், மடியும் முடிவை மாற்றி கொண்டன.

இந்த ஈசாப் கதை இன்னொரு நீதியையும் வலியுறுத்துகிறது. உலகில் துன்பத்தைச் சுமப்பவர்கள் நாம் மட்டும் இல்லை. நம்மைவிட மிக மோசமான துன்பத்தை அனுபவிப்பவர்கள் இந்த மண்ணில் உண்டு. அதனால், துன்பத்திலிருந்து விடுதலை தேடி யாரும் தற்கொலையில் ஈடுபடக்கூடாது. எந்த நிலையிலும் எந்த உயிரினமும் மனிதரைப் போல் தற்கொலை செய்து கொள்வதில்லை.

பகவத்கீதையின் சாரத்தையே இந்தத் தொடரின் முடிவில் உங்களிடம் மீண்டும் இறக்கி வைக்கிறேன். மண்ணில் நல்ல வண்ணம் வாழ விரும்புவோர் பயமற்றிருங்கள்: பற்றற்றிருங்கள்: சினமற்றிருங்கள். உணவு, உறக்கம், உடலின்பம், உழைப்பு ஆகியவற்றை முற்றாகப் புறக்கணிக்காமலும் மிகையாக அனுபவிக்காமலும் நடுவழியில் நடந்து, மனதை உயர்ந்த நிலைக்குச் செலுத்துங்கள். நியாயமாக ஆசைப்படுங்கள், ஆசைப்பட்டதை முயன்று அடையுங்கள். அடைந்ததை நீங்கள் துய்ப்பதுடன், அடுத்தவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

பிறருடன் பகிர்தலில் தான் சமூக வாழ்க்கை சிறக்கும். ஆணும், பெண்ணும் சமம் என்று உணருங்கள். ஆண் - பெண் பாலுறவை நெறிப்படுத்த அமைக்கப்பட்டதே குடும்பம் என்பதை நினைவில் வைத்து, அதன் கட்டுமானம் குலையாமல் காத்து வாருங்கள். கனவுகளும் கற்பனைகளும் நிறைந்தது குழந்தைகளின் உலகம். உங்கள் தீர்மானங்களைத் திணித்து, அந்தப் பட்டாம்பூச்சிகளின் சுதந்திரத்தைப் பறித்து விடாதீர்கள். உயிர் வழிபாடுதான் உண்மையான, மேன்மையான இறை வழிபாடு என்பதை நெஞ்சில் நிறுத்துங்கள். சின்னச் சின்ன விஷயங்களிலும் சிந்தனையைச் செலுத்துங்கள். "சிற்ப வேலையில் பல நாள் கடந்தும் பெரிய முன்னேற்றம் இல்லையே?" என்று ஒருவர், மைக்கல் ஏஞ்சலோவிடம் குறைப்பட்டார். "சிற்பத்தின் இந்த தசைப் பகுதியைப் புடைக்கச் செய்வதிலும், முகத்தில் மென்மையும் புன்னகையும் வெளிப்படுமாறு அமைப்பதிலும் கவனம் செலுத்தியதில் நாள்கள் பல கடந்து விட்டன" என்றார் ஏஞ்சலோ. "இவையெல்லாம் சின்னஞ்சிறு விஷயங்கள்" என்று சிரித்தார் குறை சொன்னவர்.

"சின்னஞ்சிறு விஷயங்களே சம்பூரணத்தை உருவாக்குகின்றன. சம்பூர்ணம் சின்னஞ்சிறு விஷயமில்லை" என்று விளக்கினார் அந்த உலகப் புகழ் பெற்ற சிற்பி.
கொஞ்சம் கொஞ்சமாக நம் குறைகளைக் களைவோம்.
வாழ்வில் சம்பூரணத்தை நோக்கி நடப்போம். 'யத் பாவம் தத் பவதி.' மனிதரின் மனம் போல் மண்ணில் வாழ்க்கை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் தேச உருவாக்கத்தில் சேக்கிழாரின் முக்கியத்துவம்

**சூ.யோ. பற்றிமாகரன்** MA BSc BA Special Diploma (Oxford) Diploma(Housing)

வன்னியில் மனித வரலாறு காணாத இனஅழிப்பை இலங்கை அரசாங்கம் நடத்தி முடித்துள்ள நேரத்தில் - அந்த இனஅழிப்பின் கொடுமைகளையும் கொடூரங்களையும் கண்டு புலம்பெயர் தமிழீழ மக்களும் உலகத் தமிழர்களும் தாங்கொணாத் துயரத்தில் துன்பத்தில் கண்ணீரில் மூழ்சிக்கிடக்கும் நேரத்தில் - எம்மக்களினதும் மண்ணினதும் நினைவு சுமந்து இறந்தோருக்கு இறைபதமும் இருப்போருக்குப் புதுவாழ்வும் நம்மக்கள் எடுத்த காரியம் யாவிலும் வெற்றி கிட்டிட .இறை அருளும் வேண்டி இலண்டனில் அனைத்துலகச் சைவமகாநாடு நடைபெறுகிறது.

இன்றையத் தமிழ் இலக்கிய உலகின் செல்நெறி வகுத்த சாரதி மகாகவி பாரதி சொன்ன உறுதி உறுதி உறுதி உறுதிக்கோர் உடைவுண்டாயின் இறுதி இறுதி இறுதியென்ற காலத்தை வென்றிட பாரதி தந்த தாரகமந்திரத்தின் வழி விழ விழ எழுவோம் என்னும் உறுதியுடன் வாழ்பவர்கள் இன்றையத் தமிழீழ மக்கள். அந்த உறுதியின் செயற்பாடாகவே இலண்டன் இவ்வாண்டு அனைத்துலக சைவ மகாநாடும் அமைகிறது.

## ஆரோக்கியத்திற்கு ஆத்மீக உயர்நிலை முக்கியம்

ஆன்மீகம் என்பது உளஉடல் நலத்திற்கு இன்றியமையாதது என்பது உலக சுகாதார நிறுவனத்தின் கருத்து. "ஆரோக்கியம் என்பது நோய் நிலைகளிலும் இயலாமையிலும் இருந்து விடுபட்ட நிலை மாத்திரமல்லஇ ஒருவர் தம் உடல் உள சமூக ஆத்மீக நன்னிலைகளில் அடையக் கூடிய அதிஉயர்ந்த நிலையே ஆரோக்கியம் எனலாம். ஆராக்கியம் மனிதனின் அடிப்படைப் பிறப்புரிமைகளில் ஒன்றாகும்" என்பது உலக சுகாதார நிறுவனத்தின் பிரகடனம். அந்த வகையில் இன்றைய இலங்கை அரசாங்கத்தின் தமிழின அழிப்புக் காரணமாக உடல்உளப் பாதிப்புக்களுக்குள்ளாகியுள்ள எம் தாயக உடன்பிறப்புகளுக்கும் நமக்கும் இன்றைய காலகட்டத்தில் ஆத்மீக எழுச்சி என்பது மிகத் தேவையான ஒன்றாகிறது.

அந்த வகையில் இந்த மகாநாடு தமிழருக்கு ஆத்மீக எழுச்சியும் சிந்தனை மலர்ச்சியும் தந்த சேக்கிழாரையும் அவரின் பெரிய புராணத்தையும் மையக்கருவாகக் கொண்டு நடைபெறுவது இன்றைய சூழலை வென்றிட வெந்திடும் இதயங்கள் மீண்டெழத் தொன்மையைத் தான்மையை மட்டுமல்ல ஆன்மபலத்தைப் பெற்றிடவும் வழிவகுக்கும் இலக்கிய வழியாகவும் ஆன்மீகத் துணையாகவும் அமைகிறது.

## அடிமையும் விடுதலையும் மனநிலைகளே

மேலும் மகாத்மா காந்தி " எந்தக் கணம் ஓர் அடிமை தான் இனிமேல் அடிமையாக இருக்கப்போவதில்லை என்று மன உறுதி பூணுகின்றானோஇ அத்தருணத்திலேயே அவன் விலங்குகள் வீழ்ந்து விடுதலை அடைந்து ஏனையோருக்கும் வழிகாட்டியாக மாறுகிறான். **அடிமையும் விடுதலையும் மனநிலைகளே**"இ எனக் கூறிய அனுபவமொழியைத் தமிழீழ மக்களும் தமிழர்களும் மனதிருத்த வேண்டிய காலமிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அடக்கப்பட்டு விட்டோம் - எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் - என்னும் மனோநிலைநிலை அடிமையின் மனோநிலை. துக்கத்தின் நடுவே கூடலா பாடலா ஆடலா என்னும் எதிர்மறை உணர்வுகளும் அடிமை மனதின் வெளிப்பாடுகளே. இதிலிருந்து விடுபட்டு எத்தனை முறை எத்தனை விதமான அடக்குமுறைகளைக் கண்டோம். வடவர் முதல் ஐரோப்பியர் வரை எத்தனை ஆட்சியாளர்களை எதிர்த்து வளர்ந்தோம் - வாழ்ந்தோம் என்னும் எண்ணத்தை எம்முள் வளர்க்கையில் பேரரசுக்களால் ஒடுக்க முடியாத தமிழினத்தை இஸ்லாமிய ஆட்சியார்களால் அழிக்க இயலாத் தமிழினத்தை ஐரோப்பியர்களின் நயத்தாலும் பயத்தாலும் அடக்க இயலாத் தமிழினத்தை இன்றும் இனியும் என்றும் யாராலும் அழித்திட இயலாது என்னும் மன உறுதியை நாம் மனதில் மீட்டிக் கொள்ளும் பொழுது தமிழினத்தின் வளமார்ந்த வாழ்வு மீளும் தமிழராட்சி மலரும்.

கோலத்தைக் கண்டு கலங்குபவனால் காலத்தை வென்றிட இயலாது. நம் இனத்தின் பண்பாட்டின் ஆழத்தை உணர்த்துகின்ற பொழுதே நம் வேரின் ஊற்றுக்களைத் தேடுகின்ற பொழுதே நாம் எம் வரலாற்றின் தொன்மையைத் தான்மையை மேன்மையை புரிந்துகொள்கின்றோம். இதுவே தேசிய உணர்வாகத் தேச உருவாக்கத்திற்கான உந்து சக்தியை அளிக்கிறது.

## மக்களுக்குச் சக்தியளிக்கும் பெரிய புராணம்

தமிழரின் தொன்மையைத் தேடி தமிழரின் தன்மையை வெளிப்படுத்தல் என்னும் உந்தும் சக்தியை தந்த நம்முன்னோர்களில் முக்கியமானவர் சேக்கிழார் பெருமான். அவரின் பெரிய புராணம் வெறுமனே பக்திக்கு முதன்மை தந்து முத்திக்கு உதவும் எண்ணத்தை மட்டுமல்லாது தொண்டார் தம் பெருமை சொல்லி மக்களுக்குத் தொண்டாற்றலின் அருமையுணர்த்திய மக்கள் இலக்கியம்.

அந்த வகையில் புறந்தள்ளப்பட்டவர் முதல் புவியாள்பவர் வரை தொண்டராகத் திகழ்ந்தாரின் வாழ்வைப் பதிந்து தமிழரின் கி பி 300 முதல் கி பி 865க்கு இடைப்பட்ட கால வரலாற்றுக் களஞ்சியமாகவும் சமுகவியல் சரித்திரமாகவும் பெரிய புராணம் திகழ்கிறது. தொண்டைத் தொண்டரைப் பாடுபொருளாகக் கொண்ட மக்கள் காவியம் நல்லாட்சிக்கான சட்டமுறைமைகளையும் சமுதாய வழமைகளையும் வெளிப்படுத்தி மக்களுக்குச் சக்தியளித்ததால் பெரிய புராணம் என்னும் வழக்குப் பெயர் கொண்டு இன்று வரை மானிடத்தை வாழ்விக்கிறது.

## தேச உருவாகக்த்தில் தேசிய இலக்கியம்

"உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவனை" இன்தமிழால் இலக்கியப்படுத்திய இணையிலாப் பெரும் ஆன்மீகப் படைப்பாகத் திகழும் பெரிய புராணம் ஆன்மீக ஒருமைப்பாட்டிற்கும் மக்கள் ஒன்றுபடுத்தலுக்குமான தமிழரின் தேசிய காவியமாகவும் இலங்குகிறது. தேசிய இலக்கியம் என்ற வகையில் தமிழரின் தேச உருவாக்கத்தில் பெரிய புராணத்தின் பங்கென்ன சேக்கிழாரின் முக்கியத்துவம் என்ன என விளக்குவதும் ஆராய்வதும் ஒரு காலத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் இன்னொரு காலத்தின் மக்களுக்கு பலமளித்து அவர்களுக்கான காலத்தையும் படைக்கும் தன்மையைப் புரிந்து கொள்ள உதவும்.

அன்று சோழமண்ணில் தமிழராட்சி வீழ்ச்சித் திசையில் சென்று கொண்டிருந்த நேரத்தில் சுந்தரரின் திருத்தொண்டர் தொகை நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதி ஆதியனவற்றினை வரலாற்றின் அடிக்கற்களாகக் கொண்டு தமிழர் வரலாற்று மாட்சியை விளக்கி தமிழரின் வீழ்ச்சி தடுத்திட சேக்கிழார் அமைத்த இலக்கியக் கோட்டைதான் சேக்கிழாரின் பெரிய புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐநூறு ஆண்டு காலத்தின் வரலாற்றுத் தொகுப்பு

சேக்கிழாரின் பெரிய புராணம் தமிழராட்சி வீழ்ச்சித் திசை நோக்கிச் சென்ற நேரத்தில் அநாபய சோழன் என்று அழைக்கப்பட்ட இரண்டாம் குலோத்துங்கனின் காலத்தில் பிறந்து தமிழர் தேச உருவாக்கத்தின் மாட்சி சொல்லித் தமிழர் வாழ்வின் மீட்சிக்கு வழிகாட்டிய வரலாற்று நூலாகவும் சமுகவியல் தொகுப்பாகவும் ஆன்மீக நம்பிக்கையாகவும் அமைகிறதென்பது பல ஆய்வாளர்களின் ஏகோபித்த முடிபு. அதே வேளை சேக்கிழார் தலைசிறந்த வரலாற்று ஆசிரியர் எனப் போற்றப்படும் அளவுக்கு அவர் தான் வாழ்ந்த காலத்து சமுக அரசியல் பொருளாதார ஆன்மீகப் போக்குகளை வெளிப்படுத்தாது கி பி 300 ல் தொடங்கிய சங்கம் மருவிய காலம் முதல் கி பி 865 ல் சுந்தரர் காலம் நிறைவு பெறும் வரையிலான 500 ஆண்டுகால தமிழர் வரலாற்றுச் செய்திகளையே பெரிய புராணத்தில் வகுத்து தொகுத்துள்ளார்.

## தேச மக்கள் என்னும் எண்ணத்தை அன்றே வெளிப்படுத்தியவர்

இவ்விடத்தில் சேக்கிழார் " தேசமகன் என்பவன் அவன் தனியான ஒரு ஆளாக இருந்தாலும் கூட அவன் நீண்ட காலத் தியாகங்கள் அர்ப்பணிப்புக்கள் முயற்சிகள் தந்த பயனாக உள்ளான்" என்னும் நவீன அரசியலில் தேசமக்கள் ( Nation) என்னும் சொல்லாட்சியைப் பிரஞ்சுப் புரட்சியின் பொழுது வகுத்தளித்த ஏர்னஸ் றெனனின் (ERNEST RENAN 1882) சிந்தனையை அன்றே கொண்டிருந்ததை உணர முடிகிறது. "தேசமக்கள் (Nation) என்பது ஒரு ஆன்மா. ஆன்மீக ரீதியான கோட்பாடு. இரண்டு விடயங்கள் மட்டுமே இந்த ஆன்மாவை – ஆன்மீகக் கோட்பாட்டைக் கட்டியெழுப்புகின்றது. ஒன்று இறந்த காலம். மற்றையது எதிர்காலம். ஒன்று நாம் வளமான உயர்வான பொதுப் பாரம்பரியத்துக்கு உடமையாளரர்கள் என்ற எண்ணம். மற்றையது கூடிவாழ்வதற்கான உண்மையான விருப்புடன் தமக்குச் சொந்தமாக உள்ள உயர்வான பொதுப்பாரம்பரியத்தில் தொடர்ந்தும் நிலைத்து வாழ்வதற்கான உறுதி". இதுதான் தேசமக்கள் என்ற சொல்லுக்கு ஏர்னஸ் றெனன் தந்த விளக்கம்.

சேக்கிழார் இதனை உணர்ந்தவராக தமிழரின் தேச உருவாக்கத்தின் ஆன்மாவாக இறைபற்றைக் கருதினார். அந்த வகையில் தமிழரின் இறந்த காலத்தில் இறைபற்றுடன் மொழிப்பற்றுடன் தோத்திரங்கள் பாடி தேசப்பற்றுடன் ஊர் ஊராகத் திரிந்து கோயில்களைப் பாடி மக்களை ஒருங்கிணைத்த 63 நாயன்மார்களின் வாழ்வின் குறிப்புகளாகக் கதைகளாகத் தமிழரிடை தொடர்ந்து வந்த எண்ணங்களை வரலாற்றுப் பதிவாக்குகிறார்.

## மும் மலம் அறுக்க முப்பற்று தேச – மொழி - இறை பற்று

தமிழர் தம் நிலப்பரப்பை இழக்கத் தொடங்கிய காலத்துச் சங்க இலக்கியங்கள் தேசப்பற்றின் வழி நிலம் சார்ந்தவையாக எழுந்தன. பின்னர் தமிழன் தன் மொழியில் கலப்பு ஏற்பட்டுப் புதிய மொழிகளாக அவை மாறுமென அஞ்சிய காலத்தில் மொழிப்பற்றின் வழி தொல்காப்பியம் பிறந்தது. இலக்கண நூல்கள் மலர்ந்தன.

அதனைத் தொடர்ந்து தமிழனுக்கு ஆன்ம பலமளித்துத் தமிழ்ப்பண்பாட்டைக் காக்க வேண்டிய தேவை எழுந்த காலத்து இறைப்பற்று பக்கி இலக்கியங்களாகத் தமிழில் பரிணமித்து வானாள மட்டுமல்ல மண்ணாளவும் தமிழனுக்கு வழிகாட்டின. அந்தப் பக்தி இலக்கியங்கள் வழி வாழ்ந்தவர் அவை வளர உதவியர் வரலாறே பெரிய புராணம் என்னும் வரலாற்றுத்தன்மையுள்ள காவியமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலப்பற்று அறுக்க உதவுவதே ஆன்மீகம் என்பது தமிழர் எண்ணம். ஆனால் சேக்கிழார் தேசப்பற்று மொழிப்பற்று இறைபற்று என்னும் முப்பற்றுக் கொண்டு மும்மலம் அறுக்க வழிகாட்டிய நம்முன்னோர் கதையினைப் பெரி புராணத்தில் சொல்கின்றார்.

## புதிய சிந்தனை இலக்கிய ஆய்வில் தேவை

சுருக்கமாகச் சொன்னால் தமிழரின் தேசிய வளர்ச்சியில் தேச உருவாக்கத்தில் தேசப்பற்று மொழிப்பற்று இறைபற்று மூன்றும் இணைந்தே பயணித்தன எனலாம். இந்த வகையில் வளர்க்கப்பட்ட தமிழர் தேச உருவாக்கச் சிந்தனைகளைத் தெளிவாக அறிய விரும்புபவர்கள் தொல்காப்பியர் திருவள்ளுவர் இளங்கோ சீத்தலைச்சாத்தனார் காரைக்காலம்மையார் திருநாவுக்கரசுநாயனார் திருஞானசம்பந்தநாயனார் சுந்தரர் கம்பன் பெரியாழ்வார் ஆண்டாள் மாணிக்கவாசகர் திருமூலர் திருத்தக்கதேவர் சேக்கிழார் போன்ற பல தமிழ்ப்பெரும் புலவர்கள் படைப்புக்களை அந்தப் படைப்புக்களின் தேவைகைளைத் தன்மைகளைச் சமுதாய நிலைப்படுத்தி அரசியல் நிலைப்படுத்தி பொருளாதரர முறைமைகளின் பின்னணியில் அறிய வேண்டிய ஆராயவேண்டிய தேவையுள்ளது.

## புதைத்திருந்த வரலாற்றை வெளிக்கொணர்ந்த சேக்கிழரார்

இந்த வகையில் உள்ள தமிழ்ப்பெரும் புலவர்களில் இளங்கோவும் சேக்கிழாரும் தமிழரின் சமுக அரசியல் வரலாற்று ஆசிரியர்கள் என்ற உயர்நிலையை தமது நடுநிலைப்பட்ட ஆய்வுமுறையாலும் மக்கள் என்ற மையக்கருத்திற்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தாலும் பெறுகின்றனர். சுருக்கமாகச் சொன்னால் இளங்கோவும் சேக்கிழாரும் மக்களை ஒருங்கிணைத்தல் என்பதன் வழி தமிழ்த்தேசியத்தினை வளர்க்க சேக்கிழார் ஒருபடி மேலே போய் அந்த ஒருங்கிணைப்பில் பங்கேற்ற சாதாரண மக்கள் முதல் மன்னர்கள் வரையில் உள்ளோர் குறித்து முன்னோர் தமது பாடல்களில் புதைத்து வைத்திருந்த மறைத்து வைத்திருந்த வரலாற்றை வரலாற்றுணர்வுடன் பெரிய புராணத்தில் வெளிக்கொணர்ந்து தமிழர் தேச உருவாக்கத்தின் நோக்கைப் போக்கை வரலாற்றினூடாக உலகு உணரவைத்துள்ளார்.

## பாண்டியன் நின்ற சீர் நெடுமாறன் நெல்வேலி வென்றதன் முக்கியத்துவம்

சேக்கிழார் தமிழர் தேச உருவாக்கதிற்கு உதவிய ஆறு அரசர்கள் வாழ்வைப் பாடியுள்ளார். அவர்களுள் கி பி 649ல் மாறவர்மன் அரிகேசரி என்ற பெயரில் பட்டத்திற்கு வந்த பாண்டியன் மணிமுடிச் சோழனை வென்று அவர் மகளாகிய மங்கையர்க்கரசியை மணந்து கூன் பாண்டியன் எனவும் நின்றசீர் நெடுமாறன் எனவும் புகழ் கொண்ட நின்றசீர் நெடுமாறன் முக்கியத்துவம் பெறுகிறார்.

இதற்கு காரணம் சமண மதத்தவராக இருந்து தனது மனைவி மங்யைர்க்கரசியின் முயற்சியாலும் அமைச்சர் குலச்சிறையாரின் வழிகாட்டலாலும் திருஞானசம்பந்தரால் மீளவும் சைவராக மாறியதன் பின்னர் சாளுக்கிய அரசனான முதலாம் விக்கிரமாதித்தனுக்குமிடையே ( கி பி 658-681) நெல்வேலியில் நடந்த போரில் இவன் பெற்ற வெற்றி என்றே கூறலாம். முதலாம் விக்கிரமாதித்தன் பல்லவ மன்னன் பரமேசுவரவர்மனை ( கி பி 670-680) தோற்கடித்ததை அடுத்து சாளுக்கியர்களின் படை பாண்டியநாட்டை நோக்கித் திரும்பியது. இதில் பாண்டியர் தோற்றிருந்தால் விந்தியமலை முதல் கன்னியாக்குமரி வரை சளுக்கியப் பேரரசின் கைக்குள் வீழ்ந்து தமிழினமே சிதைவுற்றிருக்கும். இதனை தடுத்து நின்றசீர் நெடுமாறன் பெற்ற பெருவெற்றியே தமிழரின் தேசவுருவாக்கம் தொடர வழிசெய்தது.

அதனால்தான் இவருக்கு 170 ஆண்டுகளுக்குப் பின் வாழ்ந்த சுந்தரர் “நிறை கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற - நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்” என்று இவரைப் போற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேக்கிழாரின் வரலாற்றாசிரியத் தன்மைக்கு எடுத்துக்காட்டு

சேக்கிழார் இவர் புகழை ஆறு பாக்கள் கொண்டு பாடிப் பதிவாக்கியுள்ளார். இந்தப் பாக்களில் உள்ள உண்மைகள் சாளுக்கியப் பட்டயங்களுடனும் மற்றும் கல்வெட்டுக்களுடனும் சரிவரப் பொருந்துவது சேக்கிழாரின் வரலாறு எழுதும் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாகவும் காணப்படுகிறது. அதுமட்டுமல்ல தமிழர் தேசியத்தை தேசத்தைக் காத்த இந்த வெற்றிக்குக் காரணம் அரசி மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையாரும் அவர்களின் வேண்டுதலுக்கிரங்கிய திருஞானசம்பந்தரும் என்பதை சேக்கிழார் தமது பாடல்களில் தெளிவாக்கியுள்ளார்.

"தென்னவன் றுனுய்தற்கு வளவர் கோமான்
திருவுயிர்த் தந்தருளுஞ் செல்வப் பாண்டிமாதேவி"

என்றே மங்கையர்க்கரசியாரை திருஞான சம்பந்தர் புராணத்தில் அறிமுகம் செய்கையிலேயே சேக்கிழாரின் தேச உருவாக்க உள்ளம் புலனாகிறது.

## மனுநீதிச் சோழனை நினைவூட்டி மகேந்திர வர்மன் நிலை சொன்னார்

அவ்வாறே புகழ்ச் சோழ நாயானர் குறித்து சேக்கிழார் பாடியதாலேயே அம்மன்னன் பற்றிய வரலாற்றையே தமிழினம் தெரிந்து கொண்டது. இவர் குறித்த வரலாற்றுச் செய்திகள் இல்லாதுள்ளன. சிலப்பதிகாரத்தில் சில வரிகள் உள்ள மனுநீதிச் சோழனை திருவாரூரின் பெருமையைப் பாடுகையில் மீளவும் மக்கள் மயப்படுத்தி தமிழரின் நீதி வழுவா உயர் ஆட்சியின் பெருமை சொன்னவர் சேக்கிழார். மேலும் சேக்கிழார் பாடிய கழற்சிங்கனே நந்திக் கலம்பகத்தால் பாடப்பெற்ற மூன்றாம் நந்தி வர்மன் என்பது பின்னைய ஆய்வாளர் முடிபு.

அப்பரைத் துன்புறுத்திய பல்லவன் முதலாம் மகேந்திர வர்மன் ( கி பி 600 – 630) பின்னர் சமணத்தைக் கைவிட்டுச் சைவமாகி தன் பேராலே குணதரவீச்சுரம் கட்டி வழிபட்ட வரலாறு சேக்கிழார் வழியே தமிழருக்குத் தெரிந்தது.

## சேரமான் பெருமாளும் சேரத்தின் கடைசி அரசனும்

சேர மன்னர்களில் ஒரே ஒருவரைப் பற்றிச் சேக்கிழார் பாடினார். அவர் சேரமான் பெருமாள். சுந்தரருடன் சேர்ந்து திருத்தலங்கள் வலம் வந்த மன்னராவார். இவர் சுந்தரருடன் கைலை சென்றதால் இவர் ஆட்சி முடிவடைந்த கி பி 825 உடன் சேரநாட்டில் புதிய கொல்லம் ஆண்டுக் கணிப்பு தொடங்கியது என்பது சில ஆய்வாளர்கள் கருத்து.

ஆனால் இதனைப் பெரும்பாலான ஆய்வாளர்கள் ஏற்பதில்லை. கி பி 822ல் அரபிக்கடலில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் பழைய கொல்லம் கடலில் மூழ்கியது என்பதே பலரின் முடிபு. 3ம் சேரமான்பெருமாள் காலத்தில் கி பி 798 முதல் கி பி 834 வரை சேரநாட்டில் வணிகத் தொடர்பு கொண்ட முகம்மதிய கிறிஸ்தவ வணிகர்களின் பின்னணியில் புதிய கொல்லம் உருவானதென்பர். 3ம் சேரமான் பெருமாளிடம் உதவி பெற்ற மருவன் சபரிநோ என்னும் பாரசீக வணிகனே இன்றைய கொல்லத்தின் அன்றைய சிற்பி என்பர். 3ம் சேரமான் பெருமாள் காலத்துடன் சேரநாடு குறுநில மன்னராட்சியுள் சென்று பேரரசர்கள் ஆட்சி முடிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதித் தமிழ்க் குறுநில மன்னர் தமிழருக்குத் தந்த வரைவிலக்கணம்

இதன் பின்னராண்ட சேரநாட்டின் கடைசித் தமிழ்க் குறுநில மன்னனே புறப்பொருள் வெண்பா மாலை பாடிய ஐயனாரிதனார். புறப்பொருள் வெண்பா மாலையிலே கரந்தைத் திணையில் குடிநிலை கூறுகையில்தான் " கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி" எனத் தமிழர்கள் வரைபு பெற்றனர். குறிஞ்சி நிலத்துப் புதிய கற்கால வாழ்வு தோன்றி முல்லை நிலத்து ஊர் வாழ்வு மண்வாழ்வு தோன்றுவதற்கு முன்பே வாளொடு வீரத்தோடு தோன்றிய மூத்த குடி" என்று தமிழரின் தொன்மையைக் குறுநில மன்னன் ஐயனாரிதனார் பாடினார். இவ்வகையில் தமிழர் தேச உருவாக்கத்தில் குறுநில மன்னர்களின் பணியையும் குறித்துச் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. சேக்கிழார் இதனையும் செய்தார்.

## தமிழ் புரூட்டஸ் முத்தநாதனும் தமிழ் சீசர் மெய்ப்பொருள் நாயனரும்

சேக்கிழாரின் குறுநில மன்னர்கள் குறித்த விளக்கத்தில் சேக்ஸ்பியரின் நாடகத்தில் வரும் "நீயுமா புரூட்டஸ்" எனத் தன்னை புறமுதுகில் குத்திய புரூட்டஸிடம் சீசர் கேட்பது போன்ற வரலாறு ஒன்று இடம்பெற்றுள்ளது. மிலாடர் மரபைச் சேர்ந்த மெய்ப்பொருள் நாயனார் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவர். இவருடைய பகைவரான முத்தநாதன் திருநீறணிந்து எதிரே நின்ற பொழுது அவரைக் கொன்றிட முனைந்த தனது படைவீரனை "தத்தா! நமர்" என்று கூறி திருநீறணிந்ததினால் பகைவனையும் சிவனடியாராகக் கருத மெய்பொருள் நாயனார் தாக்க அனுமதிக்கவில்லை. ஆயினும் முத்தநாதன் இவரைத் தாக்க இவர் உயிரிழந்தார். இவரது இந்தத் திருநீற்றுப் பக்தியைப் புகழ்ந்து தஞ்சைப் பெரிய கோயிலில் இராசேந்திர சோழன் காலத்து மூன்றாவது ஆண்டில் இவருக்குத் திருவுருவம் நிறுவப்பட்டது. இத்தகைய குறுநிலமன்னர்கள் வரலாறுகள் தமிழரிடை நிலைக்கச் செய்தவர் சேக்கிழாரே.

## சுந்தரர் வளர்ப்புத் தந்தையும் சிறுத் தொண்டர் நாயனாரும்

திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட பல்லவச் சிற்றரச மரபினரான நரசிங்க முனையரையரே ஆதிசைவராகிய சுந்தரரை வளர்த்தவர் என்ற செய்தி கூட சேக்கிழார் குறுநில மன்னர்கள் குறித்துப் பாடியதன் மூலமே தமிழுலகு தெரிந்து கொண்டது.

குறுநில மன்னர்களை மட்டுமல்ல சிறுத்தொண்டர், மானக்கஞ்சாறர், ஏயர்கோன் கலிகாமர், கோட்புலியார் ஆதிய படைத்தலைவர்களையும் சேக்கிழார் பாடியதன் மூலமே அவர்களைக் குறித்த செய்திகளை தமிழுலகு அறிந்து கொண்டது. சிறுத்தொண்ட நாயனார் பல்லவ அரசனான பரமேசுவரவர்மனின் படைத்தலைவராக வாதாபி நகர் மீது நடாத்திய படைஎடுப்பு சாளுக்கியர் பல்லவ நாட்டைக் கைப்பற்றாது தடுத்தது என்னும் வரலாற்றுச் செய்தி பெரியபுராணம் வழி வரும் மற்றொரு வரலாற்றுச் செய்தியாகிறது.

## பிள்ளையார் வழிபாட்டின் தொன்மை வாதாபி கணபதியுடனா தொடங்கியது

இதனால் பரஞ்சோதியார் எனப்பட்ட சிறுத்தொண்டரால் கி பி 7ல் இப்போரில் கொண்டு வரப்பட்ட வாதாபி கணபதியே தமிழகத்தின் முதற் கணபதி திருவுருவம் என்ற கருத்தும் பலரிடை இன்று வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. ஆயினும் கி. பி. 4ம் நூற்றாண்டில் காரைக்குடிக்கும் திருப்பத்தூருக்கும் இடையில் உள்ள பிள்ளையார்பட்டியில் பாண்டியர்கள் அமைத்த கோயிலே பிள்ளையாரை மூலமூர்த்தியாகக் கொண்ட முதற் கோயில் என்பது சில ஆய்வாளர்களின் கருத்து.

## தேச உருசாக்கத்திற்கு உதவியோர் அனைவரும் பாடப்பட்டனர்

இவ்விதமாகப் பெரிய புராணம் மன்னர்கள் குறுநில மன்னர்கள் படைத்தலைவர்கள் அந்தணர்கள் வேளாளர் ஆதிசைவர் வணிகர் ஆகிய சமுகத்தின் உயர்நிலையினரை மட்டுமல்லாது ஆதிபத்த நாயனார் (ஜனையர்) ஆனாய நாயனார் (இடையர்) ஏனாதி நாயனார் ( சான்றார்) கண்ணப்ப நாயனார் ( வேட்டுவர்) கலிய நாயனார் ( செக்கார்) திருக்குறிப்பு தொண்ட நாயனார் ( ஏகாவியர்) திருநாளைப் போவார் நாயனார் ( புலையர்) திருநீலகண்ட நாயனார் (குயவர்) திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் (பாணர்) திருமூலநாயனார் ( இடையர்) நேச நாயனார் (சாலியர்) ஆதிய சமுகத்தால் சாதிய அடிப்படையில் புறந்தள்ளப்பட்ட சிவனடியார்களையும் பாடியமை பெரிய புராணத்தின் வழி தமிழர் தேச உருவாக்கதிற்கு உதவிய அனைவரையும் தமிழர் போற்றிடுவாரென்பதை உறுதி செய்தது.

## வேற்றுமையில் ஒற்றுமை அன்றே கண்டவர் தமிழர்

உடலோடு அழிவது சாதி உள்ளத்தில் ஆன்மாவில் யாவரும் ஒன்றே என்னும் சைவசித்தாந்த உயர்தத்துவத்தை இதன் வழி சேக்கிழரார் உறுதி செய்து ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலர் திருமந்திரத்தின் வழி பெரிய புராணத்தையும் மனிதசமத்துவத்தை மதிக்கும் காவியமாக்கினார். இச்செயற்பாடு தமிழர் தேசியம் தமிழர் தேசம் என்னும் கருதுகோள்களின் உருவாக்கத்தில் பெரிய புராணம் சமத்துவத் தன்மையை உறுதி செய்து நிற்பதை தெளிவாக்கியது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற இன்றைய தத்துவத்தை அன்றே தமிழர் கொண்டனர்.

## வீழ்ச்சியுற்ற தமிழருக்கு மீட்சி தந்த இலக்கியங்கள்

இவ்வாறாகப் பெரிய புராணத்தை கி பி 1150 அளவில் பாடிய சேக்கிழரார் தமிழர் தேச உருவாக்கத்தில் இறைகருவிகளாகச் செயலாற்றிய நாயன்மார் வரலாறுகளை தமிழர்கள் மத்தியில் தேனினிய காவியமாக்கினார். தான் பிறப்பதற்கு 248 ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த சுந்தரரால் அடையாளப்படுத்தப்பட்டு தான் பிறப்பதற்கு 99 ஆண்டுகளுக்கு முன் மறைந்த நம்பியாண்டார் நம்பியால் விரித்துரைக்கப்பட்ட நாயன்மார் வரலாற்றினூடாகச் சேக்கிழார் தம் காலத்தில் தமிழர் அனுபவித்துக் கொண்டிருந்த அரசியல் தோல்விகள் ஆட்சிவீழ்ச்சிகளை வெல்வதற்கான சக்தியை சேக்கிழார் மக்களுக்கு அளித்தார். அவ்வாறே அவர் வாழ்ந்து 200 ஆண்டுகளின் பின்னர் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழார் புராணத்தைப்பாடி இஸ்லாமிய ஆட்சியாளரின் தொல்லைகளாலும் ஒற்றுமையின்மையாலும் வைணவத்தின் முனைப்பாக்கத்தாலும் வீழ்ச்சியுற்றிருந்த தமிழருக்கு மீட்சியும் மாட்சியுமளித்தார். இவ்வாறாகத் தமிழர் வீழச்சிக் காலத்தில் ஆண்டவன் அருள்பெற்று முன்னவர் வீரம் கொண்டு எழுந்திட வைக்கும் தன்மை பெரியபுராணத்திற்கும் சேக்கிழார் புராணத்திற்கும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உய்வுக்கு வழி என்ன
## உளமுருகி வழிபடுவதுவே

நிலவுக்கு அடைக்கலம் அளித்து அதனை தன் சடாமுடியுள் தாங்கி நீர்மலி வேணியனாய் அனைத்து உயிர்க்கும் அடைக்கலம் தானே என விளங்கு முழு முதற் கடவுளைச் சிவனைத் தமிழர் மறந்திருந்த காலத்தில் சமணம் அரசோட்சி தமிழர் புகழ் மாட்சி மங்கியிருந்த நேரத்தில் வாழ்ந்தவர் சேக்கிழார். அலகில் சோதியன் எனத் தத்துவங்கள் விளக்க முற்படும் - அம்பலத்து ஆடுவானாக கலைகள் காட்டும் அவனது மலர்ச்சிலம்படியினை வாழ்த்தி வணங்குதல் மூலமே உய்வுண்டு என உரைத்தமை சேக்கிழாரின் ஞானத்தின் பகிர்வின் எல்லையாக அமைகிறது.

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## தஞ்சமளிப்பவன் அவனென
## தலை முடி அமர் நிலவு

பசு ஆன்மா பதி இறைவன் ஒன்றாயும் உடனாயும் வேறாயும் இருந்தாலும் அதனை உணர்தற்கரியதாய் இருத்தல் பசுத்தன்மையாக உள்ளது. இறைவனை உணராது தக்கனுக்கு அஞ்சி உலகெலாம் அலைந்து களைத்து இறுதியில் இறைவனை அடைந்த நிலாவுக்கும் உலகெலாம் பொங்கிப்பிரவாகமெடுக்க முயன்ற கங்கைக்கும் தன் சடாமுடியினையே தஞ்சமாகக் கொடுத்து அவற்றினை நிலைப்படுத்தியதால் நிலவுலாவிய நீர்மலி வேணியனாகத் திகழ்பவர் சிவன். உலகெலாம் அவனருளால் உய்யும் உண்மை சேக்கிழரரால் எடுத்த எடுப்பிலேயே மனதிருத்தப்படுகிறது.

## சாத்திரமானவனைத் தோத்தரித்து
## உய்திடலே வழி என்றார்

அந்த அலகில் ஒளிவடிவானவன் அண்டத்திற்கு அப்பால் உள்ள ஆகாயவெளியான அம்பரத்திலே ஆடுகின்ற சிவனின் மலர் போன்று புனிதமான காலடியின் சிலம்பசைந்து ஓமென்னும் சத்தப்பிரம்மம் எழுப்பி ஒளியுடன் உரசால் நாதவிந்தாகி உயிர்களையும் உலகையும் தோற்றுவித்து பாதுகாத்து ஒடுக்குகிறது. அந்த மலரடியை வாழ்த்தி வணங்குவோம் என்னும் சேக்கிழரார் சாத்திரமானவனை தோத்திரம் செய்கையிலே உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன் அடியார் உள்ளத்திலே உணரப்படுவான் என்பதைக் கூறி உலகென்னும் மாயையை ஆன்மா உணர்ந்து பாசத்தை விலக்கிப் பதியினை அடைய வழி சொல்கின்றார்.

## திருத்தொண்டர் புராணத்துப் பல பெயரில்
## பெரிய புராணமே நிலைத்த பெயராயிற்று

முதற்பாடலிலேயே விடுதலை வாழ்வுக்கு வழி மலரவன் மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குதலே என வழிகாட்டி நிற்கும் சேக்கிழார் அவ்வாறு வாழ்த்தி வணங்கி ஆன்மீக விடுதலை பெற்ற 63 சிவனடியார்களின் நாயன்மார்களின் நல்வாழ்க்கை வரலாற்றைத் திருத்தொண்டர் புராணமாக விளக்குகிறார். இதனால் இது மாக்கதை எனப் போற்றப்பட்டு சிவனுக்கே ஆளுடையரான சேக்கிழாரால் பாடப்பெற்றதால் ஆளுடை நம்பி ஸ்ரீபுராணம் என்றும் வழங்கி நிகரற்ற தனிச்சிறப்பால் பெரிய பராணம் என்றே சிறப்புற்று இன்று வரை அப்பெயரே வழக்குப்பெயராகப் பயின்று வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மக்களுக்குச் சம்பந்தர் தந்த பாட்டு

இறுதியாக சேக்கிழராரின் தேச உருவாக்க உணர்வில் சிறுதுளியை எடுத்து நோக்கிய பின்னணியில் பிள்ளை பாதி புராணம் பாதி என்னும் அளவுக்குப் பெரிய புராணத்தில் காவிய நாயகனான சுந்தரரை விட அதிக அளவில் பாடல் பெறுபவர் திருஞான சம்பந்தர்.

இவர் தன்னுடைய திருநல்லூர்ப் பெருமணத்தின் பின் சோதி புகுவதற்கு முன்பாடிய நமச்சிவாயத் திருப்பதிகத்தில் இலங்கை குறித்துப் பாடிய பாடலை நினைவு கூர்வது இன்றைய காலத்திற்கு அவசியமானதாக அமைகிறது.

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல் மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே

இலங்கையரன் இராவணன் மலையைப் பெயர்க்க எடுத்த முயற்சியை நிலத்தில் அழுத்திய தன் கால்விரலால் தடுத்த இறைவனே பின்னர் இராவணன் சாமகீதமிசைத்ததும் அவன் உய்யுமாறு பலநல் வரங்களை அளித்து நமச்சிவாய என்பாருக்கு உய்வுண்டு என்று காட்டினார் என்பது இதன் பொருள்.

## சம்பந்தர் மொழிக்கு அப்பரும் இணைமொழி

இதனை ஏற்பது போல் அப்பரும்

இலங்கை வேந்தன் இராவணன் சென்று தன்
விலங்கலை எடுக்க அவ்விரல் ஊன்றலும்
கலங்கிக் கச்சியேகம்பவோ என்றலும்
நலங்கொள் செலவளித்தான் எங்கள் நாதனே


எனப்பாமனார். இதன்வழி இலங்கை அரசனுக்கு அவன் முயற்சிக்குத் தடையேற்பட்ட நேரத்தில் அவன் இறைவனைச் சிவனைத் தோத்தரித்த பொழுது இறைவன் அவனுக்கு துன்பத்தை மட்டும் மாற்றவில்லை பெரும் பலம் அளிக்கும் பல வரங்களையும் வழங்கினான் என்பது உறுதியாகிறது.

## சம்பந்தர் அப்பர் சேக்கிழார் வழி சைவமாநாடு தரும் நற்செய்தி

இன்றும் எம்மக்கள் தாம் வாழ் தம் மண் மீட்க தன்னாட்சி பெற எடுத்த முயற்சிகள் இமாலய மலை போன்ற உலகசக்கதிகளால் நசுக்கப்பட்டு அவர்கள் இறைவனை நோக்கி இராவணன் செய்தது போலவே தம் நரம்பினால் உடலால் வீணாஇசை பாடி நிற்கின்றனர். தமிழ் ஞான சம்பந்தன் கூறியது போல் நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற அப்பர் அருளியது போல இறைவன் எம் மக்களின் துன்பங்களைத் துடைப்பது மட்டுமல்ல பல நல்வரங்களைப் பலங்களை நிச்சயமாக வழங்குவான் என்பதே இந்தச் சேக்கிழராரின் பெரிய புராணத்தை மையப்பொருளாகக் கொண்ட 2009ம் ஆண்டின் இலண்டன் சைவ மகாநாட்டின் வழி இறைவன் உலகுக்குக் கூறும் செய்தியாகட்டும்.

**வான்முகிழ் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க**
**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இங்கிலாந்தில் தமிழ்மொழி

இங்கிலாந்தில் எல்லா மொழிகைளயும் ஒரே வழிமுறையில் கற்கும் பாடத்திட்டம்

இங்கிலாந்து ஏனைய நாட்டு மொழிகள் பேசுவதை ஊக்கப்படுத்துவதில் பின்தங்கி இருந்திருக்கிறது. 2001-ம் ஆண்டின் ஐரோப்பிய மதிப்பீட்டின் பிரகாரம் 65 வீதமானோர் ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழிகைளப் பேசாது இருந்தார்கள்.

DEfS –ன் 'ரகாரம் லண்டனில் மட்டும் 300-க்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. அதில் குறைந்தது 20 மொழிகள் சமூகத்தில் 1000 மேம்பட்ட மக்கள் பேசுகிறார்கள்.


இதன் பிரகாரம் 2002 ஆண்டு அரசாங்கம் மொழி ஆய்வு ஒன்று செய்யப்பட்டு "எல்லோர்க்கும் மொழி மொழிக்கு வாழ்க்கை" Language for all,Language for life என்ற தலைப்பில் தமது ஆய்வை வெளியிட்டனர். இந்த ஆய்வின் பிரகாரம் மொழி கற்பித்தலில் ஊக்கம் காட்டி அம்மொழிகளுக்கு அடையாளம் காட்டப்பட்டது. மூன்று முக்கிய நோக்கங்கள் அமைக்கப்பட்டன.


- · மொழிகற்றுக் கொடுப்பதிலும் கற்பதிலும் சீர்திருத்தம்
- · அதை அடையாளம் காட்டி அங்கீகாரம் பெறும் வாய்ப்பு
- · மொழிகற்கும் ஆர்வத்தை ஊக்கப்படுத்துதல்

Asset Languages என்பது ஒரு மனமுவந்து அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் ஆகும். இது DfES ஆக கேம்பிறிஜ் அசெஸ்மென்ற் (Cambridge Assessment, OCR and RSA Examinations) பரீட்சை நிர்வாகத்தால் இது செயல்படுத்தப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம் மொழிகற்கும் மாணவர்களுக்கு ஒரு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கும் வழிமுறையை ஏற்படுத்துவதாகும். இதில் கற்கும் மாணவர்களுக்கு வயதுக் கட்டுப்பாடு (age) இல்லை. தரம் (Stage) தான் உண்டு. எந்தத் தரத்திலும் எந்த மாணவனும் நுழையலாம். ஒருவர் தமக்கு விரும்பிய துறையில் தமது மொழி அறிவை விருத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் பேசுதல், வாசித்தல், எழுதுதல், கேட்தல் ஆகிய நான்கு வழிவகையில் தம்மைத் தாமே தமக்கு விரும்பிய துறையில் விருத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த அசெற் மொழி மதிப்பீடுகள் அவரவர் தம்மால் இது செய்ய முடியும் இது செய்ய முடியாது எனத் தம்மைத் தாமே மதிப்பீடு செய்து கொள்ளலாம். இதன் பிரகாரம் அவர்கள் பேசுதல், வாசித்தல், எழுதுதல், கேட்தல் என்ற ஒவ்வொரு பகுதிக்குமான ஆற்றல் நிலையை ஆரம்பம் முதல் பட்டாதாரி வகுப்பு வரை தாமே இதன் வழி தமது முன்னேற்றத்தைக் கணித்து முன்னேற முடியும். இது ஒரு படிப்படியான தர உயர்வு எனப்படும் ஒருவர் தமக்கு விரும்பிய காலத்தில் விரும்பிய பகுதியில் தனது முன்னேற்றத்தை வளர்த்துக் கொண்டு அதற்கான பரீட்சையைத் தெரிவு செய்யும் வசதி இப்புதிய அணுகுமுறைத்திட்டத்தில் உண்டு. உதாரணமாக ஒருவர் தமிழ் மொழியில் பேச்சுத் திறனை மாத்திரம் வளர்க்க வேண்டுமானல் இத்திட்டத்தில் அதற்கு வழி அமைக்கப்பட்டுள்ளது. அவர் அதில் மட்டும் பரீட்சை எழுதி அதற்கான அங்கீகாரம் பெற்ற சான்றிதைழ பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டத்தில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பீட்டுத் தரங்கள்**




ஆரம்பத்தில் இருந்து தரங்கள் ('Break through' to 'Mastery') இலகுவாக அடையக்கூடிய வழிவகைகளில் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வழிவகை கற்கும் மாணவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்கிறது. அவர்களும் தமது தரத்தைத் தாமே கணிக்கக் கூடிய வகையில் இப்பாடத்திட்டம் அமைந்துள்ளது. இப்பாடத்திட்டம் தமிழ் மொழிக்கு மட்டும் என்று இல்லை. ஏனைய மொழிகளுக்கான பாடத்திட்டமும் இவ்வாறே தயாரிக்கப்பட்டுள்ளன. இதனால் எல்லா மொழிகளும் ஒரே தரத்தில் இருப்பதற்கு இப்பாடத்திட்டம் வழி வகுத்துள்ளது.
அதிலும் ஒவ்வொரு தரத்திலும் கற்கும் மாணவன் தன்னைத் தானே பரீட்ஷித்துக் கொள்ளும் வழிக்கிணங்க அந்தப் பாடத்தின் முடிவில் "இது என்னால் செய்ய முடியும்- Can do இது என்னால் செய்ய முடியாது - Can not do என்று கணிப்பு எடுக்கும் வழிக்கிணங்க அமைக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்ஷை இரண்டு தரமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் மதிப்பீடு வகுப்பறையில் அந்த ஆசிரியரால் நடத்தப்பெறுவது ஆகும். கற்கும் மாணவன் தனது திறைமச் சான்றுப் பத்திரத்தை கற்பிக்கும் ஆசிரியரிடமிருந்தே பெற்றுக் கொள்வார். அதன் பின்பு வெளி மதிப்பீட்டுப் பரீட்ஷையும் அதே வகுப்பைறயில் நடைபெறும். ஆனால் இப்பரீட்ஷை விடைத்தாள்கள் வெளியே இருக்கும் பரீட்ஷாதிகாரியால் திருத்தப்பட்டு அவர் ஒரு மதிப்பீட்டுப் பெறுமதிக்கான புள்ளியை அளிப்பார். இது தேசிய ரீதியாக அங்கீகாரம் பெற்ற பட்டமாகும். இந்த மதிப்பீட்டு முறையில் செயல்படும் பரீட்ஷை தற்போது இருக்கும் எதையும் மாற்றி அமைக்க மாட்டாது. ஆனால் இது உயர்வு படுத்திக் காட்டும். தரப்பட்ட அட்டவணையிலிருந்து ஒவ்வொருதரத்தைதயும் ஒப்பிட்டு அவை இருக்கும் தரங்களைக் காட்டுகிறது.

உண்மையில் இது கற்பிக்கும் வழிமுறைகளில் . புதிய அணுகு முறைகளைக் கையாண்டு மாணவர்களும் ஆசிரியர்களும் சுலபமாக கற்பதற்கு வழி வகுத்து உள்ளது. அசெற் மொழித் திட்டத்தின் கீழ் மாணவர்கள் வாசித்தல், பேசுதல், எழுதுதல், கேட்டல் ஆகிய ஆற்றல்களை தனித்தனியாகவோ அல்லது இவை நான்கும் சேர்ந்தவைகளாகவோ பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்திருக்கிறது.

**சமூக மொழிகள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசீய மொழிகள் (CiLT) நிலைய இணையத்தளத்தில் சமூக மொழி என்பது சமூகத்தில் இருக்கும் சிறுபான்மை இன மக்களால் அன்றாடம் பேசப்படும் மொழி சமூக மொழிகள் எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.




தற்போது அசெற் மொழிகள் ஸ்தாபனத்தால் எட்டு ஆசிய ஐரோப்பிய மொழிகள் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய ஆரம்ப உயர் பள்ளிகளில் தரப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கு மாணவர் தோற்றுவதற்கு ஏற்றதாக ஏற்பாடுகள் செய்யப்படிருக்கின்றன. அடுத்து இன்னும் பல ஆசிய ஐரோப்பிய அரேபிய மொழிகள் சேர்க்கப்பட இருக்கின்றன. செப்டம்பர் 2006-இல் இருந்து தமிழ் மொழியும் சேர்க்கப்பட்டு இருக்கிறது. அதற்கான அ□:கீகாரம் படிற□ புதிய பாடத்திட்டமும் உருவாகி உள்ளது. இதனால் தமிழ் மாணவர்கள் அங்கீகாரம் பெற்ற தமிழ் மொழிப் பரீட்சையை எழுதக் கூடிய வசதி இந்த ஆண்டில் இருந்து இங்கிலாந்து ஆரம்ப, உயர் பள்ளிகளில் உருவாகி உள்ளது. மேலும் பல மொழிகள் இனிமேற் காலங்களில் சேர்க்கப்பட இருக்கின்றன. மேலதிக தகவல்கைள www.assetlanguages.org.uk http:// www.assetlanguages.org.uk, என்ற இணையதளத்தில் இருந்து அறியலாம்.

சிரமதானமாக மொழிகள் கற்பிக்கும் மாலை நேர, வார இறுதிப்பள்ளிகளுக்காக பல வளங்களை பல பகுதிகளிலிருந்து இணைய தளத்தில் http://www.ourlanguages.org.uk உண்டாக்கி இருக்கிறார்கள். இச்சிரமதான பள்ளிகளில் கற்பிக்கும் மொழி ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டடையும் அளித்து உதவுகிறார்கள்.

**தமிழ் மொழி- UK-ல் ஏனைய தராதரங்கள்**

இங்கிலாந்தில் தமிழ் மொழிக்கு என ஏனைய பாடங்களுக்கு இருப்பது போல் GCSE பரீட்ஷை என்பது இதுவரை இல்லை. Edcxcel and Cambridge Exam board ஆகிய இரண்டும் பழைமை வாய்ந்த பரீட்ஷையை மட்டும் GCE O' level என்ற பெயரில் நடத்திக் கொண்டு வருகிறார்கள். இது முக்கியமாக வெளிநாட்டு மாணவர்களுக்கு என ஏற்படுத்தப்பட்டதாகும். இது இந்த நாட்டில் மொழி கற்பிக்கும் வழி முறையைப் பிரதி பலிக்கவில்லை. ஐஇ (UK) -யில் பேசுதல், வாசித்தல், எழுதுதல், கேட்டல் ஆகிய நான்கிற்கும் சம அளவில் இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. அத்தோடு பேச்சுத்திறனை வளர்க்க முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. http://www.assetlanguages.org.uk என்ற இணைய தளத்தில் விவரங்கைளப் பார்க்கலாம். அசற் மொழி ஸ்தாபனம்; (Asset Languages) தமிழ் மொழி கற்பிக்கும் வழிமுறைகளை ஐஇ (UK)-ல் விருத்தி ஆக்குவதற்கு முக்கியத்தும் கொடுத்து அது ஏனைய பொது மொழிகளின் அமைப்பிற்குள் அமைய வழி வகுக்கிறது. தமிழ் மொழிக்கு என ஒரு அடையாளத்தை உண்டாக்கி மாணவர்கள் தமிழ் மொழிக்கான பெறுபேறுகைள சிறு வயதிலிருந்தே (ஆரம்ப பள்ளியிலிருந்தே) ஆரம்பித்துப் படிப்படியாக உயர்தரத்திற்கு வர ஊக்கத்தை அளித்துதவ இது வழி வகுத்திருக்கிறது.

http://www.ourlanguages.org.uk

மேலதிக விவரங்களுக்கு

***சிவா பிள்ளை***

***Siva Pillai***

Goldsmiths College, University of London, UK

Chief Examiner Edexcel (Tamil Language)

Cambridge ASSET Examination (Principal Examiner & Assessor -Tamil Language)

Tel: 07956 476 706

email: pillaisiva@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் பெருமானின் பெரிய புராணத்தில் பெண்ணடியார்களின் சிறப்புகள்.



Mrs. P. Muraliharan
( SIVAN KOVIL - Teacher)

மகிமையில், அறநெறியில், தெய்வச் சேக்கிழாரின் பெரிய புராணம் உயர்ந்தது. இது அக இருளைப் போக்கி மனித மனங்களை மாற்றி அமைக்க கூடியது. மக்களை நல்வழிப்படுத்தி வாழ்வைக் வளம் பெறச் செய்கின்றது. சிவனடியார்கள் இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டுதான் சிவத்தொண்டும் புரிந்து வந்தனர். உலகிலே பெரியது எது என்றால் சிவனடியார்களின் பெருமைகள் தான் என்பது உண்மையானது.

சிவனடியார்கள் வரிசையிலே பெண்ணடியார்களின் சிவபத்தியும் அளவிட முடியாதது. இவர்களிலே காரைக்கால் அம்மையாரின் பத்தியும் அன்பும் மனங்களை நெகிழச் செய்யும். உருகும். பிறப்பும், இறப்பும் இல்லாத பரம்பொருளாகிய சிவனின் திருவாயால் அம்மையே என அழைத்த பெருமை இவரைச் சார்ந்தது.

அம்மையாரின் பிறந்த இடம் காரைக்கால். இது ஒரு துறைமுகப் பட்டினம். இங்கு வாழ்ந்த பெரும் வணிகத் தலைவராகிய தனதத்தருக்கும், துணைவியாருக்கும் கிடைத்த மாபெரும் பொக்கிஷம் தான் புனிதவதி என அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையார். இளமையிலேயே அளவிட முடியாத அன்பை சிவன்மேல் வைத்திருந்தார். இவர் மணப்பருவம் அடைந்தவுடன், நாகப்பட்டனத்தினுள்ள நீதிபதி என்பவருடைய மகனாகிய பரமத்தனுக்கு மணம் பேசி முடித்தனர். காரைக்காலிலேயே இல்லற வாழ்க்கையை இனிதாக வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு நாள் பரமதத்தன் வணிக சம்பந்தமாக வெளியூர் சென்ற போது அங்கு இரண்டு மாங்கனிகள் கிடைத்தன. அதை அவர் தன் காவலன் மூலமாக வீட்டிற்கு கொடுத்து விட்டார்.

சிறிது நேரம் சென்ற பின்பு, வீட்டின் வாசலிலே ஒரு சிவனடியார் மிகுந்த களைப்புடன் நிற்பதை புனிதவதி அம்மையார் கண்டார். அவரை அன்போடு அழைத்து உணவு பரிமாறினார். அப்போது ஒரு மாங்கனியையும் சேர்த்து வைத்து கொடுத்தருளினார். உணவருந்திய சிவனடியார் பசியாறி அம்மையை வாழ்த்திவிட்டு சென்றுவிட்டார்.

சிறிது நேரமாகிய பின்பு கணவன் மிகுந்த களைப்போடு வந்தார். அவர் நீராடி உணவருந்த இருந்தார். அம்மை உணவு பரிமாறும் போது மீதமுள்ள பழத்தையும் வைத்தார். அதையுண்ட கணவனுக்கு, அதன் சுவை இன்னொரு பழம் இருப்பதை நினைவூட்டியது. அம்மையைப் பார்த்து, மற்ற பழத்தையும் தருமாறு கேட்டான். இல்லாத பழத்திற்காக உள்ளே சென்ற அம்மையார், சிவனை நினைத்தவுடன் கையிலே ஒரு பழம் கிடைத்தது. அதைக்கொண்டு போய் கணவனிடம் கொடுத்தாளர். முதல் பழத்தை விட இது மிகவும் சுவையாக இருந்தது. இப்படி ஒரு சுவையை அவன் உண்டதே இல்லை. மனைவியைப் பார்த்து இது எப்படி உனக்கு கிடைத்தது? கற்புள்ள எந்தப் பெண்ணுக்குமே இந்த வினா உயிரையே போக்கிவிடும். அம்மை உண்மையை கூறினார். சிவனா? நம்பவில்லை, சரி சிவன் தந்தது என்றால் இதேபோல் இன்னொன்றும் பெற்றுத்தா எனக்கேட்டான். துன்பப்படும் எந்தக் குழந்தைக்கும் அருள் புரியாமல் விடுவானா அந்த இறைவன். அம்மையும், தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாகிய சிவனை வேண்டினார். உடனே கையில் பழம் கிடைத்தது. அதை அவள் கணவனிடம் கொடுத்த போது பழம் மாயமாய் மறைந்தது.

பரமத்தனுக்கு, தன் மனைவி மேல் மிகுந்த பத்தி ஏற்பட்டது. பயம் என்று கூட எண்ணலாம். அதனால் எதுவும் தெரிவிக்காமல், வெளியூர் சென்று பெரும் வணிகம் செய்து, அயலூரியே வேறொரு பெண்ணைத் திருமணம் புரிந்து, தன் மகளுக்கும் தன் முதல் மனைவி பெயரையே வைத்து வாழ்ந்து வந்தான். இல்லறத்தை துறவாத அம்மையார் இதனைக் கேள்வியுற்று, நேரில் சென்று பார்த்த போது தன் கணவனே தன்னை காலில் வீழ்ந்து வணங்கி, தன் சிவபக்தியை மற்றவர்க்கும் எடுத்துக் கூறிய பின்பு தான் இல்லறத்தை துறக்க எண்ணினார்.

சிவனை நாடினார். இறைவா எனக்கு இந்த உருவம் வேண்டாம். என் சதை வனப்பை அகற்றி எனக்கு எலும்புருவான பேய் உருவத்தை தா என வேண்டிப் பெற்றுக்கொண்டார். உற்றார், உறவினர்கள் கண்டு பயம் கொண்டு விலகினார்கள். இதைக் கண்ட அம்மை என் அப்பனாகிய ஈசன் என்னைப் பற்றி அறிந்தால் மட்டும் போதும் என்று துதி செய்தார். பின்பு சிவனின் கயிலாயத்தைப் பார்க்கும் ஆவலில் அதை நோக்கி நடக்கத் தொடங்கினார். நடந்து செல்கையில் திருக்கைலாயத்தை கண்டவுடன் தன் பாதங்கள் கூட சிவனின் இடத்தை மிதிக்க கூடாது என அஞ்சி தலையால் நடந்து சென்றார். இதைக்கண்ட தந்தைக்கு மனம் எப்படி இருக்கும்? பார்வதிக்கே ஆச்சரியம். இப்படி ஒரு பாசமா, அன்பா வார்த்தையே இல்லை. சிவனை கண்குளிர கண்டு ஆனந்தம் அடைகிறார். சிவனே "அம்மையே" என்று தன் திருவாயால் அழைத்தாரென்றால் அவரின் பாசம், அன்பு பக்தி அளவிட முடியாதல்லவா? இறைவன், ஈசன் கேட்கிறார் அம்மையே என்பால் வேண்டுவது யாது? உடனே அம்மை கூறுகிறார்.

> அப்பனே இறவாத இன்ப அன்பு வேண்டும், பிறவாமை வேண்டும், மீண்டும்
> பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாதிருக்க வேண்டும்.

தன் தந்தையாகிய ஈசனிடம் வரம் பெற்று அவரின் பாதங்களிலேயே தன் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். பெண்களின் மனங்களை நெகிழச் செய்த பெண்ணடியார்களின் வரிசையிலே காரைக்கால் அம்மையாரின் சிறப்பைப் படித்து வருவோர்க்கும் மனம் நல்வழியில் செல்லும் என்பது சத்திய உண்மையாகும்.

**இறவாத இன்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**
**அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்**

**பெரியபுராணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைகளும் அதிலடங்கிய பெரிய புராணமும்



நுணாவிலூர் கா. விசயரத்தினம்

**"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம் சுந்தரனும்**
**சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி**
**வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே**
**எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே."– சிவானந்தமாலை –**

சிவனடி மறவாச் சிவ சிந்தையரான மெய்யடியார்கள் பலர் காலத்துக்குக் காலம் இறைவன் மீது அருட்பாடல்கள் பலவற்றைப் பாடியிருக்கின்றனர். இவற்றுள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் தேவாரப் பதிகங்கள் தொடக்கம் சேக்கிழாரின் பெரிய புராணம் வரை பாடப்பட்ட பாடல்கள் பலவற்றின் தொகுப்பே பன்னிரு திருமுறைகள் ஆகும்.

திருமுறைகள் பிரணவத்தின் விரிவாய் அமைந்துள்ள. இவை ஓகார உயிரொலியில் "தோடுடைய செவியன்" என்று முதலாம் திருமுறையான சம்பந்தரின் தேவாரத்தில் தொடங்கி மகர ஒற்றில் **"உலகெலாம்"** என்று பன்னிரண்டாம் திருமுறையான சேக்கிழாரின் பெரிய புராணத்தில் முடிகின்ற சிறப்பினையும் காண்கின்றோம். இத் திருமுறைகள் தெய்விக சக்தி வாய்ந்தவைகளாய், ஓதுவோர் உள்ளங்களைத் தூய்மையாக்க வல்லவைகளாய், நோய் நொடி தீர்ப்பவைகளாய், நல்வினைகளைப் பெருக்குபவைகளாய், ஆலயங்களிலும் இல்லங்களிலும் தினமும் ஓதப்பட்டு வருகின்றன.

இத் திருமுறைகளை இறை வழிபாட்டிலும் சமய நிகழ்ச்சிகளிலும் ஓதுவது மரபாகும். சிவன் கோயில்களிலும் பஞ்ச தோத்திரங்களான தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் ஆகியவை வரிசைக் கிரமத்தில் ஓதப்படுவது வழக்கம். திருமுறைகளில் சிவனின் தத்துவம், அவனின் சீலம், திருவிளையாடல்கள், திருநீற்றின் பெருமை, திருவைந்தெழுத்தின் மகிமை, சித்தாந்தக் கருத்துக்கள் பலவும் பரந்து செறிந்து கிடக்கின்றன. **"அன்பே சிவம்"** என்னும் தத்துவம் கருப்பொருளாய் அமைந்து சிவநெறியில் ஒழுகுவோருக்கு வாழ்க்கையின் வழிகாட்டியாய் அமைந்துள்ளது.

திருமுறைகளில் தேவாரங்கள் கொண்ட முதல் ஏழு திருமுறைகளையும் அடங்கன் முறை என்று கூறுவர். இவற்றை அருளிச் செய்த சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் தேவார முதலிகள் என்று அழைக்கப்படுகின்றனர். திருமுறை எண்கள் 12 எனவும், திருமுறையின் பெயர்கள் 12 எனவும், பதிக எண்கள் 917 எனவும், பாடல் எண்கள் 18288 எனவும், திருமுறை ஆசிரியர் பெயர்கள் 27 எனவும் கீழ்க் காட்டிய அட்டவணையில் தரப்படுள்ளதைக் காண்கின்றோம்.

| திருமுறை எண் | திருமுறையின் பெயர் | பதிக எண் | பாடல் எண் | திருமுறை ஆசிரியர் பெயர் |
|---|---|---|---|---|
| 01. | தேவாரம் | 136 | | திருஞானசம்பந்த |
| 02. | தேவாரம் | 122 | 4158 | மூர்த்தி நாயனார் |
| 03. | தேவாரம் | 125 | | " " " |
| 04. | தேவாரம் | 113 | | திருநாவுக்கரச |
| 05. | தேவாரம் | 100 | 3066 | நாயனார் |
| 06. | தேவாரம் | 99 | | " " |
| 07. | தேவாரம் | 100 | 1026 | சுந்தரமூர்த்தி நாயனார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 08. | திருவாசகம் | 51 | 656 | மாணிக்க வாசக |
| | திருக்கோவையார் | - | 400 | சுவாமிகள் |
| 09. | திருவிசைப்பா | 28 | 288 | திருமாளிகைத் தேவர் |
| | | | | சேந்தனார் |
| | | | | கருவூர்த்தேவர் |
| | | | | நம்பிகாடநம்பி |
| | | | | கண்டராதித்தர் |
| | | | | வேணாட்டடிகள் |
| | | | | திருவாலியமுதனார் |
| | | | | புருடோத்தமநம்பி |
| | | | | சேதிராயர் |
| | திருப்பல்லாண்டு | 01 | 13 | சேந்தனார் |
| 10. | திருமந்திரம் | 01 | 3000 | திருமூலர் |
| 11. | 40 பிரபந்தம் | 40 | 1400 | திருவாலவாயுடையார் |
| | | | | காரைக்காலம்மையார் |
| | | | | ஐயடிகள் காடவர்கோன் |
| | | | | சேரமான் பெருமாள் |
| | | | | நக்கீரதேவர் |
| | | | | கபிலதேவர் |
| | | | | பரணதேவர் |
| | | | | இளம்பெருமானடிகள் |
| | | | | அதிராவடிகள் |
| | | | | பட்டினத்துப்பிள்ளையார் |
| | | | | நம்பியாண்டார் நம்பி |
| 12. | பெரியபுராணம் | 01 | 4281 | சேக்கிழார் சுவாமிகள் |
| 12 | 12 | 917 | 18288 | 27 |

திருமுறை தமிழர்களின் தனிச் சொத்தான நூலாகும். இதன் சொந்தக்காரன் சைவத் தமிழன். பன்னிரு திருமுறைகள் மக்களின் பெருவாழ்வுக்கு வழிகாட்டும் நூலாய் அமைந்துள்ளன. இவை சிந்தாந்த சைவர்களின் வேத நூலாகும். இவையே தமிழர்களின் வேதமுமாகும். இதனைச் சேக்கிழார் கூறும் பாங்கினையும் காண்போம்.

> "திருத் தோணிமிசை மேவினார்கள் தங்கள்
> திருமுன்பு தாழ்ந்து எழுந்து நின்று,
> தமிழ்வேதம் பாடினார்: தாளம் பெற்றார்."

இறைவனுக்குப் பெரும் தொண்டு செய்த அடியார்களின் இறை மாண்பினை விரித்துக் கூறும் பெருநூல் **"திருத்தொண்டர் புராணம்"** என்பதாகும். இதை அருளிச் செய்தவர் சேக்கிழார் சுவாமிகள். செயற்கரிய அற்புதங்கள் புரிந்த சிவடியார்களின் சரித்திரங் கூறும் நூலாதலின் இது **"பெரிய புராணம்"** என்று பிற்காலத்தில் வழங்கலாயிற்று. இதில் 63 தனி அடியார்கள் பற்றியும் ஒன்பது தொகை அடியார்கள் பற்றியும் கூறப்படுகின்றது. இறைவனார் **'உலகெல்லாம்'** என்று அடியெடுத்துக் கொடுக்க, இறைவன் அருள் திறத்தைக் காப்பியம் முழுவதும் இறை மணம் வீசச் செய்த சேக்கிழார், நூலை முடிக்கும் போதும் **'உலகெல்லாம்'** என முடித்தமை சிறப்பாகும்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் காணப்படும் தேவாரங்கள், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பிரபந்தங்கள், பெரிய புராணம் ஆகிய யாவும் சைவ இலக்கியங்களாகும். இவை அனைத்தும் சைவர்களாகிய எம்மை என்றும் ஆற்றுப்படுத்தி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# ஔவை தந்த அரு நிதியங்கள்

திருமதி. நா. யோகநாதன் (B. A. Hons)

தனது சமூகத்தைப் பற்றி, சக மனிதனின் நல்வாழ்வு பற்றி அதிகம் சிந்தித்த தமிழ்ச் சான்றோர்களில் வள்ளுவனை விடவும் உயர்ந்தவராக மதிக்கப்படவேண்டியவர் ஔவையார். இப்பெயரில் மூன்று பெண் புலவர்கள் நம் தமிழகத்தில் வாழ்ந்தனர் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

அவர்களுள் முதலாமவர் சங்க காலத்தவர், புறநானூறு, அகனூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நான்கு நூல்களிலும் இவர் பாடிய பாடல்கள் 59 உள்ளன. இவை சொற்செறிவும், பொருட்செறிவும் கொண்டவை. இவர் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய அதியமான் நெடுமான் அஞ்சி என்பவனிடம் பேரன்பு கொண்டவர். அவன் விரும்பியளித்த அமுதமாகிய நெல்லிக்கனியைப் பெற்று மகிழ்ந்து அவனைப் பல பாடல்கள் புகழ்ந்து பாடிப் பாராட்டி நீண்ட ஆயுளையும் பெற்றார். மலைச் சரிவில் கடும் முயற்சியுடன் பெற்ற நெல்லிக்கனி அது. அதனைப் பெறுவதற்கு அரிதென்றும் கருதாமல் அதனால் விளையும் பேற்றினையும் கூறாமல் நின் உள்ளத்தில் அடக்கிக் கொண்டு எமக்கு அளித்தனையே பெருமானே! பிறையணிந்த நீலமணிமிடற்று இறைவனைப் போல நீயும் நிலைபெற்று வாழ்வாயாக என்று வாழ்த்தினார் (புற நானூறு 91). அவன் பொருட்டு தொண்டைமானிடம் தூது சென்று நிகழ இருந்த போரைத் தடுத்தும் புகழ் கொண்டவர்.

இவரது பாடல்கள் எளிமை, சொற்செறிவு, பொருள் நுணுக்கம், உள்ளப்பிணிப்பு கொண்டவை. பெண்பாலாராயினும் தெய்வப் புலவர் என்னும் கீர்த்தியோடு வாழ்ந்தவர். அதியமானுடைய அரசவைப் புலவராக இருந்து எண்ணற்ற சுவைமிக்க அகத்துறை, புறத்துறைப் பாடல்களைப் பாடியுள்ளார். அதியமான் இறந்த நிலையில் அவர் உள்ளம் உருகிப் பாடிய சோகப் பாடல்கள் என்றும் நின்று நிலவும் அமர இலக்கியங்களாகும். அழகுக்கு அழகு செய்யும் ஆற்றல் பெற்றவர் ஔவையார். இப்பெண்பாற் புலவர் ஒரு பிறவிக் கவிஞர். பொன்னுக்கும் பொருளுக்கும் பெரும்பான்மையான புலவர்கள் பாடி வந்த போது கூழுக்காகப் பாடல்களை இவர் பாடியவராவார்.

12ம் நூற்றாண்டில் கம்பர் காலத்தில் வாழ்ந்தவர் இரண்டாவது ஔவையார். தனிப்பாடல் திரட்டில் இவர் பாடிய பாடல்கள் 71 உள்ளன. விநாயகர் அகவல், ஔவை குறள் என்பனவற்றையும் பாடியுள்ளார். இது தத்துவ ஞான நூல்களாகும். இதில் 310 குறட்பாக்கள் உள்ளன. இவரது தனிப்பாடல்கள் யாவும் தத்துவக் கருத்துக்கள் கொண்டவை. இங்கே சில பாடல்களை கவனத்தில் கொள்வோம்.

> "கற்றதுகைம் மண் அளவு கல்லாதது உலகளவென்று
> கற்ற கலைமடந்தை ஓதுகின்றாள் - மெத்த
> வெறும்பந் தயம்கூற வேண்டாம் புலவீர்
> எறும்பும்தன் கையால்எண் சாண்." என்றும்

> "மதியாதார் முற்றம் மதித்தொரு கால்சென்று
> மிதியாமை கோடி பெறும்.
> உண்ணீர் உண்ணீரஎன்று உபசரியார் தம்மனையில்
> உண்ணாமை கோடி பெறும்.
> கோடி கொடுத்தும் குடிபிறந்தார் தம்மொடு
> கூடுதல் கோடி பெறும்.
> கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
> கோடாமை கோடி பெறும்." என்றும்

இவரது தாயார் மரணத்தின் வாயிலில் நின்ற போது இவர் தாயாருக்குக் கூறியது:

> "இட்டமுடன் என்தலையில் இன்னபடி
> என்றெழுதி விட்ட சிவனும் செத்து விட்டானோ –
> முட்டமுட்டப் பஞ்சமே ஆனாலும் பாரம்
> அவனுக்கு அன்னாய் நெஞ்சமே அஞ்சாதே நீ" எனவும்

கருத்தாழம் கொண்டவையாக இவரது பாடல்கள் அமைந்துள்ளன.

ஔவையாரின் குறளும் திருவள்ளுவரின் குறளைப் போல் 3 வகையாகப் வகைபடுத்தப்பட்டுள்ளன. வீட்டு நெறிப்பால், திருவருட்பால், தன்பால் என 310 குறள்களை இவை கொண்டுள்ளன. அவற்றுள் ஒன்றை இங்கே உதாரணமாகப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாசற்ற கொள்கை மதிபோலத் தான்தோன்றும்
ஈசன் அருள் பெற்றக் கால்."

இதன் பொருள் யாதெனில் இறைவனுடைய திருவடியை ஒருவன் அடையப் பெற்றால் குற்றமற்ற தன்மையானது சந்திரனின் ஒளியைப் போலத் தோன்றும். அதாவது இறைவன் திருவருளைப் பெற்றால் நல்லுணர்வு பரிசுத்தமாயிருக்கும் என்பதாகும். இவ்வாறான கருத்தாழம் நிறைந்த குறட்பாக்களாக யாவும் காணப்படுகின்றன.

அடுத்து அதிவீர ராம பாண்டியர் வாழ்ந்த 16ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் மூன்றாவது ஔவையார். ஆத்திசூடி (108), கொன்றைவேந்தன் (91), மூதுரை (30), நல்வழி (40) ஆகிய நீதிச் செய்யுட்களை ஆக்கியுள்ளார். இவரை நீதிநூல் ஔவை என்றும் கூறுவர். மழலையர் மனதில் பதியும் வண்ணம் படைத்த ஆத்திசூடியிலிருந்து பெரியவர்களுக்கான நல்வழி வரை மனித வாழ்வின் பருவங்களுக்கேற்ப எளிய நடையில், சிக்கன சொற்களில் அவர் படைத்திட்ட நீதி நூல்களே அதற்கான சான்றுகள்.

ஆத்திசூடி பாலடைத் தமிழ் மழலையருக்கும் பாலும் மருந்தும் புகட்டுவதற்கென்றே வசதியான எளிய உருவில் உள்ளது. ஔவையாரின் ஆத்திசூடி மழலையரின் பாலாடை எனக் கொள்ளலாம். இரண்டு, மூன்று சொற்களில் மிகச்சிறிய அகத்திய வாக்கியத்தில் வைரக் கருத்துக்கள் இவருடையவை.

கெண்டியில் புகட்டும் கொன்றைவேந்தன். நான்கு ஐந்து சொற்களில் எளிய ஒருவரி வாக்கியத்தில், சிறார்களுக்கான நீதிக்கருத்துக்கள் கொண்டது. கொன்றை வேந்தன் கோப்பையில் பருகத் தெரியாத சிறார்கள் கெண்டியிலிருந்து தாமே உறிஞ்சிப் பருகுவர். ஔவை ஒரு சேய்க்குத் தாயானவளில்லை. ஒரு சமூகத்திற்கே தாயாகி பாட்டியுமானவளல்லவா? சிறார்களுக்கேற்ற வடிவத்தை தேர்ந்து தந்திருக்கின்றார்கள். இளஞ்சிறார்கள் மிக எளிதாகப் படிப்பதுடன் அதனைப் புரிந்து இள வயதில் மனனம் செய்து விட்டதனால் சிந்தனை, செயல் யாவற்றிலும் அவையே பிரதிபலிக்கும். மனிதனின் மனசாட்சியை இந்த நீதி வாக்கியங்கள் உருவாக்கி நிலை பெறவும் செய்கின்றது. "இன்னதைச் செய் அல்லது இன்னதைச் செய்யாதே அல்லது இப்படிச் செய்தால் நல்லது நன்மை, இப்படிச் செய்தால் தீமை" என்ற பாங்கில் அவை நீதியைப் புகட்டி நிற்கின்றன. ஆத்திசூடி விநாயகனைப் முதல் குறித்துப் பாடப்பட்டது. கொன்றைவேந்தனில் சிவன் விநாயகன் இரு பெயர்களுமே முதலிரு சொற்களாக அமைந்தவை.

மூதுரை: இதனை வாக்குண்டாம் என்றும் அழைப்பர். இது 30 பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் நான்கு வரிகளில் வாழ்வின் சாரத்தை ஏந்தி நிற்கும் கோப்பைகள். இளையோர் மனதில் அறத்தையும் அருளையும் பாத்தியிட்டு பயிராக்கும் கருத்துக் கிண்ணங்கள். காலத்தால் அழியாது சிரஞ்சீவியாக இருக்கும் பாடல்களும் ஆகும்.

நல்வழி: மனிதர்கள் இப்பூவுலகில் வாழும் முறைமையை ஈட்டலும் வகுத்தலும் ஈதலும் எப்படி என்பவற்றையும் வீடு பேற்றிற்கான புண்ணியம் சேர்த்தலையும் அற்புதமாகச் சொல்லும் கருத்துக் கருவூலம் சமயக்கருத்துக்கள் நிறைந்த நூல் இது. சிவபெருமானின் ஐந்தெழுத்தும் திருநீறும் இந்நூலில் சிறப்பிக்கப்பட்டு இருப்பதால் ஈசனிடம் இடையறா அன்பு பூண்டவர் ஔவையார் என்பது புலனாகின்றது. நல்வழிப்படுத்தும் 40 செய்யுட்களைக் கொண்டுள்ளது.

இவ்வாறாக ஔவைப் பாட்டியின் பொக்கிஷமான ஒவ்வொரு நூல்களைப் பார்வையிட்டோம். தமிழினம் ஈன்றெடுத்த நல்லிசைப் புலமை மெல்லியலாருள் தலைமணியாய் விளங்கும் பேறு பெற்றவர் ஔவையார். இவரின் பாடல்கள் சங்ககால புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய 59 பாடல்களும், கம்பர் காலத்தில் வாழ்ந்த ஔவையாரின் தனிப்பாடல்கள் 71 உம், ஔவைக் குறள் 310 உம், விநாயகர் அகவலும், அதி வீரராம பாண்டியர் காலத்தில் வாழ்ந்த ஔவையாரின் ஆத்திசூடி-108, கொன்றை வேந்தன்-91, மூதுரை-30, நல்வழி-40 படிக்க படிக்க புத்துணர்வையும் மானிட வாழ்க்கைக்குரித்தான கருத்துக்களையும் விளக்கிக் கூறும் பெரும் அருநிதியங்கள் ஆகும்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள சங்கத்தார் கோயிலில் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் "இறையனார்" என்னும் "திரிபுரம் எரித்த விரிசடைக்" கடவுளின் பக்கத்திலேயே அமர்ந்திருக்கும் பெருமையை ஔவையார் பெற்றிருக்கின்றார்.

**"மேன்மை கொள் சைவ நீதி. விளங்குக உலகமெல்லாம்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடும் மட்டக்களப்புத்தமிழகமும்

சைவப்புலவர் மண்டூர் எஸ் தில்லைநாதன்
மட்டக்களப்பு - இலங்கை

## சக்தி வழிபாட்டின் தொன்மை

ஆதிகால மக்கள் தமக்கு வேண்டிய உணவுப்பொருள்களை உதவிய தரையினைப் பெண்வடிவமாக உருவகித்து பூமாதேவி என வழிபட்டனர். இத்தரைப்பெண் வழிபாடானது காலவோட்டத்தில் சக்திவழிபாடாக வளர்கின்றது.

மொசப்பத்தேமியா, கிரேக்கம், எகிப்து முதலிய நாடுகளிலும் பூமாதேவியை வழிபட்டனர் என அறிய முடிகின்றது. சிவனின் சக்திகளாக குறிப்பிடப்படும் உமை, பார்வதி துர்க்கை முதலிய வழிபாடு முழுவதுக்கும் இத்தரைப்பெண் வழிபாடே மூலம் எனக்கூறப்படுகின்றது. உலகம் எவ்வளவு பழமையானதோ அதேயளவு பழமையானது சக்தி வழிபாடு. மார்க்கண்டேய புராணத்தில் தேவிமகாத்மியம் எழுநூறு சுலோகங்களைக் கொண்டுள்ளது. இது சப்தசதீ எனவும் வழங்கப்பெறும் வேதம் எப்படி அநாதியோ அப்படி சப்தசதீயும் அநாதியானது என புவனேஸ்வரி சங்கிதை குறிப்பிடுகிறது.

கில்லி, கௌசாம்பா ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்வில் கண்டெடுக்கப்பட்ட பெண் தெய்வப்பதுமைகள் சக்தியின் வழிபாட்டிற்கு சான்றாக அமைகின்றன. தென்னிந்திய புதைபொருள் ஆராய்ச்சியாளர்களான டாக்டர் ஜி.எஸ்.சர்மா, ஹைரபாத் பல்கலைப்பேராசிரியர் எச்.டி.சங்காரியா போன்றோரின் ஆதாரபூர்வமான கருத்துக்கள் சக்திவழிபாட்டின் தொன்மையை அறிந்து கொள்ள ஏதுவாகின்றன.

## சக்தியின் இயல்புகள்

பூமி சுழலவும், காற்று வீசவும், மழைபெய்யவும் நெருப்பு எரியவும் உலகு இயங்கவும் காரணமாயிருப்பது சக்தியே. இந்த சக்தியை பெண்ணாக உருவகித்துக்கூறுவது இந்துமத மரபு. சக்தியானது உயிர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து பக்குவான்மாக்களாகச்செய்து பேரின்பம் பெற அருள் செய்கின்றது. அவளைத்தாயாக, அம்மனாக வழிபடுவது சக்தி வழிபாடாகும்.

நமக்கு நல்லவை தருபவள் தாய். நமக்கு நல்லது எது என்பதை தாய் அறிவாள். தாயின் கருணைக்கு எல்லையே இல்லை. அம்மனை வழிபடுவது எல்லார்க்கும் எளிதே. சக்தியின் வடிவங்கள் தாய்மைக் கருணையை உணர்த்துவன. தாய்க்கருணையானது நன்னெறியுடையார்க்கு அறக்கருணையாகவும் தீயநெறியுடையார்க்கு மறக்கருணையாகவும் கிடைக்கப்பெறுகின்றது. தாயானவள் நற்குண இயல்புகளிலிருந்து தவறும் பிள்ளைகளைத் தண்டித்தும் நற்குண இயல்புகளையுடைய பிள்ளைகளை அணைத்தும் கருணை பாலிக்கின்றாள். கருணையின் செயற்பாடே நிக்கிரகம், அநுக்கிரகம் ஆகிய இரண்டிற்கும் காரணமாய் அமைகின்றன. கோரவடிவம் மறக்கருணையையும் சாந்தவடிவம் அறக்கருணையையும் புலப்படுத்துகின்றன. கோப காரியத்தில்காளியாகவும், போர்க்காரியத்தில் துர்க்கையாகவும், போக காரியத்தில் உமையாகவும், பிரபஞ்சத்தை நிலையான முறையில் இயக்கும் புருஷரூப காரியத்தில் விஷ்ணுவாகவும் தோன்றுகின்றாள். இவை சிவசக்தியின் நான்கு மூர்த்தங்களாகும்.

## சக்தியும் சிவனும்

சக்தி வேறு, சிவன் வேறு அல்ல. சக்தியும் சிவனும் பிரிக்கமுடியாதவை. இவை மணியும் ஒலியும் போல பிரியாதவை. இவற்றில் சொற்கள் இரண்டு. பொருள் ஒன்றே. சக்தி சிவத்துள் ஒடுக்கம். சிவமும் சக்தியும் கூடிய உமாமகேஸ்வரவடிவம் அம்மை அப்பரது நிலையாகும். கயிலை மலையில் இவ்வடிவத்தோடு காட்சியளிப்பதாக இந்து மத நூல்கள் கூறுகின்றன. இக்காட்சியில் சிவப்பும் பச்சையும் கலந்த திருமேனியுடையதாகவே நூல்கள் பேசுகின்றன. சிவப்புநிறம் சிவ வடிவம் பச்சைநிறம் சக்தி வடிவம். ஒரு நிகழ்ச்சியின் ஆரம்பமாக விளக்கேற்றல் நிகழ்வு நடைபெறுவது அம்மை அப்பனை வணங்குவதைக் குறிப்பதாகவே அறிஞர்கள் கூறுகின்றனர்.

## மட்டக்களப்புத் தமிழகத்தில் சக்தி வழிபாடு

மட்டக்களப்புத்தமிழக இந்து சமய மக்களின் சக்தி வழிபாடு அம்மன் வழிபாடு எனவும் அழைக்கப்படுகின்றது. இங்கு இவ்வழிபாடு முக்கிய இடத்தை வகிக்கின்றது. சக்தியை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சாக்த மதம் அவளே பிரமம், அவளே விஷ்ணு, அவளே உருத்திரன், அவளே சதாசிவன் எனக் கூறுகின்றது. அவளது வடிவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிவ சக்தியின் மூர்த்தங்களாகவே கொள்ளப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் பெண் தெய்வங்கள் யாவும் பராசக்தியின் வெவ்வேறு அம்சங்களே. கும்பத்து மாரியென்றும், கோவிந்தன் தங்கையென்றும், ஏழுபேரென்னுமம்மை ஏகபராசக்தியென்றும், ஆழிமால் தங்கையென்றும், ஆச்சி காமாட்சியென்றும், மதுரை மீனாட்சியென்றும், வல்லபத்திரகாளியென்றும், துர்க்கையபிராமியென்றும், சொல்லரியபேச்சியென்றும், கண்மணியில் வந்துதித்த கண்ணகைஅம்மனென்றும் பரமனின் அருளால் பாருலகில் உதித்தாள். எனவரும் மாரியம்மன் பற்றிய அகவற்பாவானது மட்டக்களப்புத் தமிழக சக்திவழிபாட்டின் உண்மைநிலையை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

மட்டக்களப்புத் தமிழகமானது சக்தி வழிபாட்டினை ஆழமாகப் பேணிவரும் பிரதேசமாகும். இங்கு மாரி, பேச்சி, காளி, கண்ணகை, திரௌபதை ஆகியவற்றை பெருந்தெய்வ வழிபாடாக வழிபடப்படுகின்றது. இந்துநாகரிகத்துறைசார் சிலரால் இவற்றை சிறு தெய்வங்களாக கொள்ளினும் மட்டக்களப்பு பிரதேச மக்களுக்கு இவைகள் பெருந்தெய்வங்களாகும். இறைவனை எந்த உருவத்திலும் வழிபடலாம் அந்த வழிபாட்டின் உறுதிக்கேற்ப அருள் வழங்கப்பெறுகின்றது. இதனை அநுபூதிமான்கள்

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

எனக்கூறுகின்றனர். இக்கருத்துக்கு மானுடவியலாளர் களும் உடன்பாடாய் உள்ளனர்.

## பத்ததி

மட்டக்களப்புத் தமிழக ஆலயங்களில் ஆகமமுறை சாராத வழிபாடே பெரும்பான்மையிடத்தினை வகிக்கின்றது. பிராமணர்கள் அல்லாத இந்துக்களால் செய்யப்படும் பத்ததிமுறையாலான வழிபாடே காணப்படுகின்றது. பத்ததியினை பத்தாசி எனவும் கூறுவர். கோயில் கிரியை செய்யும் முறைகளைக் கூறும் ஆவணம் பத்ததி என வழங்கப்படுகின்றது. ஆகம முறைசாராத பத்ததி, ஆகம முறை சார்ந்த பத்ததி என இரு வகை உள்ளன. இவற்றில் ஆகம முறைசாராத பத்ததி முறையே இங்கு பெரும்பாலும் நடைமுறையிலுள்ளது. பூசைகளைச் செய்பவரை பூசகர், கட்டாடியார், கப்புகனார் என வெவ்வேறு பெயர்களால் அழைக்கின்றனர்.

**பத்ததிகளில் பின்வரும் விடயங்கள் அடங்குகின்றன.**

1. வழிபாட்டிடம் அமைக்கும்முறை
2. மண்டபங்கள் காவல் செய்யும் முறை
3. அம்மனுக்கு அடுக்குச்சாத்தும் முறை
4. அம்மனை சிங்காசனத்தில் வைத்தலும் மடைப்பிரிவுகளும்
5. அம்மனுக்குஇணை,துணை, பரிவாரத் தெய்வங்களை நிறுத்தும் இடங்களும் முறைகளும்
6. அவைகளுக்கான மடைப்பிரிவுகளும் மந்திரங்களும், யந்திரங்களும்.
7. அம்மனை ஆராதிக்கும் முறைகள்
8. பூசை செய்பவர்களுக்குரிய அநுட்டான முறைகள்
9. கல்யாணச் சடங்கு செய்யும் முறை
10. பொங்கற் சடங்கு செய்யும் முறை
11. தீக்குளிப்பு, பள்ளயம், குளுத்தி முறைகள் (அவ்வவப் பத்ததிப்படி)
12. சடங்கு முடிக்கும் நிறைவுப்பூசை

மட்டக்களப்புத் தமிழக பத்ததிகள் அதனை ஆக்கியவர்களின் பெயர்களால் அழைக்கப்படாது எத்தெய்வத்தினைப் பற்றிக் கூறுகின்றதோ அத்தெய்வத்தின் பெயராலேயே அழைக்கப்படுகின்றன. அவை

காளியம்மன் பத்ததி
மாரியம்மன் பத்ததி
பேச்சியம்மன் பத்ததி
கண்ணகியம்மன் பத்ததி
கடலாச்சியம்மன் பத்ததி

என அழைக்கப் பெற்றுவருகின்றன. இப்பத்ததிகளில் உபபிரிவுகளும் உள்ளன. காளியம்மன் பத்ததியில் கும்பப்பத்ததி. அடைக்கலப்பத்ததி என இரு பிரிவுகள் உள்ளன. அவற்றுள் சிலபத்ததிகள் பத்திரகாளி பூசை, வடபத்திரகாளி பூசை, வீரமாகாளிபூசை, கங்கைக்காளி பூசை, சுடலைக்காளி பூசை, உருத்திரகாளி பூசை, நரசிங்ககாளி பூசை என பூசை விதிமுறைகள் கூறும் தொகுப்பாகவும், சில பத்ததிகள் தனித்தனி பிரிவுகளாகவும் உள்ளன. மாரியம்மன் பத்ததியில் கும்பப்பத்ததி, முத்துமாரிப்பத்ததி, பிரம்புப்பத்ததி, அமுதகலசபத்ததி என்னும் பிரிவுகளும், பேச்சியம்மன் பத்ததியில் பள்ளயப்பேச்சிப்பத்ததி, சுடலைப்பேச்சிப்பத்ததி, முதலிய பிரிவுகளும், கண்ணகியம்மன் பத்ததியில் கூனற்பத்ததி, தெய்வேந்திரன் பத்ததி, முனிபத்ததி, கொம்புப்பத்ததி முதலிய பிரிவுகளும், கடலாச்சியம்மன் பத்ததியில் கும்பப்பத்ததி, திரைசேர் மடந்தைப்பத்ததி முதலிய பிரிவுகளும் வழக்கிலுள்ளன.

திரௌபதை அம்மனின் பூசை முறைகள் பற்றிக் கூறுவதை பத்ததி எனக்கூறாது "விதிநூல்" எனக்கூறுவது வழக்காக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சடங்கு:**

மட்டக்களப்புத் தமிழகத்தில் நடைபெறும் அம்மன் ஆலயங்களின் திருவிழாக்களை சடங்கு என்னும் பெயரிலேயே அழைப்பது வழக்கம். ஆனால் திரௌபதை அம்மன் சடங்கு எனக் கூறாது தீப்பள்ளயம் என்று கூறப்படுகின்றது. அம்மன் சடங்கில் பறை மேளமும் குழல் ஒலியுமே முக்கியமாக ஒலிக்கப்படும். மேளதாளம் பெரும்பாலும் வகிப்பதில்லை

அம்மன் சடங்கில் விக்கிரகங்களும் அதற்குப்பதிலாக முகக்களைகள், கும்பங்கள் அடையாளப்பொருள்கள் என்பனவும் வைத்து வழிபடப்படுகின்றன. தொடக்க நாளை கதவுதிறத்தல் என அழைப்பர். மாரியம்மன், கண்ணகையம்மன், கடலாச்சியம்மன் ஆகிய ஆலயங்களின் சடங்குநிறைவு நாளை குளுத்தி எனவும் பேச்சியம்மன், திரௌபதையம்மன் ஆலய சடங்கு நிறைவுநாளை பள்ளயம் எனவும் காளியம்மன் ஆலய நிறைவு நாளை தீச்சடங்கு, பலிச்சடங்கு எனவும் கூறுவர்.

காளியம்மனுக்கு கும்பப்பத்ததி நடைமுறையுள்ள ஆலயங்களில் பள்ளயமும், அடைக்கலப்பத்ததி நடைமுறையுள்ள ஆலயங்களில் சோறும் கறியும் மாரியம்மனுக்கு சர்க்கரை அமுதும், பேச்சியம்மனுக்கு தண்ணீர்ச்சோறும் தயிரும், கண்ணகையம்மனுக்கு பழவர்க்கமும், திரௌபதைக்கு தீப்பள்ளயமும் நிறைவுப்பூசையாகும். பொதுவாக நிறைவுநாளிலே சகல ஆலயங்களிலும் பொங்கற் படையல் வைப்பது வழக்கமாகும்.

காளி, திரௌபதைஅம்மன் ஆலயங்களில் ஆடி, புரட்டாதி மாதங்களிலும் கண்ணகை அம்மன் ஆலயங்களில் வைகாசி மாதத்திலும் மாரி, பேச்சிஅம்மன் ஆலயங்களில் ஆனி, ஆடி, புரட்டாதி மாதங்களிலும், கடலாச்சி அம்மன் ஆலயங்களில் ஆனி, ஆடி மாதங்களிலும் சடங்குகள் நடைபெறுகின்றன. அம்மன் ஆலயங்களில் உடுக்கு ஒலி ஒலிக்கப்படும். காவியங்கள் பாடி இதனை ஒலிக்கச்செய்வர். அம்மனின் பக்திப்பாக்களா காவியம், அகவல், தோத்திரம் என்பன அமைந்துள்ளன. கண்ணகி அம்மன் ஆலயங்களில் கண்ணகி வழக்குரையும் படிக்கப்படும்.

அம்மன் வழிபாட்டிற்கு பாணக்கம் பிரதான நிவேதனமாக உள்ளது. இவைகள் அவ்வவ் ஆலயங்களின் வழிபாட்டுமுறைகளுக்கமைய நடைமுறையிலுள்ளன. பாணக்கம் இரண்டு வகைகளாக தயாரிக்கப்படுகின்றது. ஏலக்காய் முதலிய வாசனைத் திரவிய நீருடன் பால், தயிர், நெய், தேன், சர்க்கரை கலந்து வைக்கப்படுவது ஒரு வகை. பால், தயிர், நெய், தேன், சர்க்கரையுடன் பழவகைகளையும் சேர்த்து கரைத்து எடுப்பது மற்றோர் வகை. இவற்றில் இரண்டாவது வகையே இப்பகுதியில் பெரும்பாலும் கைக்கொள்ளப்படுகின்றது.

பெரும்பாலானவர்கள் வீடுகள் தோறும் மாரியம்மனை வணங்கி வருகின்றனர். ஆலயம் அமைத்து வழிபடும் தெய்வம் வீடுகளிலும் வழிபடப்படுகின்றது. இவ்வணக்கப் பண்பாடு திராவிடர் வணக்கமுறை சார்ந்ததாக உள்ளது.

மட்டக்களப்பில் பெரும்பாலான வீடுகளில் வருடமொருதடவை பகற்காலத்தில் மாரியம்மன் வழிபாடு நடைபெறுகின்றது. இம்மாரியம்மன் வழிபாட்டை சர்க்கரை அமுது என்பர். இது பூசகராலோ அல்லது வீட்டுறுப்பினராலோ செய்யப்படுகின்றது. இது ஆனிமாதம் தழுவியதாக இருந்தாலும் நோய்,துன்பம் ஏற்பட்டால் மாதம் பாராது சர்க்கரைஅமுது செய்து வழிபடும் மரபு காணப்படுகின்றது.

பூசையின்போது பருவமெய்துவதற்கு முற்பட்ட ஐந்து வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட ஐந்து பெண் குழந்தைகளையும் 5அல்லது 7 அல்லது 9 வயதுடைய ஆண்குழந்தை ஒன்றையும் தெரிந்தெடுத்து பெண்குழந்தைகளுக்கு சீலை அணிவித்து ஆண்குழந்தைக்கு வேட்டி, சால்வை அணிவித்து நிரையாக இருக்கச்செய்வர். பூசை முடிந்த பின்பு அவர்களுக்கு அவ்விடத்திலேயெ வாழையிலையில் அமுது படைத்து உண்ணக் கொடுப்பர்.

அவர்கள் உண்ணுமுன் அவர்களுக்குப்படைத்த உணவில் ஒரு கவளத்தை வீட்டின் தலைவன் அல்லது தலைவி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வர். (அதனை அவ்வீட்டார் அனைவரும் பின்னர் பகிர்ந்து உண்பர்) அமுது உண்ட குழந்தைகள் அறுவரையும் தூக்கி வாயிலில் கொணர்ந்து வந்து நிறுத்தி அவர்களிடமிருந்து "பூசை திருப்தி" என்றும் "நீங்கள் சந்தோசமாக இருப்பீர்கள்" என்றும் ஆசீர்வாதத்தைப் பெறுவர்.

சில வீடுகளில் வருடமொருமுறை பேச்சியம்மனுக்கும் பள்ளயப்பூசை நடைபெறுகின்றது.

இதில் பெண்கள் ஐவரும் சிற்சக்தி, பராசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி என்னும் பஞ்ச சக்திகளாகவும் ஆண்குழந்தையை சிவனாகவும் கொள்ளப்படுவர். சில இடங்களில் சிற்சக்தியே மாரியம்மனாகவும் ஏனைய இளம் பெண்களை கன்னிமாராகவும் ஆண்பிள்ளையை காத்தவராயனாகவும் கொள்ளப்படுகின்றது. கன்னிமார் ஐந்தாக அல்லது ஏழாக வைக்கப்படுவர்.

மட்டக்களப்புத்தமிழகத்தில் சக்திவழிபாடு இங்ஙனம் ஆலயத்திலும் வீட்டிலும் நடைபெற்று வருகின்றது.

---------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் இருக்கிறார்

சாவகச்சேரியூர் டாக்டர் க. கதிர்காமநாதன்

## இறைவன்

A knowledge of the existancy of the something we cannot penetrate – mystery even mixed with fear – in this sense I am deeply religious – Albert Einstien.

ஒரு உணர்வு, எம்மால் அறிய முடியாத புதிர்-பயமும் கலந்த சக்தி இருக்கிறது அதை நினைக்கும் போது நான் தெய்வ நம்பிக்கை உடையவனாகின்றேன். இவ்வாறு "Person of The Century" என Time Magazine, 1999 இதழில் கருதப்பட்டவரும் - Einstein Is Synonymous with Genius, எனும் இந்த ஜேர்மன் நோபல் பரிசு பெற்றவருமான மகாமேதை கூறியிருக்கிறார்.

இதையேதான் நாமும் இறைவன் மின்சாரம் போல், காற்றுப்போல், காணாமல் ஆனால் உணர்ந்து, சில சமயம் பயந்தும் பீதி கொண்டிருக்கிறோம்.

அப்பர் பெருமான் என்பர்
விறகில் தீயினன் பாலில் பசு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்.

விறகை உரச நெருப்பு மறைந்திருந்து வருவதுபோல் பாலிலிருந்து நெய் பெறுவது போல், கடவுள் காண முடியாமல் இருக்கிறார் என்றார்.

எமது யோகர் சுவாமிகள் எளிதாக,
"எள்ளுக்குள் எண்ணெய் எடுப்பதுபோல், எங்குமிருப்பவர் எங்கள் இறைவனடி குதம்பாய்"
என மொழிந்தார்.

இந்துக்கள் இறைவனை பிள்ளையார், சிவன், விஷ்ணு, முருகன், அம்பிகை என வணங்குகின்றனர். கிறிஸ்தவர்கள் யேசுவாகவும், மரியா மாதாவாகவும், முஸ்லிம்கள் அல்லாவாகவும் வழிபடுகின்றனர். ஆனால் இறைவன் ஒருவனே, ஒருவன் வீட்டில் மனைவிக்கு கணவனாகவும், பிள்ளைக்கு தகப்பனாகவும், பெற்றோருக்கு மகனாகவும், நண்பருக்கு நண்பனாகவும், ஆசிரியருக்கு மாணாக்கனாகவும் இருப்பது போன்றுதான்.

## இறைவனை நம்பியோர்

கவிஞர் கண்ணதாசன் சிறந்த நாத்திகனாக கடவுள் இல்லை என கோஷமிட்டு வாதித்தவர். பின்னர் கடவுளை நம்பி, 'அர்த்தமுள்ள இந்து மதம்' என்ற தகவலை தொடர்ந்து எழுதினார். எமது உள்ளம் கவர்ந்த குடியிருந்த கோயிலாக விளங்கிய எம். ஜி. ஆர் (M.G.R) யார் சென்றாலும் 'ஆண்டவனே' என அழைத்து ஆசனத்திற்கு முன் போசனம் கொடுத்தவர். சின்னப்பா தேவர் ஆண்டவன் முருகன் என்பார். கே.பி. சுந்தராம்பாள் அவர்கள் மூச்சுக்கு மூச்சாக முருகா, முருகா வென கூறிக் கொண்டிருந்தவர்.

வாரியார் சுவாமிகளை அறியாதவர் இல்லை. சிறந்த முருக பக்தர். தனது 88 வயதில், 07-11-1993 அன்று இங்கிலாந்தில் சமயப்பணி செய்து விட்டு இந்தியா திரும்பினார். திருத்தணி முருகன் ஆலயத்திற்கு மேலாக விமானம் பறக்கும் போது இவரது ஆவியும் பிரிந்தது. இறைவனை நம்பியோர் வாழ்வில் இத்தகைய பல சம்பவங்களை எங்கும் காணலாம்.

மகாத்மா காந்தி, தாயின் சொற்கேட்டு சிறுவயது முதல் கடவுள் பக்தி கொண்டவர். ஒரு சமயம் நோயுற்ற போது உடனிருந்தோர் மருத்துவரை அழைக்க முனைந்தனர். அதற்கு காந்தி அவர்கள் "என்னை காப்பாற்ற ஒரு மருத்துவர் இருக்கிறார் அவர்தான் இறைவன்" என பகர்ந்தார். இது மட்டுமன்றி அந்த மாந்தருள் மாணிக்கமாகவும், மனிதரிடம் தெய்வமாகியவர், சுடுபட்டு இறக்கும்போது கூறிய இறுதிவாசகம் "ராம், ராம்" என்ற இறைவனின் நாமமே.

## இறைவனால் என்ன நன்மை?

February 23, 2009, Time Magazine, 'Faith and Healing' என்ற தலையங்கத்தில் இப்படி கூறுகிறது. A Growing Body of Scientific Evidence Suggests, Faith may bring us Health" விஞ்ஞான பூர்வமான ஆதாரங்கள் இறைவன் மீதிருக்கும் நம்பிக்கை நமக்கு நல்ல ஆரோக்கியம், தேகநிலை கொடுக்கிறது என்பதே. மேலும் கடவுளை நம்பியோர் நம்பாதவர்களிலும் பார்க்க நீடுழிவாழ்வதாகவும் அறிவித்தது. இது மட்டுமல்லாமல் இறைவனை நம்பி, நெஞ்சில் இருத்தி, நினைந்து நினைந்து, வருந்தி, விரதம் பிடிக்கும் போது – உணவுண்ணாமல் இருக்கும்போது உடம்பிலுள்ள நச்சுத்தன்மை (Toxins) அகல்வதாக கூறியது. இப்படி ஏற்படுவதால் உடல் உறுதிபெற்று திடகாத்திரமாகிறது.

மதிப்புக்குரிய இராஜமனோகரன் தம்பதி I. B. C வானொலியில் "வருமுன் காப்போன்" என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சியை நடத்தினர். இதில் இறைவனை நம்பிய, பற்றுக் கொண்ட தீராத வியாதிக்காரர், நாள்களை எண்ணும் புற்று நோயாளிகள், பாரிச வியாதிக்காரர், படுத்த படுக்கை வியாதிக்காரர், நம்பாதவர்களிலும் பார்க்க – ஆனந்தமாகவும், பொறுமையாகவும், நோயின் உபாதை, வலியை தாங்கும் சக்தி உடையவராக இருப்பதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்ததாக கூறினார்.

பகவான் ரமணரிஷி 1950 ஆண்டு இறந்தார். இவர் பாலயோகியாய் திருவண்ணாமலை அருணாலே சுவரர் கோயிலின் அடித்தளத்தில்-ஒரு குகையில்-உலகை மறந்து தியானத்தில் இருந்தார். அப்போது தேன் பூச்சிகள் யாவும் இவரை கடித்தன. வலி, உபாதை ஒன்றும் இவருக்குத் தெரியவில்லை. கடைசியில் காணும் போது சீழ்படிந்த புண்களோடு காணப்பட்டார். இதே போன்று தான் கள்வனாக, வேடுவனாகவிருந்த வால்மீகி முனிவரும் தன்மீது கறையான் புற்றுக்கள் வளர்ந்தது தெரியாமல் தியானத்தில் இருந்தார்.

Depression – மனக்கவலை, தளர்ச்சி, மனஉளைச்சல், மனத்தாழ்வுசிக்கல் - இது புலம் பெயர்ந்தோரிடம் அதிகம் காணப்படுகிறது. இதைக்கூட இறைவன் மாற்றுவார் இதை வள்ளுவப் பெருந்தகை

"தனக்குவமை இல்லாதான் தான் சேர்ந்தாற்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது" என்றார்.
தனக்கு நிகர் கூறமுடியாத இறைவனை நாடுபவர்கள் மனக்கவலை மாறும், மற்றோருக்கு மாற்றல் கடினம்.

## வினைப்பயன்

"இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு"
இறைபணி இருவினையாகிய நல்வினை, தீவினை இரண்டையுமே இல்லாமல் செய்பவர். இதையே யசோதர காவியம்.
இருள்புரி வினைசேரா இறைவனது அறத்தை எய்தின எனக் கூறியது.

## இறைவனை கண்டதுண்டா?

இதே கேள்வியை சுவாமி விவேகானந்தரும் கேட்டார். அதற்கு இராமகிருஷ்ண பரமஹம்சர் "ஆம் என கூறி, பின்னர் 'காளி' யை காணும் படி செய்தார். விவேகானந்தர் போன்ற ஆன்மிக நிலையுடையவனால் கடவுளை காணலாம் என்பது குறிப்பிடத்தக்கது. இதையே அப்பர் பெருமான்,

'உறவு கோல் நட்டு உணர்வுகயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே' என்றார்.

## இறைவன் எங்கே இருக்கிறார்?

'கரந்தெங்கும் பரந்துள்ளான்' – எங்குமிருக்கிறார் எங்கு எங்கு பார்த்தாலும் எல் உயிர்க்கும் அவ் உயிராய் அங்கு அங்கு இருப்பது நீயன்றோ பராபரமே"-என்பர் தாயுமானவர்
பசுவின் உடம்பில் பால் இருக்கும். ஆனால் அதை மடியின் முலைக்காம்பில் தான் பெற முடியும். இதே போன்று எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை கோயிலில் தான் தரிசிக்கலாம்.

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திருந்து சிவபெருமானென்று
பாடுமின், பாடிப்பணிமின், பணிந்தபின்
கூடிய நெஞ்சத்து கோயிலாய்க் கொள்வனே

ஆலயம் தோறும் சென்று வழிபடுபவர் உள்ளத்தை தருமாத்திரம் இறைவன் தனக்கு ஆலயமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கிறார்.

## இறைவனின் பெருமை

யோகர் சுவாமி அவர்களின் இறைபக்தி யாவரும் அறிந்ததே. சோல்பரி பிரபு (Lord Salisbury) அவர்கள் தான் இலங்கையின் கடைசி ஆங்கில தேசாதிபதி. இவரது படித்த மகன்ளு, சுவாமிகளின் பெருமையை நன்குணந்தவர், தீட்சைபெற்று, தனது ஆங்கில பெயரை மாற்றி சாந்த சுவாமியானார். இது மாத்திரமின்றி சுவாமி போல் வேட்டித் துண்டுடன் திரிந்து கோயில் வழிபாடு செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டிதை சிவதமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கடவுளை நம்பி, தெல்லிப்பளை துர்க்காதேவி கோயிலின் அறங்காவலராகவிருந்தவர். கலசம் ஆசிரியர் கூறியவாறு, "கதியற்ற பிள்ளைகளுக்கும் பதியற்ற பெண்களுக்கும், நிதியற்ற ஏழைகளுக்கும், தாயாக, தந்தையாக குருவாக, விளங்கி தெய்வமாகி விட்டவர்."

மருத்துவம் ஒரு மகத்தான, மேன்மையான உன்னத புனித தொழிலாகும். இதை ஆசிய மக்கள் மாத்திரமன்றி உலக வாழ் மக்களே உயர்வாக கருதுகின்றார். இறைவனின் பெருமையை நன்குணர்ந்த முனிவர்கள், மதகுருமார்கள், பாதிரிமார்கள் யாவரும் மருத்துவத்தை ஆதி காலம் தொடக்கம் சேவையாக செய்து வருகின்றனர். இது இறைவனின் பெருமையை கட்டியங்கூறி பறைசாற்றுகிறதல்லவா?

Mr. Barak Hussain Obama - இவரை Time Magazine – Person of the Year 2008 என தேர்ந்தெடுத்தது. இவர் இறை பக்தியில்லாமல் பாட்டியுடன் வளர்ந்தவர். 1961 ஆண்டு பிறந்தாலும் 1988 ஆண்டில் தான் ஞானஸ்நானம் பெற்றார். இதன் பின்னர் 20 வருட காலம் ஒரு ஊக்கமுள்ள பணியாற்றினார். முதல் கறுப்பு அமெரிக்க ஜனாதிபதியாக உயர்ச்சி பெற்றதற்கு இவரின் இறைபக்தியும் ஒரு காரணமாகும்.

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Scientific Reality of the Concept of Energy in the Metaphysics of Saivaism

**S. Santharooban S. Sivakumar and T. Sathaananthan**
Eastern University, Sri Lanka, Batticaloa, Sri Lanka

We all know about energy but how many of us are able to elaborate and correctly define the exact meaning of energy? Oxford dictionary define that the energy is that the ability to put effort and enthusiasm into an activity, work etc. Is this correct? Is the energy only effort or work? If so, do lifeless forms, which have no effort at all, not contain energy? But all the matter has energy. So that, energy is not merely effort or work; but it is something beyond that. It is obvious that it will end absurd and critical if one try to define exactly what energy is.

All the action and inaction in the universe are being continued under the patronage of AN energy and in other words one and only energy holds everything within its palm and control over them. Though science reports several energies such as kinetic energy, static energy, mechanical energy, electric energy etc., then how can one say that there is only ONE energy controlling over all you might argue. As you all know, the energies teach us that there are no pluralism in energy rather there are different forms of energy. Hence, there is no two or more energies but one (concept of *Advaitham*).

Where is this energy? In fact, there is no place without energy and there is nothing without it. The almighty energy is pervaded everywhere from tiny (and non visble) atom to entire universe. Sub atomic particles are held together in an atom by columbic force and planets and stars are bounded among them by gravitational pull, all of which are the actions of energy.

The concept of energy with some scientific understanding is seeded everywhere in the holy text if Saivaism and one can scrutinize several of scientific aspects by logical argument in par with the philosophy of Saivaism. Readers are requested at this juncture not to be confused that the writers are trying to elaborate the worship of *Shakthi*. However, this article, in fact, deals with the basic understanding of the concept of God and his creation in the universe. In order to elaborate the scientific background of the metaphysical philosophy of Saivaism, this article took some evidences from the Thiruvasakam, holy hymns, portrayed by Saint Manikavasakar.

1. Hail, foot of Him, the One, the Not-One, and the King! (ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க!)

The saint explains through the above verse that as a whole, energy can be considered as one (ஏகன்) but if one could see all manifestation (not only the forms energy indicated in science but also all living and non living things in the world) of the energy, then it

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

will be plural (அநேகன்). You might think that though this verse describes the God Siva, how it can be correlated with the concept of energy. But the God Siva is the supreme power which we consider as energy (This will be discussed later in this article).

2. Stone, man................ In every species born (கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்...............எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்)

The saint besought that he had got tired through several births from grass to Devas, Devine beings and beg freedom from continuous birth. The saint indicated a list of birth and once he got birth as stone. Though we sing these hymns, most of us do not agree the birth as stone and argue that stone is lifeless thing but the term related to living things, so how is it possible to get birth stone? But it is possible. Our gross body is constituted of bulk mass of atoms. The same energy, which resides within the atom of a non - living entity, is residing within the atom and molecules of our own gross body. In proof of the existence of energy in lifeless forms, it is better to logically understand the idea of great scientist Albert Einstein, who explained that object which is in rest also has energy as same as the object of moving and that energy can be measured by the equation of $E= M_0C^2$. Moreover, it is universally agreeable in metaphysics that our body is constituted by two - physical body and astral body. The astral body / soul is also a cosmic form of energy. Therefore, taking birth as stone or as a non - living entity is possible in the universe.

3. Hard to be eyed! Subtle understanding, none can scrutinize! (நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே)

Science made several discoveries and postulated several theories and / or laws regarding properties of energy but none of the discovery has shown the energy could be seen through the naked eye or through the instrumental eye, to that extent the energy is subtle and it can only be felt, as Saint remarked that "none can scrutinize" it.

4. Holy! Who come not, nor go, nor mingling live! (போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே)
5. 'Thou dwell in all the elements, and yet
   'Thou go not, nor come (பூதங்கள் தோறும் நின்றாயெனின் அல்லால் போக்கிலன் வரவிலன்)

The low of conservation of energy (according to science) states that the "energy can neither be created nor destroyed." Though the energy (the supreme being/God) is present in every elements / Bhodas (there are five Bhodas / elements according Hindu philosophy - Earth, Water, Fire, Gas and Ether), there is no destruction as well as creation for the energy itself and is being as it is. These facts were given by Saint in the above verses, where 'coming' and 'going' means that the creation / birth and destruction / death respectively.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Of all that in this world diverse pronounced as truth (மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறே வந்தறிவாம்).
7. See, mingling with all beings, each one He cherishes! (மருவியெப்பொருளும் வளர்ப்போன் காண்க).

The low of conservation of energy states that another phenomenon that energy can be transformed from one form into another. Though this law deals only with the form of energy indicated in science, this is applicable as a whole. If you think logically every element in the world is being created from the energy. In the changing world, all entities are the product of energy, which is changeless but changes its forms merely. These facts are embedded in the above verses.

Until now we discussed the concept of energy within the hymns of Thiruvasakam. As a whole, we got an idea, from the above science and spiritual concepts, that every matter is the embodiment of the almighty energy and in other words, energy is omnipresent and pervaded everywhere, everything is not the forms of energy but energy resides within them merely to carry out some or more functions. In order to get clear from this doubt, we should understand the theory of "Big bang".

Big bang theory deals with creation of universe. According to this theory, at the very beginning (when time and space were zero), there were highly energetic photons (energy is often considered to be as sacs in electromagnetic rays in science. These sacs are called photons), having tremendously high temperature with very high density. Due to this extreme condition, two photons combine together and form a pair of particles - a particle of normal matter and a particle of antimatter. When an antimatter particle meets its matching particle of normal matter, two particles annihilate each other and convert their masses into energy. Thus the early universe was a dynamic soup of energy flickering from the photons into particles and back again.

While all these went on, due to expansion, universe cooled and the number of normal matter particles increased continuously. These particles are the sub-atomic particles and later atoms were formed due to the combing of several sub atomic particle. In such manner, all the entities of this universe were created. It is sure that the above explanation of theory of Big bang will clear the doubts and is the proof for that all things in the world are the embodiment of energy.

With the understanding of the Big bang theory, it is obvious that the energy was the first (from which universe was created), being as every matter at present and at the destruction of matter, again energy is emitted. Thus Saint Manikavasakar has sung the following verse in Thiruvasakam.

8. Before all being First, the Midst< the Last art Thou (முந்திய முதல் நடு இறுதியுமானாய்).

So that, energy is being as it is without any in the changing universe.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From the point of these ideas, we just move to Sivagnana Sidhiyar (சிவஞான சித்தியார்). which is a holly writing, dealing the metaphysical aspects of Saiva Sithanantham explains the philosophy regarding the ultimate cause of the inanimate universe. But Saiva Sithantham neglects that idea and explained that the atoms cannot be the ultimate cause because they are themselves composed of other things (sub atomic particle such as proton, neutron and electron) and can be destroyed or can be unstable. An unstable thing cannot be an ultimate cause to universe. Further, it postulates that the ultimate cause must be a non-composite thing, which our philosophy calls *Maya*. According to this, the universe was created by God / Saiva from the Mayai. According to Saiva Sithantham, Mayai is a universal non-sensible matter, which can absorb anything into it from this universe. The appearance and disappearance of matter is the function of Mayai, which can also be universal power that is responsible for all that is connected with matter. Further, from the Mayai God / Siva gives Thanu (Body), Karanam (Sense organs which perceives outer world), Puvanam (World) and Bhogam (enjoyment of bliss as well as pain) to atma / soul. According to these explanations, the Mayai itself etymologically equal to the **energy**. These evidences show how oriental philosophy is in advance in the field of both science and spiritualism. In Saivaisam, there are more phenomena which even the greatest scientists are still unable to explain.

